Vol.5, Issue 7 | Annual Subscription ₹480

@NewsRotary
/RotaryNewsIndia


டிசம்பர் 2022

# ரோட்டரி நியூஸ்

இந்தியா
www.rotarynewsonline.org



Rotary


IMAGINE WHAT'S NEXT
MELBOURNE, AUSTRALIA | 27-31 MAY 2023
Register today at convention.rotary.org
#Rotary23
Rotary
MELBOURNE 2023

# உள்ளே


12
RID 3141 உதவியால் மும்பை பசுமை மண்டலத்தை பெற்றது

18
ரோட்டரி கோல்ஃப் சாம்பியன்ஷிப் போட்டியில் வரலாறு படைத்த இந்தியா

24
உறுப்பு தானத்தை ஊக்குவிக்கும் பாதையில்

28
ஊனமுற்ற குழந்தைகளை படகு சவாரி மூலம் உபசரித்த RC ஆலப்பி

32
விவசாயிகளுடைய வருவாயை மேம்படுத்தும் சூரிய ஒளி உலர்த்திகள்

34
மும்பை பள்ளி குழந்தைகளுக்கு மதிய உணவு

36
சிம்லாவில் புற்று நோயாளிகளுக்கான ரோட்டரி விடுதி

38
பார்வையற்றோருக்கான மறுவாழ்வு பட்டறை

44
இயற்கையை கொண்டாடும் புகைப்படங்கள்

52
மெஹ்ராகாவ்ன் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள்

54
குழந்தைகள் புற்று நோய்க்கு எதிரான RC பெங்களூர் சவுத்வெஸ்டின் போராட்டம்

60
சோகமான பாடல்களின் பேரரசன் முகேஷ்

72
ரோட்டரி கல்பெட்டா வழங்கிய டயாலிசிஸ் இயந்திரங்கள்

76
வலிக்கும் தோள்களுக்கு சிகிச்சை




## காஷ்மீரில் ரோட்டரியின் மிகச் சிறந்த பணி

*நவம்பர் இதழின் அட்டைப் படத்தில் குப்வாரா ராணுவக் குட்வில் பள்ளியில் காஷ்மீரக் குழந்தைகளுடைய புகைப்படம் மிகச் சிறப்பாக இருந்தது. காஷ்மீரில் நலத் திட்டங்களை நடத்தும் RID 3141 தலைவர்கள், உறுப்பினர்களுக்குப் பாராட்டுகள். நம் அமைப்பை முன்னெடுத்துச்செல்லவும், அதற்கு இன்னும் சிறந்த எதிர்காலத்தை அமைக்கவும் நம் ரோட்டரி கதைகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும்படி ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் நம்மைக் கேட்டுக்கொண்டுள்ளார். இது தான் சிறந்த சேவை என்னும் ஆசிரியர் குறிப்பு, ஈத் பண்டிகையின் போது மும்பையைச் சேர்ந்த ரோட்டரியன்கள் குப்வாரா மக்களுக்கு எப்படி உதவினார்கள் என்று விளக்குகிறது.*

*இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதில் ரோட்டரி ஆற்றிய மிகப் பெரிய பங்கை RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி விளக்குகிறார். நம் TRF பங்களிப்புகளில் தாராள மனத்துடன் இருக்கும்படி RI இயக்குநர் A S வெங்கடேஷ் நம்மைக் கேட்டுக்கொண்டுள்ளார். மும்பை ரோட்டரியன்கள் இந்திய ராணுவத்தின் கோரிக்கையின்படி காஷ்மீர் கிராம மக்களுக்கு உதவுகிறார்கள் என்ற அட்டைப் படக் கட்டுரை படிக்கக் கூடிய தாகவும் ஆர்வத்தைத் தூண்டுவ தாகவும் இருந்தது. இந்தியா TRFஐக் கொண்டாடுகிறது. ரோட்டரிக்கு நிதி*




*சேர்த்த பேடாவும், பம்பரமும், முகப்பேர் அரசுப் பள்ளி, 80,000 பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் மிகப் பெரிய திட்டம், சம்பல்பூரி சேலையின் மந்திர நெசவு, கேரளச் சமையல் முறையின் சுவை மற்றும் மணங்கள், மகிழ்ச்சியான மனம், சுறுசுறுப்பான உடல் அதிசயங்களைச் செய்யலாம் போன்ற கட்டுரைகள் படிக்க மிகச் சிறப்பாக இருந்தன.*

ஃபிலிப் முலப்பொனெ M T
RC திருவனந்தபுரம்
சப்அர்பன் — D 3211

*ஏற்பான அட்டைப் படம் DGE அருண் பார்கவா, RID 3141, மற்றும் அவருடைய குழுவினர் காஷ்மீர் கிராம மக்களை அணுகி அவர்களுடைய வாழ்க்கைகளை, வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்ட கதையைப் படிக்கவேண்டும் என்று என்னைத் தூண்டியது. அத்துடன், கிராமத்து மக்களுடைய நிலையைப்பற்றி ரோட்டரியன் களுக்குச் சொன்ன பிரிகேடியர் வினோத் நெகி அவர்கள் ஆற்றிய பங்கும் குறிப்பிடவேண்டியது. RID 3141 குழு குப்வாரா கிராமத்தில் தங்கள் நலத் திட்டங்களைத் தொடரத் தீர்மானித்துள்ள உண்மையை எண்ணி நாம் பெருமை கொள்ளலாம்.*

PPKM ஷமிகுமார்
RC வேலூர் சவுத் — D 3231

*இந்திய ராணுவ அலுவலர் கர்னல் பிரணய் பவார் DGE அருண் பார்கவா அவர்களை அணுகி, குப்வாரா-வில் LoCக்கு அருகில் வாழும் கிராமத்து மக்களுடைய வாழ்க்கைகளை மேம்படுத்தக் கோரியபோது, மும்பையைச் சேர்ந்த 16 ரோட்டரியன்கள் காஷ்மீருக்குப் பறந்தார்கள், பணியைத் தொடங்கினார்கள். மலையில் வாழும் மக்களுக்கு நலப் பராமரிப்பு முதன்மையானது என்பதால், மும்பை சங்கங்கள் இரண்டு இரு சக்கர மருத்துவ உதவி வண்டிகளைக் கொடையளித்தன.*

*RC மும்பை பர்லேஷ்வர் பகர்வால்ஸ் என்ற நாடோடி இனத்தவர்களுடைய*

நவம்பர் இதழில் PRIP ராஜேந்திர சாபூ ஆப்பிரிக்க நாடு களில் அவருடைய மருத்துவப் பணிகளைப்பற்றி எழுதிய கட்டுரையைப் படித்து நான் உணர்ச்சிவயப்பட்டேன். கடினமான சூழல்களில் தன்னார்வலராகப் பணியாற்றியுள்ள சாபூ அனைத்து ரோட்டரியன்களுக்கும் ஊக்கம் அளிக்கிறார். காஷ்மீர் பள்ளத்தாக்கின் தொலைதூரப் பகுதி ஒன்றில் இந்திய ராணுவத்துடன் இணைந்து மும்பை ரோட்டரியன்கள் செய்துள்ள பணி பாராட்டவேண்டியது. TRF துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் பரத் பாண்ட்யா அவர்களுக்குப் பாராட்டுகள்.

ஓம்பிரகாஷ் ரவத், RC நாசிக் — D 3030

இது தான் சிறந்த சேவை என்கிற ஆசிரியர் பக்கம், கேரளச் சமையல் முறையின் சுவை மற்றும் மணங்களைப்பற்றிய அவருடைய கட்டுரையும் சிறப்பாக இருந்தது.

டேனியல் சிட்டிலப்பிள்ளி, RC கலூர் — D 3201

80,000 பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் மிகப் பெரிய திட்டம் கட்டுரை ஒரு சிறந்த திட்டம், ஒரு மிக நல்ல முன்னெடுப்பைப்பற்றிப் பேசுகிறது.

தின்கர் ஆ பலாஸ்கர், RC புணே சஹவாஸ் — D3131

இத்தனைப் பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் முன்னெடுப்பு உண்மையில் சிறப்பான, தாக்கம் உள்ள திட்டம் ஆகும். Rtn ஜிக்னேஷ், RC பிப்வெவாடி புணே-க்கு இதயம் நிறைந்த பாராட்டுகள்.

ஷைலேஷ் நந்துர்கர்
RC புணே வெஸ்ட்எண்ட் — D 3131

*வாழ்க்கையை மேம்படுத்த அவர்களுக்கு 300 சூரிய ஒளி விளக்குகளை அனுப்பியிருப்பது பெருமையான செய்தி. ரோட்டரி உலகை இணைப்பது உண்மைதான்.*

N *ஜகதீசன்,* RC *எலுரு* — D 3020

*ரோட்டரி பற்றிய மக்களுடைய பார்வைகள் நம் அமைப்பை வருங் காலத்தில் வடிவமைக்கும் என்று* RI *தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் சரியாகச் சொல்கிறார். அதனால், ரோட்டரியன்கள் தங்கள் ரோட்டரி கணங்களைச் சமூகத்தின் பிற மக்களிடம் பகிர்ந்துகொள்ளும்படி அவர் கேட்டுக்கொண்டுள்ளார். மிகச் சிறந்த சேவை என்ற தலைப்பில் ஆசிரியர் ரஷீதா பகத் எழுதியுள்ள கட்டுரை உக்ரைன் போர் உள்பட உலகில் நடைபெற்றுவரும் வன்முறையின்மீது வெளிச்சத்தைத் திருப்புகிறது.* RID 3141 *ரோட்டரியன்கள் காஷ்மீரில் செய்துவரும் பணி பாராட்டவேண்டியது. அவர்கள் பெண்களுக்கு ஆற்றல் அளித்தல், நலப் பராமரிப்பு, கல்வி தொடர்பான திட்டங்களை நடத்துகிறார்கள், இவை அந்த மக்களுடைய வாழ்வாதாரங்களை நன்கு மேம்படுத்தும்.*

S *முனியாண்டி,* RC *திண்டுக்கல் ஃபோர்ட்* — D 3000

*அட்டைப் படக் கட்டுரை உண்மையில் நெகிழவைத்தது, நெஞ்சைத் தொட்டது. அரசியல் குழப்பம், தீவிர வன்முறையில் சிக்கியுள்ள காஷ்மீர் நாட்டின் பிற பகுதியிலிருந்து இந்த வகை ஆதரவைப் பெறுகிறது என்ற உண்மையே பாராட்டவேண்டியது, புகழ் பெறச் செய்யவேண்டியது. பள்ளத்தாக்கில் பாதுகாப்புப் படையினர், மக்களிடையில் நல்ல உறவை உண்டாக்குவதை ஆதரிக்கவேண்டியது இன்றைய தேவை, ரோட்டரி ஒரு நல்ல தொடக்கத்தைச் செய்வதற்கான வளமான நிலத்தை உருவாக்கியுள்ளது. அக்கறையை வளர்க்கிற, கட்டுப்பாடுகள் அற்ற அன்பை வழங்குகிற தோழமை இதயங்கள், மனங்களில் மாற்றத்தைக் கொண்டுவரலாம். துரதிருஷ்டவசமாக, காஷ்மீர் போன்ற ஒரு பகுதியில் அமைதி, நட்புச் சூழல் நெடுநாள் நீடிக்காமல் இருக்கலாம் என்று மக்கள் அஞ்சுகிறார்கள். அதனால், ரோட்டரி போன்ற அமைப்புகள் நம் வீரர்கள் மற்றும் உள்ளூர் மக்களுக்கு நடுவில் உள்ள இடைவெளியை, நம்பிக்கைக் குறைபாட்டை நிரப்ப உறுதியான பணியில் ஈடுபடுவது மிகச் சிறந்தது. நல்லிணக்கம், அமைதியை முன்னிறுத்த நம் கடமையைச் செய்வோம்.*

*டாக்டர் ஜெயசேகரன்* V P
RC *பையனூர்* — D 3204

DGE *பார்கவா, அவருடைய குழுவினர் காஷ்மீரில் செய்துள்ள பணிக்கு அவர்களுக்குப் பாராட்டுகள்.*

P V *விஜயலட்சுமி*
RC *திருச்சிராப்பள்ளி சக்தி* — D 3000


## ரோட்டரி நியூஸில் விளம்பரம் செய்யுங்கள்



**Tariff**

| | |
|---|---|
| Back cover | Rs.1,00,000 |
| Inner front cover | Rs.60,000 |
| Inner back cover | Rs.60,000 |
| Inside fullpage | Rs.30,000 |
| Half page | Rs.20,000 |

**Specification**

17 x 23 cm Full page
17 x 11 cm Half page

**Advertisements in colour only.**

Rotary News Trust
044-42145666
rotarynews@rosaonline.org


**திருத்தம்:** கடந்த அக்டோபர் இதழில் வெளியான "ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு" என்னும் பாகத்தில் குறித்ததை ஒட்டி Zone 4 ரோட்டரி ஒருங்கிணைப்பாளர் குர்ஜித் சிங் சிகோன் ஒரு கருத்தை முன்னிலைப்படுத்துகிறார். சென்ற ஆண்டு RID 3080, 86 உறுப்பினர்களை நிகர ஆதாயம் பெற்றுள்ளது. மேலும் இந்த வருடம் இது வரை 101 புதிய ரொட்டேரியன்களை சேர்த்துள்ளது இந்த மாவட்டம் உறுப்பினர் சேர்க்கையில் நிகர ஆதாயம் கண்டுள்ளது.

**அட்டைப்படம்:** RC *பாம்பே* (RID 3141) *மும்பையில் நிறுவியுள்ள கலினா பல்லுயிர் பூங்காவில் ஒரு காட்சி.*

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் **rushbhagat@gmail.com** அல்லது **rotarynewsmagazine@gmail.com** என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். **WHATSAPP** செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் **www.rotarynewsonline.org** என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

# இந்தப் பன்னாட்டுப் பிரச்சனையை நம்பிக்கையுடன் எதிர்த்து மோதுவோம்

லுசாகா, ஜாம்பியா-வில் ரோட்டரி தலைவர்கள் குழு ஒன்றுடன் நான் அமர்ந்திருந்தேன். அவர்களிடம் ஒரு கேள்வி கேட்டேன், ''உங்களில் எத்தனை பேருக்கு மலேரியா வந்துள்ளது?'' அந்த அறையிலிருந்த எல்லாரும் கை தூக்கினார்கள். வளரும் நாடுகள் பலவற்றில் மரணம் மற்றும் நோய்க்கான முதன்மைக் காரணங்களில் ஒன்றான இந்த நோய் தங்களுக்கு வந்த முதல் அனுபவம், இரண்டாவது அனுபவம் அல்லது மூன்றாவது அனுபவத்தை அவர்கள் எனக்குச் சொல்லத் தொடங்கினார்கள்.

அவர்கள் அதிர்ஷ்டசாலிகள். அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை கிடைக்கிறது, உயிர் காக்கும் மருந்துகள் கிடைக்கின்றன. ஆனால், கிராமப்புற ஜாம்பியாவில் வசிக்கும் மக்களுடைய கதை முற்றிலும் வேறுபட்டது.

ஒரு சிறு கிராமத்தில், டிமோதி, அவருடைய இளம் மகன் நாதன் ஆகியோருடன் ஒரு மர இருக்கையில் நான் அமர்கிறேன். ஒரு கேமராக் குழு எங்கள் உரையாடலைப் படம் பிடிக்கிறது. நாதனுக்கு மலேரியா அடையாளங்கள் தோன்றிய நேரத்தைப்பற்றி அவர் எனக்குச் சொல்கிறார். அவர் நாதனை அருகிலுள்ள சமூக நல ஊழியர் ஒருவருடைய வீட்டுக்கு அழைத்துவருகிறார், அங்கு நாதனுக்கு விரைவாக மருந்துகள் வழங்கப்படுகின்றன, அநேகமாக அதுதான் நாதனுடைய உயிரைக் காத்தது.

சில ஆண்டுகளுக்குமுன் தன்னுடைய இன்னொரு மகனுக்கு இதே நோய் வந்ததைப்பற்றி டிமோதி என்னிடம் அமைதியாகச் சொல்கிறார். அப்போது அவர் 5 மைல் தொலைவில் உள்ள மருந்தகம் ஒன்றுக்குத் தன் மகனை அழைத்துச் செல்லவேண்டியிருந்தது. மகனைத் தன்னுடைய முதுகில் சுமந்தபடி அவர் வண்டியை ஓட்டினார், தன்னுடைய மகனுடைய கால்கள் குளிர்ந்துபோவதையும், அதன் பிறகு, மகனின் சிறு உடல் தளர்வதையும் அவரால் உணர இயன்றது. ஒருவழியாக அவர் மருந்தகத்தை அடைந்தார், உதவி கேட்டுக் கதறினார். ஆனால், அதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. கேமரா நிற்கிறது, நாங்கள் அமைதியாக அமர்ந்திருக்கிறோம். அவர் அழத் தொடங்குகிறார், நான் அவரை இறுக்கமாகப் பிடித்துக்கொள்கிறேன். ''என் மகன் போய்விட்டான், என் மகன் போய்விட்டான்'' என்கிறார் அவர்.

அடுத்த சில நாட்களில் நாங்கள் சந்தித்த குடும்பங்களுக்கெல்லாம் இந்தக் கதை மிக நன்றாகத் தெரிந்திருந்தது. எனினும், இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ''மலேரியா இல்லாத ஜாம்பியாவுக்காக ஒருங்கிணைவோர்'' என்கிற திட்டம், ரோட்டரியின் முதல் பெரிய அளவுத் திட்டங்கள் நல்கையைப் பெற்றுள்ளது, இது உயிர்களைக் காக்கிறது. ஜாம்பியாவின் இரண்டு பகுதிகளில் 2,500 தன்னார்வலர் நலப் பணியாளர்களை அவர்களுடைய சமூகங்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள். தேவை உள்ளவர்களுக்கு மருத்துவப் பராமரிப்பை இன்னும் அருகில் கொண்டுவர இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது, இவர்களால் மலேரியா, பிற நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க இயலுகிறது.

**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
RI தலைவர்

*ஜாம்பியாவில் RI தலைவர் ஜெஃனிபர் ஜோன்ஸ் டிமோதி (வலதிலிருந்து 2வது) மற்றும் நாதனுடன் (வலது); தலைவர் ஜோன்ஸுடன் ஜாம்பியாவில் மலேரியாவை எதிர்த்து போராடும் ஒரு சமூக சேவகர்.*


Esther Ruth Mbabazi





# காலநிலை மாற்றம்: துயரங்களும் விடிவுகளும்

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இப்போது ரோட்டரி கவனம் செலுத்தி வருவதால், உலக அளவிலான பருவநிலை மாற்றம் தொடர்பான கூட்டங்களில் ரோட்டரி தலைமையின் பங்கேற்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற COP26 மாநாட்டில் PRIP சேகர் மேத்தா பங்கேற்றார். இந்த ஆண்டு பருவநிலை மாற்றத்துக்கான மாநாடு (COP27), தென் மேற்கு ஆசியாவில் உள்ள எகிப்தின் ஷர்ம் எல்-ஷேக் நகரில் நடைபெற்றது. இதில் ரோட்டரித் தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் கலந்துகொண்டு சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகரித்து வருவது குறித்தும் பூமியில் வசிப்பவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்தும் கவலை வெளியிட்டார்.

ஆனால், இதில் கவலை அளிக்கும் விஷயம் என்னவென்றால், சர்வதேச அளவிலான கூட்டங்களில் உலகநாடுகளின் அரசியல் தலைவர்கள் சுற்றுச்சூழலை பாதுகாப்பு பற்றி பேசுகிறார்களே தவிர, அந்தக் கூட்டங்களில் அளிக்கப்படும் உறுதிமொழிகளை நிறை வேற்ற எந்த அக்கறையும் எடுத்துக் கொள்வதில்லை. இவை எல்லாமே மேடை பேச்சோடு நின்று விடுகின்றன.

எகிப்தின் மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் தங்கள் நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டு தொலை தூரங்களிலிருந்து போராட்டங்களைப் பார்க்கிறார்கள். சிவில் உரிமைகளைப் பற்றி விவாதிக்கும் அரிய வாய்ப்பை இழக்கிறார்கள். ஏனெனில் அது தங்கள் நாட்டுக்கு திரும்புவதற்கான எந்த ஒரு வாய்ப்புக்கும் ஆபத்தாக முடியும் என நினைக்கிறார்கள். சிவில் மற்றும் மனித உரிமைகள் மீதான எகிப்தின் அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அணிவகுப்புகள் நிச்சயம் COP27 மாநாட்டில் எதிரொலித்திருக்கும்.

அமெரிக்க அதிபர் ஜோ பிடன் பருவநிலை மாற்றம் தொடர்பான உச்சிமாநாட்டில் கடுமையாக உரை நிகழ்த்தினார். சுற்றுச்சூழல் பாதிப்பால் பூமிக்கு ஏற்படும் ஆபத்து குறித்து அவர் எச்சரித்தார். மேலும் பருவநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டத்துக்கு தலைமை வகிக்கவும், நிதியளிக்கவும் உறுதியளித்தார்.

ஆனால், இதுபோன்ற முக்கியமான பிரச்னைகளை சந்திக்கும்போது எகிப்து மட்டும் விதிவிலக்கல்ல. மலேசியாவில் பொதுத் தேர்தலுக்கான பிரசாரத்தின் இறுதிநாட்களில் சுற்றுச்சூழலைவிட பொருளாதார பிரச்னைகள் முதன்மை பெற்றன. மேலும் நாடு முழுவதும் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்டது. நவம்பர் தேர்தலையொட்டி முக்கியத் தலைவர்கள் தேர்தல் கண்ணோட்டத்திலேயே பிரசாரம் செய்ததால் பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பிரசாரங்கள் பிரதானமாக இடம்பெறவில்லை.

மேலும் இந்தியாவில் இருக்கும் நாம் இதில் முன்னிறுத்துவதற்கு எதுவும் இல்லை. சுற்றுச்சூழல் பேரழிவு குறித்து நமது அரசியல்வாதிகள் பேசுவதை எத்தனை முறை கேட்டுள்ளோம்? வேலைவாய்ப்பை உருவாக்குவோம், பொருளாதாரத்தை மீட்போம் என்று போலியான உறுதிமொழிகளை கொடுப்பதிலும், ஒருவருக் கொருவர் தூற்றிக்கொள்வதிலும்தான் அரசியல்வாதிகள் நேரத்தை செலவழித்து வருகின்றனர்.

பருவநிலை மாற்றம் என்று வரும்போது ஆப்பிரிக்கா தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் அதை பொருட்படுத்துவதே இல்லை. இந்தியாவைப் போலவே அங்கும் வறுமை, அறியாமை மற்றும் கல்வி அறிவு இல்லாமை ஆகிய காரணங்களால் மக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லை என்று சொல்லலாம். பருவநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதல் காரணமாக இந்தியாவிலும், ஆப்பிரிக்காவிலும் பேரழிவுகள் ஏற்பட்டதை நாம் அனுபவபூர்வமாக உணர்ந்துள்ளோம்.

பவர் ஷிப்ட் ஆப்பிரிக்கா (PSA) என்பது ஒரு சிந்தனைக்குழுவாகும். இது அதி நவீன பகுப்பாய்வு, தீர்வு சார்ந்த கொள்கை, யோசனைகள் மற்றும் ஆப்பிரிக்க கண்ணோட்டத்தில் கண்டத்திற்குள்ளும், சர்வதேச அளவிலும் உடனடி ஊடக ஈடுபாட்டை வழங்குகிறது. அதன் நோக்கம் ஊடகங்கள் மற்றும் பொதுத் தொடர்புகள் மூலம் குரல்களை எழுப்பி சர்வதேச அளவில் கவனத்தை ஈர்ப்பதாகும். எங்களின் அட்டைப்பட கட்டுரையைப் படியுங்கள். அதில் மும்பை ரோட்டரி சங்கம் சுற்றுச்சூழல் சீரழிவை தடுக்கவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் செய்து வரும் நடவடிக்கைகள் புரியவரும். சுற்றுச்சூழலை பாதுகாக்க இந்தியா முழுவதும் ரோட்டேரியன்கள் வளர்த்து வரும் மியாவாக்கி காடுகளின் எண்ணிக்கையை பாருங்கள். அதுவே உங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும்!

ரஷீதா பகத்

**ஆளுநர் குழு**

RID 2981 செல்வநாதன் V
RID 2982 சரவணன் P
RID 3000 ஜெரால்ட் I
RID 3011 அசோக் கண்டூர்
RID 3012 Dr லலித் கன்னா
RID 3020 பாஸ்கர் ராம் V
RID 3030 Dr ஆனந்த் ஜுன்ஜுனுவாலா
RID 3040 ஜினேந்தர ஜெயின்
RID 3053 ராஜேஷ்குமார் சூரா
RID 3054 பல்வந்த் S சிரானா
RID 3060 ஸ்ரீகாந்த் இந்தானி
RID 3070 Dr துஷ்யந்த் சௌத்ரி
RID 3080 கல்டா V P
RID 3090 குல்பர் சிங் சௌத்ரி ரெடோல்
RID 3100 தினேஷ் குமார் சர்மா
RID 3110 பவன் அகர்வால்
RID 3120 அனில் அகர்வால்
RID 3131 Dr அனில் லால்சந்த் பார்மர்
RID 3132 ருக்மேஷ் ஜகோட்டியா
RID 3141 சந்தீப் அகர்வல்லா
RID 3142 கைலாஷ் ஜித்தானி
RID 3150 டல்லா ராஜசேகர் ரெட்டி
RID 3160 வொமினா நாக சதீஷ்பாபு
RID 3170 வெங்கடேஷ் H டேஷ்பாண்டே
RID 3181 N பிரகாஷ் காரந்த்
RID 3182 Dr ஜெயகௌரி ஹடிகல்
RID 3190 ஜிதேந்திரா அனேஜா
RID 3201 ராஜ்மோகன் நாயர் S
RID 3203 இளங்குமரன் B
RID 3204 ப்ரமோத் நாயனார் V V
RID 3211 பாபுமோன் K
RID 3212 முத்து V R
RID 3231 பழனி J K N
RID 3232 Dr நந்தகுமார் N
RID 3240 குஷாநாவா பாபி
RID 3250 சஞ்ஜீவ்குமார் தாகூர்
RID 3261 ஷஷங்க் ரஸ்டோகி
RID 3262 பிரவுதத்தா சுபதி
RID 3291 அஜய்குமார் லா

துகார் டவர்ஸ், 3-வது தளம், மார்ஷல் சாலை, எழும்பூர், சென்னை-8. முகவரியில் இயங்கும் ரோட்டரி நியூஸ் டிரஸ்டுக்காக, P T பிரபாகரால், "ராசி கிராபிக்ஸ் P Ltd., 40, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை-14" என்ற முகவரியில் அச்சிடப் பட்டு வெளியிடப்படுகிறது.
**ஆசிரியர்:** ரஷீதா பகத்.

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக் களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரை களை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

# RI இயக்குனர்



## புத்தாண்டுப் பரிசு

நம் அனைவருக்கும் கிடைப்பது அதே 365 நாட்கள்தான். அவற்றைக் கொண்டு நாம் என்ன செய்கிறோம் என்பதுமட்டும்தான் ஒவ்வொருவருக்கும் வேறுபடுகிறது. ஆண்டின் இந்த நேரத்தில் நாம் புதிய தீர்மானங்களை எடுக்கிறோம், புதிய இலக்குகளை அமைக்கிறோம். ஆனால், ஒரு கேள்வி: ஆண்டின் தொடக்கத்தில் தீர்மானங்களை அமைப்பது நல்லதுதானா? சென்ற ஆண்டு நாம் அமைத்த இலக்குகளை நாம் எட்டிவிட்டோமா? இதுபற்றிய ஒரு பொன்மொழி, "ஓர் ஆண்டில் எதையும் செய்ய இயலாத நாட்கள் இரண்டுமட்டும்தான். ஒன்று, நேற்று, இன்னொன்று, நாளை." அதனால், புதிய தொடக்கங்களுக்கான சரியான நாள், இன்றுதான். சமூக மற்றும் சுற்றுச்சூழல் நோக்கங்கள், நாம் ஈடுபடவேண்டிய பொழுது போக்குகள், அன்றாட வாழ்க்கை அழுத்தங்களால் நாம் புறக்கணித்த உடல் தகுதி இலக்குகளுக்கான பேரார்வத்தை நாம் மீண்டும் கட்டமைப்போம். சமீபத்திய அறிக்கை ஒன்றில், புத்தாண்டுத் தீர்மானங்களில் தோல்வியடைந்த 35% பங்கேற்பாளர்கள் தாங்கள் எதார்த்தமில்லாத இலக்குகளைக் கொண்டிருந்ததாக ஒப்புக்கொண்டார்கள், 33% பேர் தங்கள் முன்னேற்றத்தைப் பதிவுசெய்து பின்தொடரவில்லை, 23% பேர் அவற்றை மறந்து விட்டார்கள். 10 பங்கேற்பாளர்களில் ஒருவர் தான் மிகக் கூடுதலான தீர்மானங்களை எடுத்துவிட்டதாகச் சொன்னார். பிரிஸ்டல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் வைஸ்மன் 3,000 மக்களைக் கொண்டு நடத்திய ஓர் ஆய்வில், புத்தாண்டுத் தீர்மானங்களை அமைத்த 88% பேர் தோல்வியடைந்தார்கள் என்று தெரியவந்தது.

ரோட்டரியன்களாகிய நாம் நம் குடும்ப நேரம், நலம், நிதி மற்றும் தொழில் ஆர்வங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும், அதே நேரம், உலகில் நல்ல வற்றையும் செய்யவேண்டும். ஏனெனில், நம் அமைப்புக்குத் தங்கள் வாழ்க்கைமுறையைச் சமநிலைப்படுத்தக்கூடிய வெற்றி கரமான மக்கள் தேவை, மோசமான சுய மதிப்பு கொண்டவர்கள், தங்கள் சொந்த வாழ்க்கையில் தடுமாறுகிறவர்கள் தேவையில்லை.

ரோட்டரியன்கள் முறையான ஒழுக்க நெறிமுறை ஒன்றைப் பின்பற்றவேண்டும், நேர்மையுடன் செயல்படவேண்டும், தங்கள் தொழில் திறமைகளைப் பயன் படுத்தி இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டும், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவேண்டும், ரோட்டரி அல்லது மற்ற ரோட்டரி உறுப்பினர்களை மோசமாகக் காண்பிக்கும் நடவடிக்கையைத் தவிர்க்கவேண்டும்.

இந்தப் புத்தாண்டும் எதிர்வரும் ஆண்டுகளும் உங்கள் சமூகத்துக்கு மிகச் சிறந்ததை வழங்கும் மன நிறைவை உங்களுக்கு வழங்க வாழ்த்துகள்.

மகேஷ் கோட்பாகி
RI இயக்குனர், 2021–23

# களின் செய்திகள்




## உங்கள் ரோட்டரி கதைகளைச் சொல்லுங்கள்!

ரோட்டரி, பல ஆண்டுகளாக உலகம் முழுவதும் நன்மைகளைச் செய்து நம்மை பெருமிதப்படுத்துகிறது. மக்களின் வாழ்க்கையில் நல்லதொரு மாற்றத்தை ரோட்டரி ஏற்படுத்தியது குறித்து எண்ணற்ற கதைகள் உள்ளன. அதேபோல ரோட்டேரியன்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களையும் பல கதைகளைச் சொல்ல முடியும். ரோட்டரியின் மாயாஜாலத்தை நேரில் அனுபவிக்கும்போதுதான் அதன் உண்மைத்தன்மை புரியும்.

இந்த அமைப்பில் நாம் அங்கம்வகிக்கிறோம் என்பதில் நியாயமான முறையில் நாம் பெருமிதம் கொள்கிறோம். எத்தனைப் பேர் இந்த அமைப்பின் வளர்ச்சிக்கு பயன்பட்டுள்ளார்கள் என்பதுதான். நம்மில் பலருக்கு சொல்வதற்கு ஒரு கதை இருக்கிறது. ஆனால், அதைச் சொல்ல நாம் முன்வருகிறோமா? போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் வெற்றி என்பது நாம் எல்லோரும் மகிழ்ச்சியுடன் பேசக்கூடிய ஒன்றுதான். நமது பிராந்தியத்தில் உறுப்பினராக இருக்கும் ரோட்டேரியன்களுக்கு இதில் நேரடித் தொடர்போ அல்லது ஈடுபாடோ கிடையாது. நம் முன்னோர்கள் ஒரு கண்ணோட்டத்துடன் செயல்பட்டு கடின உழைப்பால் மேற்கொண்ட வெற்றியைச் சொல்லி மகிழ்ச்சி அடைகிறோம்.

இப்போது நமது தனிப்பட்ட கதையைச் சொல்லும் நேரம் வந்து விட்டது. ரோட்டரியின் விளம்பர தூதராக மனப்பூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் இருக்க வேண்டியது ஒவ்வொரு ரோட்டேரியனின் பொறுப்பும் கடமையுமாகும். நமது சின்னத்தை ரோட்டரி சங்க கூட்டங்களில் மட்டும் அல்லாது, எப்போதும் அடையாளப்படுத்துவதிலிருந்து இந்த நடைமுறை தொடங்குகிறது. ரோட்டரியைப் பற்றி, ரோட்டரியில் இல்லாத, ஆனால் நமது அமைப்பில் உறுப்பினராகச் சேர விரும்பும் நபரிடம் நடத்தும் உரையாடலிலிருந்து இதைத் தொடங்கலாம். உங்கள் கதையின் முக்கியத்துவத்தையும், அதனால் ஏற்படும் தாக்கத்தையும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. மேலும் ரோட்டரியின் மாயாஜாலத்தை மற்றவர்கள் அனுபவிக்கும் வகையில் அதற்கான வாய்ப்புக்களை நாம் உறுதிசெய்துகொள்ள வேண்டும். இதன் மூலம் அவர்களும் இந்த அமைப்பின் வளர்ச்சியில் தங்கள் பங்கை ஆற்ற முடியும்.

ரோட்டரியின் விளம்பர தூதர் என்பது நம் ஒவ்வொருவருக்கும் கிடைத்துள்ள வாய்ப்பாகும். கடந்த 11 தசாப்தங்களாக நமக்கு முன் இருந்தவர்களின் உழைப்பின் பலனை அனுபவிப்பது நமக்கு கிடைத்த பாக்கியமாகும். அதேபோல எதிர்கால சந்ததியினர் பலன்களை அறுவடை செய்ய இன்றே அதற்கான விதைகளை விதைப்பது நமது கடமையாகும். நம் கதைகளை பெருமையுடன் சொல்வோம்!



A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


**அறங்காவலர் குழுவினர்**

A S வெங்கடேஷ் RID 3232
RI இயக்குனர் மற்றும் RNT தலைவர்
Dr மகேஷ் கோட்பாகி RID 3131
RI இயக்குனர்
Dr பரத் பாண்ட்யா RID 3141
TRF அறங்காவலர்
ராஜேந்திர K சாபூ RID 3080
கல்யாண் பானர்ஜி RID 3060
சேகர் மேத்தா RID 3291
பாண்டுரங்க செட்டி RID 3190
அசோக் மஹாஜன் RID 3141
PT பிரபாகர் RID 3232
Dr மனோஜ் D தேசாய் RID 3060
C பாஸ்கர் RID 3000
கமல் சங்வி RID 3250
குலாம் A வாஹன்வதி RID 3141

**RI இயக்குனர் தேர்வு**

அனிருதா ராய் சௌத்ரி RID 3291
TN சுப்ரமணியன் RID 3141

**செயற்குழு உறுப்பினர்கள் (2022–23)**

Dr துஷ்யந்த் சௌத்ரி RID 3070
தலைவர், ஆளுநர் குழு
வெங்கடேஷ் H தேஷ்பாண்டே RID 3170
செயலாளர், ஆளுநர் குழு
Dr N நந்தகுமார் RID 3232
பொருளாளர், ஆளுநர் குழு
தினேஷ்குமார் சர்மா RID 3100
ஆலோசகர், ஆளுநர் குழு



**ஆசிரியர்**
ரஷீதா பகத்


**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

இதழ்

# நாம் பகிர்ந்துகொள்ளும் மதிப்பீடுகள்



நாம் ஒவ்வொருவரும் நம் சங்கங்களுக்குச் சில தனிப்பட்ட மதிப்பீடுகளைக் கொண்டுவருகிறோம். சேவை, தோழமை, பன்முகத்தன்மை, நேர்மை, தலைமை ஆகிய மைய மதிப்பீடுகளின்மூலம் ரோட்டரியும் நம்மை இணைக்கிறது.

ரோட்டரியிலிருந்து பிரிக்க இயலாத இன்னொரு மதிப்பீடு: நம்முடைய வழங்கும் எண்ணம். சேவைத் திட்டங்களுக்குத் தங்கள் நேரத்தைத் தன்னார்வத்துடன் வழங்கும் சங்க உறுப்பினர்களில் தொடங்கி, நம் அறக்கட்டளையை நீடிக்கச்செய்கிற ஆர்ச் க்ளம்ஃப் சமூகத்தில் இடம்பெறும் ரோட்டரி தலைவர்கள்வரை, நான் சந்தித்த மிகத் தாராளமான மனிதர்களில் ரோட்டரி உறுப்பினர்கள் இடம்பெறுகிறார்கள். நம் தனிப்பட்ட தாராள மனப்பான்மையும் சமூகத்துக்குத் திரும்பக் கொடுக்க ரோட்டரி நமக்கு வழங்கும் எண்ணற்ற வழிகளும் சேர்ந்து, நம்மை நன்மையின் பன்னாட்டுப் படை ஆக்குகின்றன.

ரோட்டரியில், நாம் அதை இன்னொரு படி முன்னெடுத்துச் செல்கிறோம். நாம் நல்ல மேற்பார்வையிடுதல், திட்டமிடல், வளம் குன்றா நிலையையும் மதிக்கிறோம். ரோட்டரியில் உள்ள நாம், கொடுப்பதுடன் நிறுத்துவதில்லை, அறிவார்ந்த முறையில் கொடுக்கிறோம்.

ரோட்டரியில் கொடுக்கிற நாம் பெறவும் செய்கிறோம் என்பது மிக உண்மை. உலகெங்கும் நூற்றுக்கணக்கான அறக்கட்டளைத் திட்டங்களைப் பார்க்கும் நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது, அதன் அடிப்படையில், நாம் பதிலுக்குப் பெறும் பரிசு விலைமதிப்பிட இயலாதது என்று நான் உங்களுக்குச் சொல்வேன்.

இந்தியாவில் உள்ள சென்னையில், கண் மருந்தகம் ஒன்றில், தெளிவான பார்வையைப் பெற்றுள்ள ஒரு நபருடைய முகத்தில் தெரிந்த வியப்பைப் பார்க்கும் அதிர்ஷ்டம் என்னைப்போல் உங்களுக்கும் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். ரோட்டரியால் படிக்கக் கற்ற குவாத்தமாலாக் குழந்தையுடைய பெருமையான சிரிப்பை நீங்கள் பார்க்கவேண்டும். அல்லது, பாகிஸ்தானில் இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்தின் இரண்டு சொட்டுகளைப் பெற்ற குழந்தையின் பெற்றோருடைய நன்றி நிறைந்த கண்ணீரைப் பார்க்கவேண்டும். அப்போது, நான் பேசுவது உங்களுக்குப் புரியும். நம் அறக்கட்டளையை ஆதரிப்பதன் மூலம் சமூகத்துக்குச் சேவை புரியும் அதிர்ஷ்டம் நமக்குக் கிடைத்துள்ளது.

இந்த வழங்கும் பருவத்தில், TRFக்கு நீங்கள் காண்பித்து வரும் தாராள மனப்பான்மைக்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

**இயன் ரிஸ்லி**
TRF அறங்காவலர் தலைவர்



# எங்கும் கலை அழகு

EVA ரெமிஜன்-டோபா



மெல்போர்னில் பொதுக் கலையை எங்கும் காணலாம். மே 27 முதல் 31வரை 2023 RI மாநாட்டுக்காக நீங்கள் இங்கு வரும்போது, இந்த நகரத்தின் வெளி நிறுவல்கள் மற்றும் சுவர் ஓவியங்கள், முரல்கள் நிறைந்த சந்துகளைப் பார்ப்பது இதன் அழகையும் படைப்பூக்கத்தையும் அனுபவிக்க ஒரு வழியாகும்.

பலவிதமான, எல்லாருக்கும் பிடித்த தெருக் கலை இடங்களைப் பார்க்க, மையத் தொழில் மாவட்டப் பகுதியில் நடந்து செல்லுங்கள். இங்கு மிகவும் புகழ்பெற்ற காட்சிகளில் ஒன்றான Cobblestone Hosier Laneல் வண்ணங்கள் நிறைந்து வழிகின்றன. நகர அனுமதியுடன் இந்த இடத்தில் மக்கள் தொடர்ந்து ஓவியம் தீட்டுவதால், இது நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கிறது.

சற்றுத் தள்ளி, குறுகலான AC/DC Laneல், இந்தப் பெயரைக் கொண்ட சிறப்பான இசைக்குழுவைச் சேர்ந்த புகழ் பெற்ற ராக் கலைஞர்களுடைய ஓவியங்களைப் பார்க்கலாம். அங்கிருந்து சற்றுத் திரும்பினால், Duckboard Placeல் உள்ள நவீன உணவகங்களைச் சுற்றித் தெருக் கலையின் உறுதியான அதிர்வுகளைப் பார்க்கலாம்.

Presgrave Place வழக்கமான சுவர்க் கலைத் தெருக்களிலிருந்து மாறுபட்டுள்ளது. இச்சாலை ஒரு வெளி ஓவியக்கூடம்போல் அமைந்துள்ளது.

மெல்பர்னின் நடுவில் ஓடுகிற யர்ரா ஆற்றின் அருகில் ஒரு பூங்காவில் நீங்கள் ஃபெடரேஷன் மணிகளுக்கு நடுவில் நடக்கலாம். இந்தக் கண்டத்தில் இருந்த ஆறு பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதிகள் ஒரு நாடாக மாறியதன் நூற்றாண்டைக் கொண்டாடும்வகையில் 2001ல் அரசாங்கம் இங்கு 39 தலைகீழ் மணிகளை அமைத்தது. பீடங்களிலும் கம்பங்களிலும் அமைக்கப்பட்ட இந்தப் பித்தளை மணிகள் நாள்தோறும் மூன்று முறை பல இசையமைப்பாளர்களுடைய இசையை இசைக்கின்றன.

மேலும் அறிய, பதிவு செய்ய: convention.rotary.org.

# Rotarians!

## Visiting Chennai for business?

## Looking for a compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 37,050 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,445 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 18,913 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 12,605 |
| ரோட்டரியினர் | : | 1,201,081 |
| ரோட்டராக்டர்கள் | : | 201,785 |
| இன்டராக்டர்கள் | : | 434,999 |

*As on November 16, 2022*

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on November 1, 2022

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 135 | 6,652 | 7.74 | 65 | 336 | 55 | 243 |
| 2982 | 79 | 3,619 | 7.18 | 49 | 1,233 | 107 | 76 |
| 3000 | 131 | 5,453 | 10.14 | 100 | 1,595 | 314 | 214 |
| 3011 | 123 | 4,653 | 27.27 | 82 | 2,689 | 137 | 37 |
| 3012 | 150 | 3,773 | 22.98 | 73 | 1,465 | 86 | 61 |
| 3020 | 85 | 5,111 | 7.45 | 35 | 891 | 168 | 350 |
| 3030 | 98 | 5,396 | 15.27 | 127 | 2,333 | 360 | 382 |
| 3040 | 111 | 2,678 | 14.38 | 59 | 828 | 85 | 190 |
| 3053 | 74 | 2,983 | 17.73 | 35 | 555 | 54 | 128 |
| 3054 | 174 | 7,241 | 20.56 | 115 | 7,629 | 204 | 574 |
| 3060 | 105 | 5,002 | 15.03 | 66 | 2,441 | 81 | 152 |
| 3070 | 127 | 3,394 | 16.74 | 48 | 629 | 63 | 59 |
| 3080 | 108 | 4,364 | 13.29 | 148 | 2,610 | 210 | 118 |
| 3090 | 103 | 2,534 | 6.91 | 46 | 713 | 113 | 164 |
| 3100 | 100 | 2,139 | 9.68 | 14 | 83 | 33 | 151 |
| 3110 | 150 | 3,990 | 12.38 | 14 | 98 | 33 | 106 |
| 3120 | 92 | 3,784 | 15.99 | 62 | 607 | 36 | 55 |
| 3131 | 143 | 5,794 | 24.47 | 123 | 2,550 | 252 | 143 |
| 3132 | 91 | 3,660 | 12.98 | 35 | 589 | 126 | 168 |
| 3141 | 109 | 6,168 | 26.65 | 147 | 9,274 | 200 | 126 |
| 3142 | 104 | 3,967 | 20.95 | 87 | 2,431 | 148 | 88 |
| 3150 | 111 | 4,453 | 13.27 | 147 | 2,032 | 153 | 120 |
| 3160 | 78 | 2,734 | 9.69 | 31 | 333 | 20 | 82 |
| 3170 | 146 | 6,658 | 15.82 | 99 | 1,771 | 264 | 176 |
| 3181 | 87 | 3,658 | 9.87 | 36 | 461 | 220 | 117 |
| 3182 | 88 | 3,777 | 10.06 | 45 | 165 | 132 | 106 |
| 3190 | 166 | 6,899 | 19.74 | 209 | 7,442 | 279 | 73 |
| 3201 | 165 | 6,470 | 9.80 | 126 | 2,374 | 108 | 88 |
| 3203 | 94 | 5,037 | 8.04 | 74 | 857 | 238 | 38 |
| 3204 | 74 | 2,548 | 9.14 | 23 | 201 | 33 | 13 |
| 3211 | 155 | 5,170 | 8.68 | 8 | 113 | 29 | 133 |
| 3212 | 128 | 4,859 | 11.46 | 84 | 3,531 | 297 | 153 |
| 3231 | 97 | 3,604 | 8.60 | 34 | 299 | 99 | 417 |
| 3232 | 174 | 7,706 | 19.17 | 133 | 17,639 | 241 | 100 |
| 3240 | 110 | 3,789 | 17.26 | 69 | 1,529 | 413 | 226 |
| 3250 | 105 | 4,006 | 21.22 | 66 | 1,184 | 80 | 188 |
| 3261 | 93 | 3,332 | 19.18 | 17 | 50 | 26 | 44 |
| 3262 | 129 | 4,267 | 15.16 | 76 | 811 | 655 | 277 |
| 3291 | 159 | 4,137 | 25.02 | 138 | 2,098 | 111 | 688 |
| India Total | 4,551 | 175,459 | | 2,945 | 84,469 | 6,263 | 6,624 |
| 3220 | 72 | 2,151 | 16.27 | 97 | 5,356 | 144 | 76 |
| 3271 | 143 | 3,132 | 17.88 | 156 | 2,450 | 223 | 28 |
| 3272 | 161 | 1,911 | 17.53 | 70 | 930 | 22 | 47 |
| 3281 | 310 | 8,233 | 18.69 | 279 | 2,717 | 156 | 207 |
| 3282 | 185 | 3,764 | 10.57 | 202 | 1,617 | 49 | 47 |
| 3292 | 155 | 5,965 | 18.21 | 182 | 5,361 | 143 | 133 |
| S Asia Total | 5,577 | 201,111 | | 3,931 | 102,900 | 7,000 | 7,162 |

*Source: RI South Asia Office*

Rotary PEOPLE OF ACTION

# RID 3141 உதவியால் மும்பை பசுமை மண்டலத்தை பெற்றது

ரஷீதா பகத்



கலினா பல்லுயிர் பூங்காவின் நுழைவாயிலில் ஒரு வானவிலில் இருந்து குதிக்கும் குழந்தைகளின் உலோக அமைப்பு.



RID 3141 *சுற்றுச்சூழல் துறை இயக்குனர் ஸ்ரீ நந்தி,* DG *சந்திப் அகரவல்லா, சிற்பி அர்சான் கம்பாட்டா, சங்கத்தலைவர் வினீத் பட்நாகர் மற்றும் பூங்காவின் வடிவமைப்பாளர் அபிஷேக் கவிட்கர்.*

ஜனவரி 2021ல், RI மாவட்டம் 3141 கவர்னர் சந்தீப் அகர்வாலா, அப்போதைய DGN ஆக, தனது ஆண்டிற்கான முக்கிய திட்டங்களைத் திட்டமிடும் போது, ரோட்டரியின் சமீபத்திய கவனம் செலுத்தும் பகுதியான சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் பெரிய அளவில் ஏதாவது செய்யத் தீர்மானித்தார். “நான் மும்பையில் ஒரு நிலையான பெரிய பசுமை மண்டலத்தை உருவாக்க விரும்பினேன், மேலும் நீண்ட கால நிலையான திட்டத்தை செய்ய பொருத்தமான இடத்தைத் தேட ஆரம்பித்தேன்.’’ இந்திய ரயில்வே மற்றும் பிற நிறுவனங்களுக்கு சொந்தமான சில பகுதிகளை அவர் அடையாளம் கண்டார். “ஆனால் என்ன செய்ய முடியும் மற்றும் வரம்பிற்கு அப்பாற்பட்டது என்ன என்பதில் நாங்கள் நிறைய கட்டுப்பாடுகளை எதிர்கொண்டோம். அனுமதிகளைப் பெறுவதும் ஒரு பெரிய பிரச்சனையாக மாறியது.

சாத்தியமான இடங்களைப் பரிந்துரைப்பதற்காக மாவட்டத்தில் உள்ள பல்வேறு ரோட்டேரியன்களுடன் அவர் தொடர்பு கொண்டபோது, மெட்ரோவின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள மும்பை பல்கலைக்கழக த்தின் கலினா வளாகத்தில் ஒரு பெரிய பூங்கா இருப்பதாகவும், அதற்கு புத்துணர்ச்சி தேவை என்றும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

RC மும்பை வெர்சோவாவின் முன்னாள் தலைவரான ராஜேஷ் சௌத்ரி, பல்கலைக் கழகத்துடன் சில தொடர்புகளைக் கொண்டவர். அவருடைய சங்கம் மரங்களை நடுதல் மற்றும் கழிவு மேலாண்மை பணிகளை அந்த கல்வி அமைப்புடன் முன்பு செய்திருந்தது, அகர்வாலாவின் ஒப்புதலைப் பெற்ற பிறகு அவர் வேலைகளை தொடங்கினார். “இந்த பூங்கா 50,000 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது, ஒரு ஏரி உட்பட 18,000 சதுர அடி பரப்பளவில் நீர்நிலைகள் உள்ளன,’’ என்று அவர் கூறினார். இந்த பூங்கா பல ஆண்டுகளுக்கு முன்பு பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்டது, ஆனால் இப்போது பாழடைந்த நிலையில் உள்ளது. ஆனால், பல்கலைக்கழகம் அதனை மீண்டும் உயிர்பிக்க விரும்புகிறது.

பல்கலைக்கழக அதிகாரிகள் இதற்கு ஒப்புக்கொள்ள, “அடுத்த 10 ஆண்டுகளில் நாங்கள் என்ன செய்ய முன்மொழிகிறோம், அதன் நிலைத்தன்மை மற்றும் மேலாண்மை ஆகியவற்றை விவரிக்கும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அவர்களுடன் கையெழுத்திட்டோம், மேலும் ஸ்பான்சர்களைத் தேட ஆரம்பித்தோம்’’ என்று DG கூறுகிறார்.

HDFC அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனம் ஒரு CSR பங்களிப்பாளராக விரைவாக வந்து, பூங்காவை முழுவதுமாக மாற்றுவதற்குத் தேவையான ரூ.2 கோடி நிதியுதவி அளித்து, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கும் கல்வி மற்றும் நிலையான முயற்சியாக மாற்றியது. இந்தத் தொகைக்கு மேல், பூங்காவை பராமரிக்க ஆண்டுதோறும் ரூ.20–25 லட்சம் தேவைப்படும்; இப்போது அவரது சொந்த சங்கம்- RC பாம்பே-அந்த பணத்தை அளித்துள்ளது, ஆனால் இந்த வருடாந்திர தொகைக்கான ஸ்பான்சர் ஷிப்பைத் தேடுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதும், இந்த திட்டத்தில்

# வண்ணம், நறுமணம் மற்றும் அழகுடன் ஒரு பூங்கா



**ஸ்ரீ நந்தி**

தலினா பல்லுயிர் பூங்காவின் இந்த தனித்துவமான முன்முயற்சி, நகர்ப்புறங்களில் இயற்கை வளங்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சுற்றுச்சூழலின் தரத்தை மேம்படுத்துவதன் மூலமும், கார்பன் டை ஆக்சைடு மற்றும் நகர்ப்புற மாசுபாட்டை மூழ்கடிக்கும் ஒரு கிணறாக செயல்படுவதன் மூலமும் காலநிலை மாற்றத்தைத் தழுவுவதற்கு உதவுகிறது. இந்த சூழலியல் ஆய்வகம் ஆர்வத்தை அதிகரித்து, விழிப்புணர்வை உருவாக்கி, மும்பையில் நிலைத்தன்மைக்கான ஒரு தொகுதியை உருவாக்கும்.

பல உணர்திறன் தூண்டுதலின் கொள்கைகளைச் சுற்றி வடிவமைக்கப் பட்ட சுய-நிலையான சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பூங்கா கொண்டுள்ளது மற்றும் பார்வை, வாசனை, ஒலி, தொடுதல் மற்றும் சுவை ஆகியவற்றின் முதன்மை உணர்வுகளை ஈடுபடுத்து கிறது. இந்த அழகிய இயற்கை பரப்பை மெகா ஸ்கேப்ஸ் இந்தியா அதன் நிறுவனர் அபிஷேக் கவிட்கர் தலைமையில் செய்துள்ளது. பூங்காவை வடிவமைப்பதில், பல்லுயிர் அளவுருக்கள், குளம் மற்றும் நிலத்தடி நீர்நிலைகளின் ஹைட்ரோஜியாலஜி, மற்றும் காலநிலையை எதிர்க்கும் தாவரங்கள் மற்றும் பூர்வீக மரங்களைத் தேர்ந்தெடுப்பதில் தொடங்கி, ஒரு தனித்துவமான அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.

செரினிட்டி கார்டனில் ஓவா, குடைமிளகாய், பாசிப்பூ, மல்லிகை மற்றும் பிற பிரகாசமான வண்ண மலர்கள் போன்ற நறுமணமுள்ள தாவரங்கள் உள்ளன, அதே நேரத்தில் ஸ்டீவியா, மிளகுக்கீரை மற்றும் துளசி போன்ற மூலிகைகள் நம் சுவை மொட்டு களை கட்டிப்போடுகின்றன. இன்சுலின், மசாலா, வெற்றிலை, எலுமிச்சைப் புல், சப்ஜா மற்றும் அக்கல்கதா போன்ற மருத்துவ தாவரங்கள் பூங்காவின் குணப்படுத்தும் சுற்றுப்புறங்களுக்கு மேலும் வலிமை சேர்க்கின்றன.

அனைத்து வகையான சிறகுகள் கொண்ட அதிசயங்கள் அவற்றின் வாழ்விடங்களை இங்கு அமைத்துள்ளன. மகரந்தச் சேர்க்கை பாதை என்பது தேனீக்கள் மற்றும் பிற பூர்வீக மகரந்தச் சேர்க்கை உயிரினங்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தாவர நடைபாதை ஆகும். பட்டாம்பூச்சி தோட்டம் லார்வா புரவலன் தாவரங்கள், தேன் செடிகள், பூர்வீக புற்கள் மற்றும் இலை புதர்களால் நிரம்பியுள்ளது, இதில் ஜட்ரோபா, இக்சோரா, ஹல்டி-குங்கு (அஸ்க்லெபியாஸ்), டிங்கலா, ஸ்டாச்சிடார்பெட்டா, கொரந்தி மற்றும் எலுமிச்சை ஆகியவை அடங்கும். இது வண்ணத்துப்பூச்சி களை அழைக்கும் சூழலாகவும், தளர்ந்த கண்களுக்கான வரப்பிரசாதமாகவும் உள்ளது. மீட்டெடுக்கப்பட்ட ஏரி பல நீர்வாழ் பறவைகள், விலங்குகள் மற்றும் தாவரங்களின் தாயகமாகும், மேலும் குளிர்காலத்தில், புலம்பெயர்ந்த பறவைகள் தஞ்சம் அடைவதைக் காண உள்ளோம். பறவை பூங்காவில், ஆர்வமுள்ள பார்வையாளர்கள் தங்க ஓரியோல்கள், சிறிய நீல கிங்ஃபிஷர்கள், வெள்ளை-புருவம் கொண்ட ஃபேன்டெயில்கள், சூரிய பறவைகள், பருந்துகள், பாறை புறாக்கள், எக்ரெட்ஸ்கள் அல்லது கிளிகள் ஆகியவற்றைக் காணலாம்.

இந்த தோட்டத்தில் ஒரு நிலப்பரப்பு வடிவமைக்கப்பட்ட மியாவாக்கி வனம் உள்ளது, இது நகர்ப்புற காடு வளர்ப்பு திட்டங்களுக்கான நடைமுறை வழிகாட்டியாக மாறியுள்ளது. ஹெடு, சீதா-அசோக், நாகேசர், பஹவா, பீஜா, காஞ்சன், காகட், கர்மா, சிவன், பங்கரா, காட்டு வாழை, ஓச்சனா, பாரிஜாத், மற்றும் புத்ரஞ்சிவா போன்ற மரங்கள், புற்கள் மற்றும் புதர்கள் கொண்ட பல அடுக்கு தாவரங்களைக் கொண்ட இந்த நுண்ணிய காடு, நிழலாடிய பச்சை தோப்பாக, பார்வையாளர்களுக்கு அமைதியான இடமாக அமைந்துள்ளது

புதிய நுட்பங்கள் மற்றும் QR குறியீட்டு முறை போன்ற தொழில்நுட்பங்களுடன், பாரம்பரிய முறைகளிலிருந்து சிறந்த நடைமுறைகள் இந்த பசுமையான வாழ்விடத்தின் வடிவமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, நுண்ணிய களிமண் பானைகளை பயன்படுத்தி சொட்டு நீர் பாசன முறை, பழங்கால பழங்குடி நடைமுறையானது, ஆவியாதல் இழப்பைக் குறைக்கவும், தாவர நீர் விநியோகத்தை அதிகரிக்கவும் செயல்படுத்தப்பட்டது.

இந்த நேர்த்தியான பச்சை மண்டலம் பார்வையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு முன் சந்திப்பு பதிவுடன் திறக்கப்பட்டுள்ளது. ஒரு அனுபவ மையமாக சிந்தனையுடன் திட்டமிடப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட ஆம்பி தியேட்டர் வளாக மாணவர்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான கல்வி சாராத செயல்பாடுகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளுக்கு சரியான இடமாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ரோட்டரியின் அடிப்படைக் கொள்கை யான உள்ளடக்கத்தை வலியுறுத்தும் வகையில், மாற்றுத் திறனாளிகள் எளிதில் அணுகும் வகையில் இந்தப் பூங்கா வடிவமைக்கப்பட்டுள்ளது.


*எழுத்தாளர் RC மும்பை கலாகாரின் முன்னாள் தலைவர்.*

பணிபுரியும் முக்கிய குழு ஒரு வடிவமைப்பாளர் மற்றும் கட்டிடக் கலைஞரைத் தேடத் தொடங்கியது. ‘‘எங்கள் சங்கம் மற்றும் மாவட்டத்தில் பல பில்டர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்கள் உள்ளனர், ஆனால் பல்லுயிர் பெருக்கத்தில் நிறைய வேலைகளைச் செய்தவர்களை நாங்கள் விரும்பினோம். இறுதியாக இந்த துறையில் சிறந்த அனுபவ முள்ள புனேவின் மெகாஸ்கேப்ஸ் நிறுவனத்தை தேர்வு செய்தோம்,’’ என்று அவர் மேலும் கூறுகிறார்.

கசிவு ஏற்பட்டு தண்ணீர் தூய்மை இழந்த ஏரியை புதுப்பிக்கும் பணி முக்கிய பணிகளில் ஒன்றாக இருந்தது. எனவே, நீர்நிலைகள் முழுவதுமாக வெளியேற்றப்பட்டு, அந்த பகுதி முழுவதும் சுத்தம் செய்யப்பட்டு, பருவமழைக்கு பின் தண்ணீர் நிரம்பியவுடன், அதன் தரத்தை மேம்படுத்த தேவையான நீர் சுத்திகரிப்புக்கு உட்படுத்தப் பட்டது. ‘’அடுத்து நாங்கள் ஏரியில் நீர்வாழ் உயிரினங்களை அறிமுகப்படுத்தினோம், நீர் தாவரங்களை வைத்தோம்.’’

சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து இளைஞர்களுக்கு, குறிப்பாக பள்ளி மாணவர்களுக்குக் கற்பிப்பதில் மைய கவனம் செலுத்தப்பட்டதால், அந்த வயதினருக்கு பூங்காவை கவர்ச்சி கரமானதாக மாற்ற வேண்டியிருந்தது. எனவே நுழைவாயிலில் ஈர்க்கக் கூடிய வகையில், மகிழ்ச்சியான வண்ண வானவில்லில் இருந்து குழந்தைகள்  வெளிவருவது போன்ற உலோகத்திலான சிற்பம் நிறுவப்பட்டது. இந்த நிறுவலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர், தேசிய அளவில் புகழ்பெற்ற சிற்பி, அர்சான் கம்பாட்டா என்று RC பாம்பே தலைவர் வினீத் பட்நாகர் கூறுகிறார். ‘‘நகர்ப்புற அமைப்பில் ஒரு உயிரியல் பன்முகத்தன்மை பூங்காவை அமைப்பது என்பது நிலையான சூழலை மேம்படுத்துவதற்கான ஒரு புதுமையான மற்றும் நேர்மறையான அணுகுமுறையாகும். அழகியல் தவிர, இது நமது சுற்றுச்சூழல் அமைப்புக்கு முக்கியமானது. மாணவர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் நலனுக்காக இந்த பூங்காவை மேம்படுத்த எங்களுக்கு வாய்ப்பளித்த மும்பை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பதிவாளர் மற்றும் நிர்வாகத்திற்கு எங்கள் சங்கம் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது, என்று அவர் மேலும் கூறினார்.

DG *அகர்வல்லாவுடன் (வலது) பட்நாகர் மற்றும் கவிட்கர்.*



HDFC அசெட் மேனேஜ் மென்ட்டின் உதவியானது ரோட்டேரியன்கள் வழங்கும் வசதிகளின் நோக்கத்தை விரிவுபடுத்துவதை உறுதி செய்தது. இந்த முக்கிய அம்சங்களை விளக்கி, இந்த திட்டத்தை இயக்கி செயல்படுத்தும் RC பாம்பே சங்கத்தின் உறுப்பினரான அகர்வாலா, இது மகிழ்ச்சியான இடம்... வேடிக்கை மற்றும் உல்லாசத் திற்கான இடம் என்ற செய்தியை குழந்தைகளுக்கு அனுப்ப, நாங்கள் ஒரு சிறிய காற்றாலை, ஒரு சிறிய சோலார் பண்ணை, மிதிவண்டி மூலம் தண்ணீரை செலுத்தக்கூடிய நிலையான பைக்குகள் போன்ற வேடிக்கையான அம்சங்களை எதிர்காலத்தில் சேர்க்கப் போகின்றோம். இந்த பூங்காவிற்குள் ஒரு சிறிய அரங்கம் உள்ளது மற்றும் தொடக்க நாளில் ஒரு தெரு நாடகக் குழு அங்கு சூழலியல் மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பற்றிய நாடகத்தை நடத்தியது.

ரோட்டராக்டர்கள் இன்னும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக இல்லாவிட்டாலும், அவர்களை இதில் இணைக்கும் திட்டம் உள்ளது; RID 3141ல் சுமார் 7,500 ரோட்டராக்டர்கள் உள்ளனர்.

இந்த உயிரியல் பன்முகத்தன்மை பூங்காவின் கல்வி கூறுகளை விவரிக்கும் அகர்வாலா, இங்கு நடப்பட்ட அனைத்து மரங்களும் QR குறியீடு செய்யப்பட்டவை என்றும், ஸ்கேன் செய்யும் போது அவற்றின் விவரங்களை தருகிறது என்று கூறுகிறார். ‘‘நாங்கள் ஒரு இயற்கை ஆர்வலரை நியமித்துள்ளோம், அவர் குழந்தைகளின் குழுக்களுக்கு முழு பூங்காவிற்கும் வழிகாட்டும் சுற்றுப்பயணங்களை வழங்குவார். அவரது சேவைகள் மற்றும் பூங்காவை பள்ளிகள் பெயரளவிலான தொகை ரூ.1000 செலுத்தி முன்பதிவு செய்யலாம். குழந்தைகள் 3–4 மணிநேர வழிகாட்டி சுற்றுப் பயணத்தை அனுபவிக்க முடியும். பூங்காவிற்குள் நுழைவது, மற்றபடி அனைவருக்கும் இலவசம்.

இந்தத் திட்டத்தின் ஒரு லட்சியப் பகுதியானது ‘‘முக்கிய பாடத்திட்டத்தில் சுற்றுச்சூழல் ஆய்வை இணைப்பதற்கான முயற்சியாகும். இப்போது வரை, சுற்றுச்சூழல் அறிவியல் என்பது நமது பள்ளிக் கல்வி அமைப்பில் முக்கிய பாடத்திட்டத்தின் கூறு அல்லாமல் ஒரு இணை பாடத்திட்டமாக மட்டுமே உள்ளது மற்றும், சில பாராக்களில் மேற்போக்காக குறிப்பிடப்பட்டுள்ளது,’’ என்று அவர் கூறுகிறார். ஒரு மாபெரும் முயற்சிக்குப் பிறகு, சுமார் ரூ.50 லட்சம் முதலீடு மற்றும் நம் நாட்டில் சில மூத்த சுற்றுச்சூழல் நிபுணர்களின் சேவைகளை ஈடுபடுத்தி, நமது



சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியம், பூமியின் வளங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்களின் நிலையான பயன்பாடு குறித்து தரமான கல்வித்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம், இந்தி மற்றும் மராத்தி ஆகிய மூன்று மொழிகளில் தயாராக உள்ள பாடம் மூன்று பாடப் புத்தகங்களாகப் அச்சிடப்படுகிறது; நிலை 1,2 மற்றும் 3. விளக்கப்படங்களுடன் ஒவ்வொரு நிலையும் சுமார் 250 பக்கங்களைக் கொண்டிருக்கும், மேலும் ஒவ்வொரு புத்தகமும் அச்சடிக்க ரூ.500 செலவாகும். ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கம் (RILM) மூலம் நாடு முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு ஒளிபரப்புவதற்காக மூன்று மின் தொகுதிகள் உருவாக்கப் பட்டு ஏற்கனவே NCERTக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ், முதன்மை பயிற்சியாளர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர், மேலும் அவர்கள் உருவாக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மற்றும் நிலைத்தன்மை குறித்த பாடத்திட்டத்தை குழந்தைகளுக்கு எவ்வாறு கற்பிப்பது என்பது குறித்து ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள். நாங்கள் மும்பையில் உள்ள பள்ளிகளுக்கு சென்று, அறங்காவலர்கள் மற்றும் முதல்வர்களை சந்தித்து எங்களுக்கு ஒரு வாரத்தில் 45 நிமிடங்கள் கொண்ட 2 வகுப்புகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டோம், இதன் மூலம் எங்கள் முதன்மை பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் இந்த பாடத்தை மாணவர்களுக்கு சரியான முறையில் கற்பிக்க முடியும். நாங்கள் பால்காரில் இருந்து தொடங்கி, முதல் கட்டத்தில் 20,000 மாணவர்களுக்கு சுற்றுச்சூழலைப் பற்றிய இந்தப் பாடத்திட்டத்தின் மூலம் எட்டுவோம் என்று நம்புகிறோம், என்கிறார் ஆளுநர்.

இந்த தொகுதியில் கலினா பல்லுயிர் பூங்கா உட்பட களப் பயணங்கள் அடங்கும், இதனால் குழந்தை பல்லுயிர், நிலைத்தன்மை போன்ற செய்திகளை உண்மையில் உள்வாங்கிக் கொள்கிறார்கள். பாடத் திட்டம், பயிற்சி மற்றும் களப் பார்வைக்கு ஒரு குழந்தைக்கு ரூ.1,000 செலவாகும். மொத்த திட்டத்திற்கும் 2 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது விரிவாக சென்றடைய, RID 3141 உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தை இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் இலவசமாக வழங்குகிறது. அதை வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கலாம். மேலும் வெவ்வேறு மாநிலங்கள் வெவ்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் பல்லுயிர்த்தன்மையைக் கொண்டிருப்பதால் அதனை மாற்றியமைத்து பள்ளிகளில் பயன்படுத்தலாம் என அவர் மேலும் கூறினார்.

இவை அனைத்திற்கும் பெரும் பணம் செலவாகும், ஆனால் கார்ப்பரேட் நிறுவனங்களைச் சந்தித்து அவர்களின் CSR நிதிகள் மூலம் உறுதிமொழிகளை பெறுவதற்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன. தேவைப்படும் பணத்தைச் சேகரிப்பதற்கான ஒரு முக்கிய வழி, உலகெங்கிலும் பிளானட் ரன் என்ற அரை மாரத்தான் தொடரை நடத்துவதாகும். ரோட்டரி சங்கம் மூலம் 52 நாடுகளில் மொத்தம் 52 அரை மாரத்தான் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வெளிநாட்டிலும் ஒரு அரை மாரத்தான் நடத்தப்படும் அதே வேளையில், இந்தியாவில் குறைந்தது 15 முதல் 20 மராத்தான்கள் நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. பணத்தை திரட்ட கார்ப்பரேட் நிறுவனங்களைத் தொடர்புகொள்வதைத் தவிர, நிலைத்தன்மை இலக்குகளில் பணியாற்றும் ஒத்த எண்ணம் கொண்ட NGOக்களும் இதில் ஈடுபடுவார்கள். அகர்வாலாவின் லட்சிய இலக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த மாரத்தான்கள் மூலம் சுமார் 1 மில்லியன் திரட்டி இந்த மாபெரும் சுற்றுச்சூழல் முயற்சியின் பல்வேறு கூறுகளை கவனித்துக்கொள்வதாகும்.

கலினா பூங்காவின் திறப்பு விழாவில் பங்கேற்று, HDFC அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனத்தின் MD மற்றும் CEO, நவ்நீத் முனோட், எங்கள் நிலையான சூழல் முன்முயற்சியின் ஒரு பகுதியாக, எங்கள் CSR செயல்பாடுகளின் கீழ், இந்த உயிர் பன்முகத்தன்மை பூங்காவிற்கு ஒரே நிதி பங்களிப்பாளராக இருக்க முடிவு செய்துள்ளோம்.குறிப்பாக மும்பை போன்ற நகரத்தில், இந்த பூங்கா கான்கிரீட் காடுகளுக்கு மத்தியில் இயற்கையின் சுற்றுச்சூழல் அமைப்புகளை பாதுகாக்கும் மாதிரியை நிறுவும்.

ஸ்கூல் ஆஃப் ஸ்ட்ராடஜிக் ஸ்டடீஸின் இயக்குனர் சைலேந்திர தியோலாங்கர் கூறுகையில், இது “150 ஆண்டுகள் பழமையான பல்கலைக்கழகத்திற்கு ஒரு முக்கியமான மற்றும் வரலாற்று தருணம்'' என்றார். பூங்காவை பற்றி ஒரு ஆவணப்படம் தயாரிக்கப்படும், மேலும் நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் இதுபோன்ற முயற்சிகள் ஊக்குவிக்கப்படும், என்றார்.



புகைப்படங்கள்: அதுல் ஜோஷி மற்றும் அபிஷேக் கவிட்கர்.

# ரோட்டரி கோல்ஃப் சாம்பியன்ஷிப் போட்டியில் வரலாறு படைத்த இந்தியா

ரஷீதா பகத்

மொராக்கோவில் சூரியக்கதிர்கள் ஒளிவீச, பசுமையான கோல்ஃப் மைதானத்தில் இந்த ஆண்டு நவம்பர் முதல் வாரத்தில் நடைபெற்ற 57வது சர்வதேச அளவிலான, சகோதரத் துவத்தை வலியுறுத்தும் ரோட்டேரியன்களுக்கான (IGFR) உலக சாம்பியன்ஷிப் போட்டியில் (2022) இந்திய ரோட்டரியின் கோல்ஃப் வீரர்கள் நேஷன் கோப்பையை முதன்முறையாக வென்று வரலாற்று சாதனை படைத்தனர்.

திருவிழா மற்றும் கொண்டாட்டங்களுக்கு இடையே சிறந்த உணவு மற்றும் பானங்கள் இவற்றுடன் கோல்ஃப் போட்டியும் நடைபெற்றது. ரோட்டேரியன்களான 182 கோல்ஃப் வீரர்கள் மற்றும் 22 நாடுகளைச் சேர்ந்த கோஃல்ப் வீரர்களும் மொராக்கோவில், மாரகேஷில் நடைபெற்ற போட்டியில் கலந்து கொண்டனர். ஒருவாரம் கோல்ஃப் போட்டியுடன் சூரியஒளி மற்றும் சகோதரத்துவத்தையும் அவர்கள் மகிழ்ச்சியுடன் அனுபவித்தனர்.

ரோட்டேரியன்களுக்கான இப்போட்டியில் முதல் முறையாக பங்கேற்ற இந்தியா மற்றும் எஸ்தோனியாவைச் சேர்ந்த, நண்பர்களை வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். இவ்விரு நாடுகளின் பெயரை ஏன் குறிப்பிட்டேன் என்றால் இவற்றிலிருந்துதான் முதன் முறையாக பலர் பங்கேற்றிருந்தனர். நீங்கள் எல்லோரும் நவம்பர் முதல் வாரத்தில் நடந்த கோல்ஃப் போட்டி கொண்டாட்டத்தை மிகவும் ரசித்திருப்பூர்கள். மேலும் புதிய நண்பர்களை பெற்றிருப்பீர்கள். அடுத்த முறை பங்கு கொள்வதற்கும் திட்டமிட்டிருப்பீர்கள் என நம்புகிறேன். மேலும் நான் சொன்ன செய்தியை பலருக்கும் தெரிவியுங்கள், புதிய நண்பர்களைக் கொண்டுவாருங்கள் என்றார் IGFR-ன் சர்வதேச தலைவரான ஆண்ட்ரியா ஒட்டி.

இந்திய கோல்ப் விளையாட்டு வீரர்களின் வெற்றி மற்றும் தெற்காசியாவைச் சேர்ந்த வங்கதேசம், இலங்கை மற்றும் நேபாள நாட்டு வீரர்களின் வெற்றிக்கும் முக்கிய காரணமாக இருந்தவர் ரோட்டரி மாவட்டம் 3060ன் முன்னாள் ஆளுநரான பராக் ஷெத். இவர்தான் கோல்ஃப் விளையாடும் ரோட்டேரியன்களின் தெற்காசிய பெல்லோஷிப் அமைப்பை 2015–16ல் தொடங்கினார். ஷெத் மற்றும் அவரது மனைவி பூனம் இருவரும் கோல்ஃப் விளையாடுவதில் அதிக விருப்பம் கொண்டவர்கள். தெற்காசியாவில் இந்த பெல்லோஷிப்பில் மட்டும் 460க்கும் மேலானவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். SAFGR என்ற இந்த அமைப்பு IGFR அமைப்புடன் இணைக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் பிரிவில்

*RI தலைவர் கோப்பை மூலம் 2021ம் ஆண்டு SAFGR $280,000 திரட்டியது*




கோல்ஃப் பந்தையடிக்கத் தயாராக உள்ளார் பூனம் ஷெத்.

கிளம்பிவிடுவார்கள். அதாவது வாரத்தில் நான்கு நாட்கள் கோல்ஃப் விளையாடுவோம் என்கிறார் அவர்.

SAFGRன் நிறுவனத் தலைவர் என்ற வகையில் அவர் இந்தியா மற்றும் உலக அளவில் எண்ணற்ற கோல்ஃப் போட்டிகள் நடைபெற முக்கிய காரணமாக இருந்து ள்ளார். நான் PRIDக்கள் சுஷில் குப்தா மற்றும் யஷ்பால் தாஸுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். SAFGR என்ற அமைப்பு உருவாக அவர்கள்தான் எனக்கு ஊக்கமும் ஆதரவும் அளித்தனர் என்றும் ஷெத் குறிப்பிட்டார்.

நான் 2015–16ம் ஆண்டில் மாவட்ட ஆளுநராகத் தேர்ந் தெடுக்கப்பட்டபோது பூனமும் நானும் தெற்காசியாவில் கோல்ஃப் பெல்லோஷிப்பை உருவாக்க வேண்டும் என்று நினைத்தோம். அதன் மூலம் கூட்டுறவை வலுப்படுவது, TRF மற்றும் போலியோவுக்கு நிதி திரட்டுவது மட்டுமல்லாமல் மாவட்ட அளவில் ரோட்டரி சங்கங்கள் நிறைவேற்றி வரும் சேவைத் திட்டங்களுக்கும் உதவ முடியும் என்று கருதினோம் என்று SAFGR உருவானதற்கான காரணத்தை அவர் விளக்கினார்.

ஷெத் இரண்டாவது இடத்தை வென்றார். இந்திய கோல்ஃப வீரர்களும் இதர பரிசுகளை வென்றனர். மதிப்பு மிகுந்த இந்த கோல்ஃப் போட்டியில் இந்தியா வரலாறு படைத்தது கண்டு திகைப்படைந்தேன் என்கிறார் ஷெத். இவர்தான் சேகர் மேத்தா ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக இருந்தபோது RI தலைவர் உலகக் கோப்பை போட்டிக்கு முன்முயற்சி எடுத்தார். பத்து ஆண்டுகளுக்கு மேலாக மனைவி பூனமுடன் கோல்ஃப் விளையாடி வருகிறார். இவர்கள் இருவரும் பாரூச்சில் வசித்து வருகின்றனர். ஆனால், ஆமதாபாதிலும் அவர்களுக்கு வீடு உள்ளது. வார இறுதியில் அதாவது வெள்ளிக்கிழமை அவர்கள் கென்ஸிவில்லி கோஃல்ப் விளையாட்டு ஸ்தலத்தை விட்டு



பின்னர் அவர், வதோதரா சாயாஜிநகர் ரோட்டரி சங்க உறுப்பினர்களான நிஷாந்த் ரமணி மற்றும் கபிலேஷ் ஷா இருவரையும் ஊக்கப்படுத்தி ஆமதாபாதில் முதன் முதலாக இந்திய ரோட்டேரியன்களுக்கான பெல்லோஷிப் கோல்ஃப் போட்டிகளை நடத்த காரணமாக இருந்தார். இந்த போட்டியில் 9 ரோட்டரி மாவட்டங்களைச் சேர்ந்த 45 கோல்ஃப் வீரர்கள் பங்கேற்றனர். இந்த போட்டியின் முடிவில்தான் SAFGR என்னும் அமைப்பை ஏற்படுத்தி ரோட்டேரியன்களிடையே கூட்டுறவை வலுப்படுத்தும் போட்டிகளை அதிக அளவில் நடத்தவும், போட்டிகள் மூலம் TRF மற்றும் இதர அறக்கட்டளைகளுக்கு நிதி திரட்டவும் முடிவு செய்யப் பட்டது.

ரோட்டரி மாவட்டம் 3190ல், பெங்களூருவில் தொடக்கப் போட்டி பெங்களூர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினரான மறைந்த கே.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது.



*PDG ஷெத் மற்றும் அவர் நண்பர் செக்கோஸ்லோவேக்கிய நாட்டு ரோட்டரி உறுப்பினர் மாரியா.*

*நேஷன் கோப்பையுடன் வெற்றி பெற்ற இந்திய அணி. PDG பராக் மற்றும் அவர் மனைவி பூனம் ஷெத் ஆகியோரும் உள்ளனர்.*



இந்தியா மற்றும் வங்கதேசத்தைச் சேர்ந்த ரோட்டேரியன் கோல்ஃப் வீரர்கள் காட்டிய உற்சாகம், ஆர்வம் ஒரு பெரிய வெற்றியாக அமைந்தது. ரோட்டரியின் முன்னாள் தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் மறைந்த முன்னாள் ரோட்டரி இயக்குநர்கள் சுஷில் குப்தா மற்றும் யஷ்பால் தாஸ் பலத்த ஆதரவு அளித்ததால் பெல்லோஷிப் 2016ம் ஆண்டு ஒரு லாபநோக்கமற்ற அமைப்பாக பதிவு செய்யப்பட்டது.

SAFGR எப்போதும் TRF மற்றும் சங்கத்தின் மாவட்ட அளவிலான சேவை திட்டங்களுக்கு நிதி திரட்டுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. மேலும் ரோட்டரி மீதான நல்லெண்ணத்தை மேம்படுத்துவதும், இந்தியா மற்றும் உலக அளவில் கோல்ஃப் போட்டிகளை நடத்தி பன்முகத் தன்மையை விரிவுபடுத்துவதும் எங்கள் எண்ணமாக இருந்தது என்றார் ஷெத். அறக்கட்டளைக்கு நிதி திரட்டும் எங்களின் முக்கிய நோக்கம் பலனளித்தது. உதாரணமாக கடந்த ஆண்டு RI தலைவர் உலகக் கோப்பை கோல்ஃப் போட்டிகள் மூலம் 280,000 டாலர்

*2025ம் ஆண்டில் தில்லியில் நடைபெறவுள்ள போட்டியில் IGFR $1.5 மில்லியன் திரட்டவுள்ளது.*

நிதி திரட்டினோம். 28 நாடுகளில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் உலகம் முழுவதிலிருந்து 1,036 வீரர்கள் பங்கேற்றனர். யஷ்பால் தால் பெயரிலான கோஃல்ப் போட்டியில் முதல் ஆண்டிலேயே 325,000 டாலர் நிதி திரட்டப்பட்டது.

தெற்காசியாவிலும் உலகத்தின் இதர பகுதிகளிலும் இதுவரை நடத்திய போட்டிகள் மூலம் ஏறக்குறைய 1 மில்லியன் டாலர் நிதி திரட்டியுள்ளோம். இதில் பெருந்தொகை TRF-க்கு செல்லும். சேவைத் திட்டங்களுக்கும் நிதிகள் வழங்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

ஆமதாபாத், பெங்களூரு, சண்டீகர், சென்னை, கொச்சி, தில்லி, டாக்கா, ஜாம்ஷெட்பூர், ஜெய்ப்பூர், காத்மாண்டு, கொடைக்கானல் உள்ளிட்ட பல இடங்களில் SAFGR சார்பில் கோல்ஃப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. உறுப்பினர் நாடுகளில் இரண்டு பதிப்புகள், மெய்நிகர் முறையில் நடந்த

*2019ம் ஆண்டு RI நடத்திய கோல்ஃப் போட்டி TRFயிற்கு $5.25 மில்லியன் திரட்டியது.*

போட்டிகளில் 567 மற்றும் 782 கோல்ஃப் வீரர்கள் பங்கேற்று TRFக்கு நிதி திரட்டினர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம், அமெரிக்காவில் ப்ளோரிடா மாநிலத்தில் ஜூபிடரில் உள்ள புகழ்பெற்ற பியர்ஸ் கிளப்பில், நிதி திரட்டுவதற்காக ரோட்டரி கோல்ஃப் போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில் போலியோ ஒழிப்புக்கான உலகளாவிய தூதரும் கோல்ஃப் விளையாட்டில் சிறந்தவருமான ஜாக் நிக்கோலாஸ் பங்கேற்றார். பூனம் மற்றும் பராக் ஷெத் ஆகியோரும் உற்சாகத்துடன் இப்போட்டியில் கலந்துகொண்டனர். இந்த ஒரு நிகழ்ச்சியின் மூலம் 5.25 மில்லியன் டாலர் நிதி திரட்டப்பட்டது. IGFR விடுத்த அழைப்பின் பேரில், ஜனவரி 2022 முதல் மூன்றாண்டு காலத்துக்கு ஷெத் அதன் உறுப்பினராக இருப்பார்.

SAFGR வெளிப்படுத்திய ஈடுபாட்டுக்கும், உற்சாகத்துக்கும் நன்றி. 2022ல் உலக சாம்பியன்ஷிப் போட்டியை நடத்த இது தேர்ந்தெடுக்






*ஜாம்ஷெட்பூர் SAFGR கோல்ஃப் போட்டியில் PDG பராக் மற்றும் பூனம் ஷெத்.*



*பூனம் தன் கோல்ஃப் நண்பர்களுடன்.*

கப்பட்டுள்ளது. ஆனால், கோவிட் தொற்று விளையாட்டின் தன்மையை கெடுத்துவிட்டது. அதாவது IGFR அட்டவணையையும் மாற்ற வேண்டியிருந்தது. இப்போது இந்தியா உலக சாம்பியன்ஷிப் போட்டியை 2025 இல் நடத்த உள்ளது. இந்த சாம்பின்ஷிப் போட்டி மூலம் 1.5 மில்லியன் டாலர் நிதி திரட்ட முடியும் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம். PRID அசோக் மஹாஜன் உதவி மற்றும் ஆதரவில் ராஜஸ்ரீ பிர்லாவின் ஆதித்ய பிர்லா அறக்கட்டளை மூலம் 1,00,000 டாலர் நிதி பெற முயன்று வருகிறோம் என்று ஷெத் தெரிவித்தார். அடுத்த IGFR போட்டி இத்தாலியில் ஜூலை 1 முதல் 7ம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்த கோல்ஃப் நிகழ்ச்சிகள் மூலம் நிதி எவ்வாறு திரட்டப்படுகிறது என்று பார்த்தோம். இந்த போட்டி களில் பங்கேற்க விரும்பும் கோல்ஃப் வீரர்கள் குறைந்தபட்சம் 50 டாலர் பங்களிப்புச் செய்ய வேண்டும். இதில் அதிகம் பங்களிப்புச் செய்பவர்களும் இருக்கிறார்கள். 1,000 டாலர் நன்கொடையாக வழங்குபவர்களுக்கு ஆதரவாளர்கள் பிரிவு வழங்கப்படும். ஏகேஎஸ் உறுப்பினரான நானும், நவ்ஜீத் சாவ்லாவும் 25,000 டாலர்கள் நன்கொடையாக அளித்துள்ளோம்.

வரும் 2023ம் ஆண்டு பிப்ரவரியில் நடைபெற உள்ள RI தலைவர் கோப்பைக்கான போட்டியில் 50 நாடுகளைச் சேர்ந்த 5,000த்துக்கும் மேலான வீரர்களை களத்தில் இறக்க திட்டமிட்டுள் ளோம். ஏறக்குறைய 300 கோல்ஃப் மைதானங்களில் இப்போட்டிகள் நடைபெறும். இந்த விளையாட்டு வீரர்கள் அனைவரும் பல்வேறு பகுதிகளில் விளையாடுவார்கள். அனைவரும் ஆன்லைன் மூலம் பெயரை பதிவு செய்வார்கள். ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் 50 டாலர் பங்களிப்புச் செய்வார்கள். இந்த தொகை TRFக்கு சென்று விடும். முடிவுகள் மற்றும் இதர விவரங்கள் ஆன்லைன் மூலம் வெளியிடப் படும்.

*2023ம் ஆண்டு நடைபெற உள்ள போட்டியில் 50 நாடுகளிலிருந்து 5000 கோல்ஃப் வீரர்கள் 300 கோல்ஃப் மைதானங்களில் விளையாடுவார்கள்.*

தொற்றுக்காலத்தில் பெரும்பாலான கோல்ஃப் மைதானங்கள் மூடப்பட்டிருந்த போதிலும், SAFGR புதுமையான திட்டத்தின் மூலம் உறுப்பினர் களைத் தெரிந்து கொள்ளுங்கள் என்ற வகையில் தொடர்பு கொண்டு கோல்ஃப் வீரர்கள் பரிமாற்றத் திட்டத்தை செயல் படுத்தினோம். ஒரு கோல்ஃப் வீரர் உலக அனுபவங்கள் பெற SAFGR உதவி தேவை என்பதை இதன் மூலம் உணர்த்தி யுள்ளோம் என்று புன்னகையுடன் குறிப்பிட்டார் ஷெத். ■

# உறுப்பு தானத்தை ஊக்குவிக்கும் பாதையில்

**ஜெய்ஸ்ரீ**

அலாஸ்கா நெடுஞ்சாலையில் ஒரு தொடர் கொலையாளியால் துரத்தல், அரசியல் சர்ச்சைகள் கொண்ட ஒரு பகுதி வழியாக ஓட்டம்... மற்றும் கோவிட் தோற்றுநோயுடன் நான்கு முறை போராட்டம், இவை எதுவும் அனில் ஸ்ரீவத்சாவை உடல் உறுப்பு தானம் குறித்த உலகளாவிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும், அதைச் சுற்றியுள்ள தடைகளை உடைப்பதற்குமான அவரது வாழ்க்கையின் நோக்கத்தைத் தடுக்க முடியவில்லை. RIPE கார்டன் மெக்கினலி மற்றும் RI இயக்குநர்கள் மகேஷ் கோட்பாகி மற்றும் A S வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் ஜூன் மாதம் ஹூஸ்டன் ரோட்டரி மாநாட்டில் அப்போதைய RI தலைவர் சேகர் மேத்தாவால் கொடியசைக்கப்பட்டு ஆரம்பித்தவர், இப்போது மே 2023 இல் ரோட்டரி மாநாட்டில் பங்கேற்க மெல்போர்னை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்.

சிறுநீரக தானம் செய்தவரான ஸ்ரீவத்சா (54), RC மெட்ராஸால் ஸ்பான்சர் செய்யப்பட்ட RC ஆர்கன் டோனேஷன், RID 3232 இன் பட்டயத் தலைவர். அவர் ஏழு ஆண்டுகளாக, 48 நாடுகளில் பயணம் செய்து உறுப்பு தானத்திற்கான ஆதரவை சேகரித்து வருகிறார். செப்டம்பர் 2014ல், அவர் தனது சிறுநீரகங்களில் ஒன்றை நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரான தனது சகோதரர் அர்ஜுன் ஸ்ரீவத்சாவுக்கு தானம் செய்தார், இச்செயல் உறுப்பு தானத்தை மேம்படுத்துவதற்கான ஆர்வத்தைத் தூண்டியது. எனது குடும்பத்தினரின் ஆதரவு எனக்கு அதை செய்ய






*PRIP சேகர் மேத்தா மற்றும் RI இயக்குனர் A S வெங்கடேஷ் அவர்களுடன் ஹூஸ்டன் மாநாட்டில் ஸ்ரீவட்சா.*



*RC ஆர்கன் டொனேஷன், RID 3232, தலைவர் அனில் ஸ்ரீவட்சா தனது SUV யுடன்.*

தைரியத்தை அளித்தது. அறுவை சிகிச்சைக்கு மூன்று வாரங்களுக்குப் பிறகு அவர் ஒரு நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணராக தனது பணியைச் செய்து உயிர்களைக் காப்பாற்ற ஆரம்பித்து விட்டார். நான் காப்பாற்றியிருக்கக்கூடிய மிகச் சிறந்த வாழ்க்கை அவருடையது தான்.

### அவரது அறக்கட்டளை

மாற்று அறுவை சிகிச்சையின் வெற்றியால் உற்சாகமடைந்த ஸ்ரீவத்சா, உலகெங்கிலும் உள்ள ஒரு மில்லியன் மக்களை உறுப்பு தானத்திற்கு பதிவு செய்ய “கிஃப்ட் ஆஃப் லைஃப் அட்வென்ச்சர் (GOLA) டிரைவ் – மில்லியன் டோனர் திட்டம்”தொடங்கினார். ஏப்ரல் 2016 இல், உறுப்பு தானம் செய்பவர்களின் விழிப்புணர்விற்கான நீண்ட பாதை என்று அழைக்கப்பட்ட முதல் கட்டத்தைத் தொடங்கிய அவர், தனது மனைவி தீபாலி, குழந்தைகள் காவ்யா மற்றும் சூர்யா மற்றும் அவரது மூன்று நண்பர்களுடன் பெங்களூருவிலிருந்து 17 நாடுகளைக் கடந்து ஸ்காட்லாந்திற்குச் சென்றார்.

உறுப்பு தானம் செய்வதில் மக்களிடையே உள்ள அச்சம் குறித்து அறிந்ததும் அவர் இந்த பயணத்தை தொடங்கினார். உறுப்பு தானம் செய்வதில் வரும் பயத்தை நான் அழிக்க விரும்பினேன். அறியாமை, மூடநம்பிக்கை, தவறான மத நம்பிக்கைகள் மற்றும் அன்பின்மை ஆகியவற்றிலிருந்து இந்த பயம் வருகிறது. உறுப்பு தானம் என்பது அன்பின் செயல், அன்பு இல்லாத போது அதை ஒருவரால் செய்ய இயலாது. இதற்கு குடும்பத்தினருடன் பேசுவதே சிறந்த வழி ஏனெனில் யாரேனும் உறுப்பு தானம் செய்ய விரும்பினால் சட்டப்பூர்வமாக அவர் குடும்பத்தாரின் சம்மதம் அவசியம்.

இரண்டாவது பயணத்தில் 20 நாடுகளுக்குச் சென்ற அவர், மூன்றாவது பயணத்தில் இத்தாலி, சீனா, நார்வே, மியான்மர், உஸ்பெகிஸ்தான், போஸ்னியா, துபாய் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

### ஒரு மாநாட்டில் இருந்து மற்றொரு மாநாட்டிற்கு

இப்போது நான்காவது பயணத்தில், ஸ்ரீவத்சா 17 நாடுகளைக் கடந்து, 56,000 கிமீ சவாரி செய்து ஆஸ்திரேலியாவின் பெர்த்தை அடைந்து, ஏப்ரல் 2023ல் நடைபெறும் உலக மாற்று விளையாட்டுப் போட்டிகளில் (WTG) பந்து வீசுதல் மற்றும் நீச்சலில் இந்தியாவின் சார்பாக பங்கேற்க உள்ளார், பின்னர்

மெல்போர்னில் நடைபெற உள்ள ரோட்டரி மாநாட்டில் தன் பயணத்தை நிறைவு செய்கிறார். அவர் நியூகேஸிலில் நடைபெற்ற 2019 WTGல் பந்து வீசுதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவர் மற்றும் 100மீ ஓட்டப்பந்தயத்திலும் பங்கேற்றுள்ளார். அப்போது கோல்ப் போட்டியில் தங்கம் வென்ற அவரது சகோதரரும் இந்த ஆண்டு பங்கேற்கிறார்.

WTG என்பது ஒலிம்பிக் விளையாட்டு போன்றது, ஆனால் உறுப்பு தானம் பெற்றவர்கள் மற்றும் செய்தவர்களுக்கானது, மாற்றுத்திறனாளிகளுக்கான பாராலிம்பிக்ஸைப் போல. இது WTG கூட்டமைப்பால் நடத்தப்படுகிறது. இதில் 60 நாடுகள் பங்கேற்கிறது. “இது, மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னிலைப்படுத்தி காட்டுவதற்காகும். உறுப்பு தானம் செய்த ஒருவர் விளையாட்டு வீரராக இருப்பது அதற்கான சிறந்த உதாரணம். ஒருவரின் உயிரைக் காப்பாற்ற உறுப்புகளைத் தானம் செய்ய மக்களைத் தூண்டுவதை விட சிறந்த சேவை எதுவும் இல்லை என்று ரேடியோவல்லா நெட்வொர்க்கின் CEO மற்றும் இணை நிறுவனரும், கிங்ஸ் XI பஞ்சாபின் முன்னாள் CEOவுமான பெங்களூரைச் சேர்ந்த இந்த பிரச்சாரகர் கூறுகிறார்.

### நற்காரணத்திற்காக ரோட்டரியை ஒன்றிணைத்தல்

ஹூஸ்டனில் இருந்து அலாஸ்கா மற்றும் அர்ஜென்டினாவுக்கு காரில் சென்ற ஸ்ரீவத்சா வழியில் ரோட்டரி சங்கங்களில் உரையாற்றினார். போலியோவை ஒழிப்பதில் நாம் எவ்வாறு இணைந்து செயல்பட்டோம் அதை போல, உறுப்பு தானத்தில் அதிக கவனம் செலுத்தவும், உறுப்புக்காகக் காத்திருக்கும் யாரும் இறக்காத காலத்தை நோக்கிச் செயல்படவும், உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்களை ஒன்றிணைக்க விரும்புகிறேன். தனது முந்தைய பயணங்களில் 250க்கும் மேற்பட்ட சங்கங்களில் உரையாற்றிய அவர் 100 ரோட்டரி சங்கங்களுடன் பேச வாக்குறுதி அளித்தார். “ஹொண்டுராஸில் உள்ள RC சான் பெட்ரோ சூலாவில் பேச அழைக்கப்பட்டபோது நான் அந்த இலக்கை அடைந்தேன்.” இங்கு அவர் நகரின் ஒரே மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ராபர்டோவை RC ஆர்கன் டோனேஷன்-ல் சேர்த்தார். அந்த சங்கம் ஆறு நாடுகளில் இருந்து 26 உறுப்பினர்களுடன் பட்டயப் படுத்தப்பட்டது. ஸ்ரீவத்சா இந்த பயணத்தின் மூலம் ஆர்வலர்கள், மருத்துவர்கள் மற்றும் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்களை தனது சங்கத்தில் சேர்த்து வருகிறார். “கடந்த இரண்டு வாரங்களில் உறுப்பு தானத்தில் ஆர்வமாக கொண்ட நடிகை ரேவதி உட்பட ஐந்து உறுப்பினர்களைச் சேர்த்துள்ளோம்.” அவர் இயக்கிய ‘சலாம் வெங்கி’ திரைப்படம் உறுப்பு தானம் பற்றியது மற்றும் RID 3232ல் நிதி திரட்ட அப்படம் திரையிடப்பட உள்ளது.

அவரது மனைவி தீபாலி தன்னால் முடிந்த போதெல்லாம் அவருடன் சேர்ந்து பயணிக்கிறார். மேலும் பணத்தை மிச்சப்படுத்துவதற்காக பயணத்தின் பெரும்பகுதியில் அவர்கள் வாகனத்தில் வசித்தும், சமைத்தும் பயணித்தனர். நிலப் பரப்பின் அடிப்படையில் இந்த பயணத்தில் மூன்று வாகனங்களை அவர் பயன்படுத்துகிறார்.

ஆகஸ்ட் மாதம், நியூ ஜெர்ஸியின் எடிசன் நகரில் நடந்த இந்திய தின அணிவகுப்பில் GOLA குழு பங்கேற்றது, எங்கள் டிரக் உடல் உறுப்பு தான செய்தியை காண்பிக்கும் ஃப்ளோட்டாக அணி வகுத்தது. நாங்கள் சில டி-ஷர்ட்களை கூட்டத்திற்குள் வீசி உறுப்பு தானம் பற்றி பேச அவர்களின் கவனத்தை ஈர்த்தோம்.

பிப்ரவரி 2ம் தேதி, RIPN ஸ்டெபானி உர்ச்சிக் அவரது சங்கத்தில் “தலைவராக தனது திட்டங்கள் மற்றும் உறுப்பு தானம் செய்வதில் ரோட்டரி எவ்வாறு ஒரு பங்கை வகிக்க முடியும்” என்று விவாதிக்க ஆன்லைனில் உரையாற்றுகிறார். சட்டப் பூர்வமான உறுப்பு தான கொடையாளர்கள் கொண்ட வசதியற்ற 100 பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்ட “லிஃப்ட் அப் ப்ராஜெக்ட்டை” மேற்கொள்வதற்காக



*மனைவி தீபாலியுடன்.*



*ஸ்ரீவட்சா ஒரு ரோட்டரி சங்கத்தில் உரையாற்றுகிறார்.*

அவரது சங்கம் ஒரு GGக்கு விண்ணப்பம் செய்துள்ளது.

அவரது பயணத்தின் போது அவரிடம் கேட்கப்படும் பொதுவான கேள்வி: உறுப்பு தானம் அளித்த பிறகு கொடையாளருக்கு என்ன நடக்கும்? அல்லது அதிக மூடநம்பிக்கையான ஒரு கேள்வி - தானம் செய்பவர் அடுத்த பிறவியில் அதே உறுப்பை இல்லாமல் பிறப்பார்களா? “நான் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு செல்கிறேன், ஏனெனில் இளம் தலைமுறையினரிடையே விழிப்புணர்வைப் பரப்புவது மிகவும் முக்கியமானது,'' என்று அவர் கூறினார். ரிஷிகேஷில் நடந்த கங்கா ஆரத்தியின் போது பொது மக்களிடம் உரையாற்றியுள்ளார், காஷ்மீர் பள்ளத்தாக்கில் இந்திய ராணுவத்திற்காக ஒரு அமர்வையும் நடத்தியுள்ளார். மக்களை பதிவு செய்ய வைப்பது மிகவும் கடினம். இறந்த பிறகு, உறுப்பு தானம் செய்வதில் உறவினர்கள் மட்டுமே எந்த முடிவையும் எடுக்க முடியும், நன்கொடையாளர் தனது வாழ்நாளில் தனது முடிவை அவர்களிடம் தெரிவித்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். யாராவது உறுப்பு தான வங்கியில் பதிவு செய்திருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் இறப்பு வங்கிக்கு அவர்கள் இறப்பு பற்றி தெரிவிக்கப்படுவதில்லை.என கூறினார்,



*சாலையோரத்தில் தீபாலி சமையல் செய்கிறார்.*

எனது பணி உயிருடன் அல்லது இறந்த ஒருவருக்கு வாழ இரண்டாவது வாய்ப்பைக் கொடுக்கலாம். இது எனக்கு தரும் முக்கியமான விஷயம் அன்பின் மீதான நம்பிக்கையை மீண்டும் நிலைநிறுத்துவதாகும். அன்பு இல்லாமல் இருந்திருந்தால் இது என்னால் சாத்தியமாகியிருக்காது. ஒருவர் எவ்வாறு நிறைவான வாழ்க்கையை வாழ முடியும் என்பதை நான் உலகுக்குச் சொல்ல விரும்புகிறேன், என்று அவர் கூறினார்.

ஸ்ரீவத்சா சகோதரர்கள் ரோட்டரியின் யூத் எக்ஸ்சேஞ்ச் திட்டத்தின் பயனாளிகள் மற்றும் ஒரு ரோட்டேரியன் குடும்பத்தில் இருந்து வருபவர்கள். அவரது சகோதரர் டாக்டர் அர்ஜுன் மற்றும் தாயார் RC பெங்களூர் உறுப்பினர்கள்.■

# ஊனமுற்ற குழந்தைகளை படகு சவாரி மூலம் உபசரித்த RC ஆலப்பி

ரஷீதா பகத்

அலெப்பியில் உள்ள கேரள அரசு நிறுவனமான அம்பலபுழா பிளாக் ரிசோர்ஸ் சென்டரில் (BRC) உள்ள 45 உடல் மற்றும் மனநல குறைபாடுள்ள குழந்தைகளுக்கு இந்த தீபாவளி மறக்கமுடியாத அனுபவமாக மாறியது. அவர்களின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் சேர்ந்து, அவர்கள் ஆடம்பர படகு ஸ்காவில் வேம்பநாடு ஏரியின் அமைதியான நீரில் மகிழ்ச்சியான சவாரி வழங்கப்பட்டது, இது பொதுவாக வசதியான அல்லது கார்ப்பரேட் உலகின் விருந்தினர்களுக்கு மட்டுமே வழங்கபட்டு வருகிறது.

ஆனால் சுமார் 130 குழந்தைகள் மற்றும் பெரியவர்கள், ஒரு எம்.எல்.ஏ., சுமார் 25 ரோட்டேரியன்கள் மற்றும் இன்னும் சிலர் கொண்ட இந்த குழு ஸ்காவின் உரிமையாளரும், ரோட்டரி கிளப் ஆஃப் அலெப்பியின் தலைவருமான ஜோஸ் ஆபிரகாமின் பெருந்தன்மையால் இந்த அனுபவத்தை பெற முடிந்தது. ஆலப்புழாவிலிருந்து 6 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள



*நாட்டுப்புற பாடகர் புன்னப்பரா ஜோதிகுமார் அவர்களுடன் MLA H சலாம் குழந்தைகளை மகிழ்விக்கின்றனர்.*





RC ஆலப்பி தலைவர் ஜோஸ் ஆப்ரஹாமுடன் சங்கத்தினர் மற்றும் குழந்தைகளும் பெற்றோர்களும்.

கேரளாவின் தானியக் களஞ்சியமான குட்டநாட்டிலிருந்து சவாரி செய்த குழந்தைகள், இசை மற்றும் நடனம் மட்டுமின்றி, சமையல் திறமையும் பெற்ற சங்கத்தலைவர் ஜோஸ் அவர்களே தயாரித்த சுவையான உணவையும் உண்டு மகிழ்ந்தனர்.

ஆடம்பரமான மாநாட்டு அறையைக் கொண்ட ஸ்காவின் மேல் தளத்தில் சுமார் 250 பேர் தங்கலாம், ஒரு நாள் பயணத்திற்கு ஒரு நபருக்கு கட்டணமாக ரூ.700 மற்றும் வரிகள் வசூலிக்கப்படுகிறது. வரவேற்பு பானம் மற்றும் மதிய உணவும் இதில் அடங்கும்.

சங்கத்தலைவராக தனது ஓர் ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில், ஆபிரகாம் பல திட்டங்களைத் தொடங்கினார், இதில் 50 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.2,000 உதவித்தொகையாக ரூ.1 லட்சத்தை சங்கம் செலவிடும். எனக்கு ஒரு படகு சொந்தமாக உள்ளது என்பதால், பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த ஊனமுற்ற குழந்தைகளுக்கு ஒரு வேடிக்கையான மகிழ்ச்சியான நாளை ஏற்பாடு செய்ய விரும்பினேன். எனவே நாங்கள் BRCயைத் தேர்ந்தெடுத்தோம், மேலும் 45 குழந்தைகள், அவர்களின் ஆசிரியர்கள் மற்றும் உறவினர்களை அழைத்தோம்.

கலகலப்பான இசை, பாடல்கள் மற்றும் குழந்தைகளின் மகிழ்ச்சியான சிரிப்பு, கைதட்டல் மற்றும் நடனம் ஆகியவற்றின் ஒலி தண்ணீரில் எதிரொலித்தது. பிரபலமான உள்ளூர் மற்றும் நாட்டுப்புற பாடல்கள் இசையுடன் பாடப்பட்டதால், குழந்தைகள் பாடவும் நடனமாடவும் தொடங்கி, அவர்களுக்காக வைத்திருந்த சுவையான மதிய உணவிற்கு ஆரோக்கியமான பசியை தூண்டிக் கொண்டனர்.

இந்த மதிய உணவின் முக்கிய உணவுகளான மீன் மற்றும் கோழி – ஜோஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டது, அவர் “சமைப்பதில் எனக்கு மிகவும் ஆர்வம்; நான் அடிக்கடி என் மனைவிக்கு உதவுவேன், நான் செய்யும் உணவு என் மகன் மற்றும் மகள் இருவருக்கும் பிடிக்கும் என்பதால், இந்த குழந்தைகளுக்கும் சமைக்க வேண்டும் என்று நினைத்தேன், என்று அவர் புன்னகைக்கிறார்.

ஒரு 10 வயது சிறுவன் முன்புறம் ஏறி, நாட்டுப்புற பாடகரின் கையிலிருந்து மைக்கை எடுத்து, தனது சொந்த மெல்லிசை குரலில் பாடினான், இது அனைவரையும் மகிழ்வித்தது. அவன் அடுத்ததாக சங்கத்தலைவர் மடியில் ஏறிக் கொண்டான், மற்ற குழந்தைகள் பாடவும் நடனமாடவும் தொடங்க, ரோட்டேரியன்களும் அவர்களுடன் சேர்ந்து, எம்.எல்.ஏ. H சலாம், ஜோஸுடன் இணைந்து, உரத்த குரலில் பாடல்களை பாடினார்கள்.

குழந்தைகள் கொண்டாட்டங் களின் மத்தியில், சங்கத்தின் முன்னாள் தலைவர் டோமி



ஈப்பனிடம் ஒரு தாய், கண்ணீருடன், இந்த குழந்தைகளும் அவர்களின் பெற்றோரும் படகில் செல்வது இதுவே முதல் முறை என்று கூறினார். இந்த நிகழ்வு அவர்களுக்கு ஒரு அதிசயமான கனவை போல இருந்தது. தனது 52 ஆண்டுகால ரோட்டரி பயணத்தில், எந்த ஒரு சேவை திட்டத்திலும் இதுபோன்ற மகிழ்ச்சி மற்றும் உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டதை நான் பார்த்ததில்லை என்றும் அவர் கூறினார்.

இந்தக் குழந்தைகளுக்கு இன்னும் என்ன தேவை என்று அறிய ஆபிரகாம் ஆர்வமாக இருந்தார். பின்னர் அவர் ரோட்டரி நியூஸிடம், இரண்டு அடி உயரம் கூட இல்லாத 18 வயது சிறுமிகள் இருவர் இருப்பதைக் கண்டேன். அவர்களின் மையத்தில் உள்ள கழிப்பறையை பயன்படுத்த முடியாமல் மிகவும் சிரமப்பட்டனர். எனவே அவர்களின் தேவைக்கேற்ப பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட கழிவறையை ரூ.60,000 செலவில் கட்டி வருகிறேன் என்றார்.

இந்த நிகழ்வின் மாபெரும் வெற்றியால் உற்சாகமடைந்த அவர், அடுத்ததாக மூத்த குடிமக்கள் குழுவை இதேபோன்ற மகிழ்ச்சியான சவாரி மற்றும் ஒரு நாள் வேடிக்கைக்காக தனது படகில் அழைத்துச் செல்ல திட்டமிட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், தங்கள் சங்கம் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான மற்றொரு சேவையைத் தொடங்கியுள்ளது, அதன் கட்டிடத்தில் மானிய விலையில் ஒரு கற்றல் மையம் ஒன்றை வழங்குகிறது என்று ஈபன் கூறினார். இங்கு சுமார் 30 குழந்தைகள் பயிற்சி பெறுகின்றனர்.■



*MLA H சலாம் ஒரு பெண்ணிடம் பேசுகிறார். உடன் சங்கத்தலைவர் ஜோஸ் ஆப்ரஹாம் உள்ளார்.*

# ரோட்டரி தலைவர்கள் இந்தியக் குடியரசுத் தலைவரைச் சந்தித்தார்கள்

ரோட்டரி செய்திக் குழு

அக்டோபர் 31 அன்று தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் முன்னாள் RI தலைவர்கள் ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி, முன்னாள் RI இயக்குநர் அசோக் மகாஜன், இந்திய தேசியப் போலியோப்ளஸ் குழுத் தலைவர் தீபக் கபூர், PDG D N பதி (RID 3262) உள்ளிட்ட ரோட்டரி மூத்த தலைவர்களுடைய பிரதிநிதிக் குழு ஆதித்யா பிர்லா சமூக முன்னெடுப்புகள், கிராமப்புற மேம்பாட்டு மையத்தின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லாவுடன் இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களைச் சந்தித்தது.



*குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஆதித்யா பிர்லா சமூக முன்னெடுப்புகள் மையத்தின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லாவை கௌரவிக்கிறார். உடன் INPPC தலைவர் தீபக் கபூர், PRIP ராஜேந்திர சாபூ, PDG D N பதி, PRID அஷோக் மகாஜன் மற்றும் PRIP கல்யாண் பானர்ஜி ஆகியோரும் உள்ளனர்.*

பல ஆண்டுகளாக இளம்பிள்ளை வாதத்தை அகற்றும் முயற்சி களுக்கென TRFக்கு $13 மில்லியனுக்கு மேல் பங்களித்த ராஜஸ்ரீ அவர்களைப் பெருமைப் படுத்தும் ரோட்டரியின் அங்கீகாரத்தைக் குடியரசுத் தலைவர் அவருக்கு வழங்கினார், அவருடைய தாராள மனப்பான்மையைப் பாராட்டினார். இந்தியாவிலும் உலகெங்கும் சமூகங்களை மாற்றும் பெரிய மனிதத்தன்மைத் திட்டங்களை நடத்தும் பிரதிநிதிகளையும் அவர் பாராட்டினார். ■

Rotary PEOPLE OF ACTION

# இளம் உயிர்களைக் காப்பாற்றுதல்



*இதய அறுவை சிகிச்சைக்குப் பின் ஷிவாய்.*

RC முஜாஃபர்நகர் சங்க்ரிதி, RID 3100, சென்ற ஆண்டு குழந்தைகள் இதய அறுவைச் சிகிச்சைத் திட்டம் ஒன்றை ராஜீவ் சிங்கால் தலைமையில் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், பிறவி இதய நோய்களைக் கொண்ட குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு, நோய்டாவில் உள்ள அரசு மருத்துவமனையாகிய PGICHல் அவர்கள் சிகிச்சை பெற உதவி வழங்கப்படும். CHD அறுவைச் சிகிச்சையை இலவசமாகப் பெற மருத்துவ மனைக்குச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களை வழங்க ரோட்டரியன்கள் பெற்றோர்களுக்கு உதவு வார்கள்.

இந்தத் திட்டத்தின்கீழ் பலன் பெற்ற முதல் குழந்தை, ஷாம்லியைச் சேர்ந்த ஷிவாய். இந்தச் சங்கம் மேலும் எட்டுக் குழந்தைகளை இதய அறுவைச் சிகிச்சைக்குத் தேர்ந்தெடுத்துள்ளது, இந்த மாவட்டத்தில் உள்ள எல்லா ரோட்டரி சங்கங்களும் CHD உள்ள குழந்தைகளை இந்தத் திட்டத்தின் மூலம் பலன் பெற அனுப்பும் படி இந்தச் சங்கம் கேட்டுக் கொள்கிறது. ■

# விவசாயிகளுடைய வருவாயை மேம்படுத்தும் சூரிய ஒளி உலர்த்திகள்

ஜெய்ஸ்ரீ

விவசாயிகள் தாங்கள் கஷ்டப்பட்டு வளர்த்த காய்கறிகள்/பழங்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்பதால் அவற்றை நெடுஞ் சாலைகளில் எறிவது அல்லது அவற்றைத் தங்கள் நிலங்களில் அழுகவிடுவது போன்ற செய்திகளைப் பார்க்கும்போது அல்லது கேட்கும்போது நெஞ்சம் கனக்கிறது. பல நேரங்களில், இடைத் தரகர்கள் விளைபொருட்களுக்குக் குறைந்த விலைதான் சொல்கிறார்கள், அதனால் வருந்திய விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நஷ்டத்தில் விற்காமல் தூக்கி எறிந்து விடுகிறார்கள்.

இப்போது, ஹைதராபாத் அருகில் உள்ள கட்டங்குர் கிராமத்து விவசாயிகள் தங்களுடைய விற்பனை யாகாத விளைபொருட்களை வீணாக்கவேண்டியதில்லை. ஏனெனில், அவர்களுடைய சங்கத்துக்கு ரோட்டரி சூரிய ஒளி உலர்த்தி ஒன்றை வழங்கியுள்ளது. ஸ்மார்ட் ஹைதராபாத் மற்றும் ஹைதராபாத் டெக்கான் ரோட்டரி சங்கங்கள், RID 3150, சமீபத்தில் இந்தக் கிராமத்தின் விவசாயிகள் உற்பத்தியாளர்கள் அமைப்புக்கு (FPO) சூரிய ஒளி உலர்த்தி ஒன்றை ஆதரித்துள்ளது.

நீர்மத்தை நீக்கும் இந்தக் கருவி காய்கறிகளிலிருந்து ஈரப்பதத்தை அகற்றி, கெட்டுப்போகாமல் தடுக்கிறது, இதன்மூலம் அவற்றின் வாழ் நாளை மிகுதியாக்குகிறது. “இந்தக் கிராமத்தில் இப்போது இது முதன்மையாகத் தக்காளி, எலுமிச்சை, மாம்பழங்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படுகிறது’’ என்கிறார் RC ஸ்மார்ட் ஹைதராபாத் உறுப்பினர் ஷாந்திகுமார்.

“விவசாயிகள் தங்களுடைய ஒட்டுமொத்த விளைபொருட் களையும் நாங்கள் இந்தக் கருவியை நிறுவியுள்ள FPO வளாகத்துக்குக் கொண்டுவந்து நீர்மம் நீக்குகிறார்கள். உலர்த்தும் செயல்முறைக்கு 48 மணிநேரம் ஆகிறது. நீர்மம் நீக்கும் இந்தக் கருவி, மாம்பழங்கள் போன்ற பருவப் பழங்களைச் சேமித்து வைத்து, பழக்கூழ் அல்லது சுவையூட்டி செய்ய அவற்றைப் பெருநிறுவனங்களுக்கு விற்பதற்கு அவர்களுக்கு உதவு கின்றன. “உலர்த்தி வழங்குநர் FPOவிடமிருந்து பதம் செய்யப்பட்ட பொருட்களை வாங்கி அவற்றை உணவுத் தொழில்துறைக்குச் சந்தைப்படுத்த ஒப்புக்கொண்டுள்ளார்’’ என்கிறார் ஷாந்திகுமார். இந்த கருவியின் உபயோகத்தால் விவசாயிகளின் வருவாய் குறைந்தது 25% பெருகும்’’ என்று அவர் தொடர்ந்து கூறுகிறார்.

உலர்த்தியின் உண்மை விலை ரூ.8 லட்சம். NABARD மானியத் துக்குப் பிறகு, இந்தச் சங்கம் அதை ரூ.1.2 லட்சத்துக்குப் பெற்றது. இந்த FPO தன் வளாகத்தில்

*RID 3150 DGN ஷரத் சௌத்ரி (வலதிலிருந்து 4வது) மற்றும் திட்டத்தலைவர் சாந்திகுமார் (வலதிலிருந்து 3வது) மற்றும் இரு சங்கத்தினர் கட்டங்கூர் கிராம FPOவில்.*





DGN *சௌத்ரி எலுமிச்சம் பழங்களை பதப்படுத்துவது பற்றிய விளக்கத்தை கேட்கிறார்.*

விவசாய விளைபொருட்களின் குளிர் சேமிப்புக்கு நான்கு சூரிய ஒளிக் குளிர்பதனப் பெட்டிகளை நிறுவியுள்ளது. ஒரு கடன் மற்றும் NABARD மானியம் ஒன்றின் உதவியுடன் இது ரூ.15 லட்சத் துக்கு வாங்கப்பட்டது. "இப்போது, இந்த FPO கிராமப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்குத் தன் வளாகத்தில் ஊறுகாய் செய்தல் போன்ற பதப்படுத்தப்பட்ட உணவுப் பிரிவு ஒன்றை நாங்கள் அமைக்கவேண்டும் என்று விரும்புகிறது. இந்தப் பிரிவிலிருந்து உருவாக்கப்படும் வருவாயைப் பயன்படுத்திக் கடனைத் திரும்பச் செலுத்தலாம்'' என்கிறார் இவர். இந்த FPO ஹைதராபாதிலிருந்து 120 கிமீ தொலைவில் கட்டங்குர் என்ற இடத்தில் 3 ஏக்கர் நிலத்தில் உள்ளது. ■

## பெண்களுக்கு வீட்டில் புற்றுநோய்ப் பரிசோதனைக்கு ஆவன செய்த RID 2982

### ரோட்டரி செய்திக் குழு




RI *தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் 'மலர்' திட்டத்தை சென்னையில்* RI *இயக்குனர்கள்* A S *வெங்கடேஷ் மற்றும் மகேஷ் கோட்பாகி,* DG P *சரவணன் (வலதிலிருந்து 3வது) மற்றும் அவர் மனைவி விஜயா முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.*

RID 2982 தமிழ் நாட்டில் ஓசூர் அருகில் உள்ள சூலகிரியில் இருக்கும் தொடக்க நல மையம் ஒன்றுக்குத் தன்னுடைய "மலர்" திட்டத்தின்கீழ் மூன்று நடமாடும் நலப் பராமரிப்புக் கருவிகளை வழங்கியுள்ளது. இவை கருப்பை வாய்ப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், குழந்தைகளுடைய கேட்டல் குறைபாடுகளைப் பரிசோதிக்கும். இதற்கான பயிற்சி யையும் மைய ஊழியர்களுக்கு இந்தச் சங்கம் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தை RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் தன்னுடைய சென்னை வருகையின்போது மென்தொடக்கம் செய்துவைத்தார். ஓசூர் மாவட்டத்தைச் சுற்றியுள்ள சுமார் ஒரு லட்சம் பெண்களுக்கு நன்மை அளிக்கும் இந்தத் திட்டத்தை RCகள் திருச்செங்கோடு ரெட்ராக், ஓசூர் சிப்காட், ஓசூர் ஏஞ்செல்ஸும், பெங்களூரைச் சேர்ந்த நலப் பராமரிப்புத் தீர்வுகள் வழங்குநராகிய ஜென்வொர்க்ஸ் ஹெல்த்தும் ஒருங்கிணைத்ததாக உதவி ஆளுநர் பிரதீப் கிருஷ்ணன் தெரிவித்தார். இந்த இயந்திரங்கள் பெண்களை அவர்களுடைய வீட்டிலேயே மருத்துவ ஊழியர்கள் பரிசோதிக்க உதவும் என்றும் அவர் விளக்கினார்.

தொடக்கத்தில் ரோட்டரி சங்கங் கள் கிராமங்களில் மாதந்தோறும் மூன்று விழிப்புணர்வு முகாம்களை நடத்தி மக்களுக்கு இந்த இயந்திரங் களைப் பழக்கப்படுத்தும். "எங்கள் இலக்கு, அடுத்த 2 ஆண்டுகளில் மேலும் 50 PHCக்களுக்கு இந்தக் கருவிகளை வழங்குவது தான்'' என்கிறார் இவர். ■

# மும்பை பள்ளி குழந்தைகளுக்கு மதிய உணவு

கிரண் ஜெஹரா

மும்பையில் உள்ள அரசு உதவி பெறாத சரஸ்வதி வித்யா மந்திர் பள்ளியில் 3ம் வகுப்பு படிக்கும் மாணவி தீபாலி, கடிகாரத்தையே வெறித்து பார்த்துக் கொண்டிருந்தபோது பலமுறை பிடிபட்டார். நான் கூப்பிடுவதைக்கூட கவனிக்காமல் அவள் கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருப்பாள் என்கிறார் அவளின் வகுப்பு ஆசிரியை ஸ்வீட்டி சிங். சொல்லிக் கொடுக்கும் பாடத்தை கவனி என்று சொன்னால் புத்தகத்தை பார்ப்பாள்; ஆனால், ஆசிரியை வேறு பக்கம் பார்க்கும்போது அவளின் கவனம் மீண்டும் கடிக்காரத்தின்மீதே செல்லும்.

என் அம்மா, எனக்கு காலை உணவாக ஒரே ஒரு ரொட்டித் துண்டை மட்டும் தருகிறார். அதனால்தான் நான் மதிய உணவுக்கு நேரமாகிவிட்டதா என அடிக்கடி கடிகாரத்தை பார்க்கிறேன். மதிய உணவு இடைவேளையில் நான் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்கிறார் தீபாலி. ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களில் பலர் காலை உணவு சாப்பிடாமல் உள்ளனர் என்று கூறிய ஸ்வீட்டி, இந்த மாணவர்களுக்கு RID 3141க்கு உட்பட்ட மும்பை வெஸ்ட் எலைட் ரோட்டரி சங்கம், தினமும் மதிய உணவு வழங்கி வருகிறது. குழந்தைகள் எவ்வளவு வேண்டுமோ கேட்டு வாங்கி சாப்பிடலாம். அதற்கு எந்த தடையும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.



2016–17ம் ஆண்டில், அரசு உதவி பெறாத ஒரே ஒரு பள்ளியில் மட்டும் தொடங்கப்பட்ட திட்டம் இன்று நான்கு பள்ளிகளாக விரிவடைந்துள்ளது. தினமும் 450 மாணவர்கள் மதிய உணவு சாப்பிட்டு வருகின்றனர். இந்த நான்கு பள்ளி களிலும் மதிய உணவு திட்டத்தைச் செயல்படுத்த ஆண்டுக்கு ரூ.23 லட்சம் செலவாகிறது. இதற்கான நிதியை சங்க உறுப்பினர்கள் மூலம் திரட்டப்படுகிறது. தாராள மனதுடைய சிலர் இத்திட்டத்திற்கு நன்கொடைகள் அளித்து வந்தாலும், பெரும்பாலும் உறுப்பினர்களே இதற்கான நிதியை திரட்டுகிறார்கள் என்றார் சங்கத்தின் தலைவர் பங்கஜ் ஜெய்ஸ்வால்.

2016ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள், அப்போது சங்கத்தின் தலைவராக இருந்த சந்தீப் சராஃப், சந்தோஷ் நகரில் உள்ள ஆரம்பப் பள்ளிக்குச் சென்று அவர்களின் தேவை என்ன என்று மதிப்பிட்டார். பள்ளிக்குச் செல்லும் பாதை குறுகலாக பள்ளத்தில் இருந்தது. மேலும் பள்ளி வளாகம் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருந்தது. இங்கு எப்படி குழந்தைகள் படிக்கிறார்கள்? என்று நான் ஆச்சரியப்பட்டதுண்டு என்று நினைவுகூர்ந்தார் அவர். உடனடியாக பள்ளியில் அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தோம். மேலும்

ஏதாவது தேவையா என்று பள்ளி முதல்வரிடம் கேட்டோம். அந்த பள்ளி அரசு உதவி பெறாத பள்ளி என்பதால் மதிய உணவு திட்டத்துக்கு வழியில்லை. எனவே பள்ளி குழந்தைகளுக்கு ஒரு வருடத்துக்கு மதிய உணவு வழங்க நாங்கள் முடிவு செய்தோம் என்றார்.

திட்டத்தின் தொடக்க விழாவின் போது சங்கத்தின் உறுப்பினர்கள், குழந்தைகள் சூடாக பரிமாறப்பட்ட மதிய உணவை அவர்கள் ரசித்து சாப் பிட்டனர். குழந்தைகளின் முகத்தில் மகிழ்ச்சியை நாங்கள் கண்டோம். இதையடுத்து இந்த திட்டத்தை தொடர நாங்கள் முடிவு செய்தோம் என்றார் சராஃப்.

இந்த திட்டத்தை இறுதி செய்வதற்காக ஆராய்ச்சி மூலம் கிடைத்த சில தகவல்களை படித்துப் பார்த்தபோது, நேச்சர் கம்யூனிகேஷன்ஸ் என்னும் இதழில் இந்தியாவில் தேசிய பள்ளி உணவுத் திட்டத்தின் கீழ் ஊட்டச் சத்துகளினால் ஏற்படும் நன்மைகள் பற்றி தெரிந்து கொண்டோம். 1993 முதல் 2016 வரை தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பற்றிய தேசிய பிதிநிதித்துவ தரவுகளை பயன் படுத்தி நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் மதிய உணவு, குழந்தைகளின் வளர்ச்சியை அதிகரிக்கிறது என்பதை தெரிந்து கொண்டோம். தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவு சாப்பிட்ட சிறுமிகளுக்கு ஆரோக்கியமான குழந்தைகள் இருப்பதும் தெரிய வந்தது.



*சங்கத்தலைவர் பங்கஜ் ஜெய்ஸ்வால், திட்டத்தலைவர் சச்சின் படோடியா மற்றும் தேவ்கி நந்தன் அகர்வால் பள்ளி குழந்தைகளுடன்.*

### வளர்ச்சிக்கு உதவுகிறது

நாம் ஆழ்ந்து சிந்தித்து பார்த்தால் மதிய உணவு திட்டம் குழந்தைகளின் மனம், உடல் மற்றும் உளவியல் ரீதியிலான வளர்ச்சிக்கு பயனளிப்பது தெரியவரும். நாம் வகுப்பறையில் படிக்கும் மாணவர்களின் பசியை மட்டும் போக்கவில்லை, அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சி யையும் உறுதி செய்கிறோம். அது மட்டுமல்ல, அவர்களுக்கு, குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு பிரகாசமான எதிர்காலத்தையும் கட்டமைக்கிறோம் என்பதுதான் உண்மை என்கிறார் அவர்.

எங்கள் சங்கம், வேறு மூன்று அரசு உதவி பெறாத பள்ளிகளையும் அடையாளம் கண்டது. அவை சரஸ்வதி வித்யா மந்திர், மாணவர்கள் அகாதெமி மற்றும் மும்பை கிழக்கு கோரேகானில் உள்ள ஸ்ரீமதி ஆஷாபாய் பள்ளி ஆகியவை. மதிய உணவு திட்டத்தைச் செயல்படுத்தியதால் பள்ளிக்கு வரும் மாணவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்தது. மாணவர்களின் வருகையும் அதிகரித்தது என்று பள்ளி நிர்வாகத்தினர் பின்னர் தெரிவித்தனர்.

இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்றார் ஜெய்ஸ்வால். மதிய உணவு திட்டத்துக்கு நிதி திரட்டுவது, உணவு விநியோகம் செய்பவர்களுக்கு பணம் கொடுப்பதுடன் நாங்கள் எங்கள் செயல்பாட்டை நிறுத்திக் கொள்வதில்லை. அடிக்கடி இந்த பள்ளிகளுக்குச் சென்று உணவின் தரத்தை சோதிக்கிறோம். அது மட்டுல்ல, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் மதிய உணவு திட்டம் குறித்து கருத்துக்களையும் கேட்டு வருகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### மெனுவில் நூடுல்ஸ்

புதிய மெனுவில் நூடுல்ஸ், பாவ் பாஜி. பிரியாணி மற்றும் பாஜி ரொட்டி ஆகியவையும் அடங்கும். ஸ்ரீமதி ஆஷாபாய் ஆரம்பப் பள்ளியில் படிக்கும் 3ம் வகுப்பு படிக்கும் ஆரவ் என்ற மாணவியிடம் கேட்டபோது, கடந்த செவ்வாய்க்கிழமை எங்களுக்கு மதிய உணவாக நூடுல்ஸ் வழங்கப்பட்டது. எனக்கு மிகவும் பிடித்தமான உணவு அது. அடுத்த முறை எனது அம்மாவுக்கும் கொஞ்சம் எடுத்துச் செல்ல அனுமதிப்பீர்களா? என்று ஆசிரியரிடம் கேட்டுள்ளேன். ஏனென்றால் என் அம்மாவும் அதை சாப்பிட்டு பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன் என்றாள் அந்த சிறுமி.■



# சிம்லாவில் புற்றுநோயாளிகளுக்கான ரோட்டரி விடுதி

V முத்துகுமரன்

RC ஷிம்லா, RID 3080ல் 3.5 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட புற்று நோயாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கான விடுதியான ரோட்டரி அஷ்ரேயின் முதல் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் டிசம்பர் 1 ஆம் தேதி பிரமாண்ட லங்கர் (சமையலறை) அமைக்கப் பட்டது. IGMC அரசுக்குச் சொந்தமான புற்றுநோயியல் மருத்துவமனையில் இருக்கும் நோயாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கு 1,000க்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்களை சமைத்து விநியோகிக்க சமையலறை பயன்படுத்தப்படும்.

DG V P கல்தா, திட்டத் தலைவர், RC சிம்லாவின் தலைவராக இருந்தபோது 2010ல் இத்திட்டத்தை உருவாக்கினார். “பெரும்பாலான புற்று நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர், ஏனெனில், சிகிச்சைச் செலவு தவிர, ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் சிம்லாவில் தங்கும் இடம் கிடைப்பது கடினம்” என்கிறார் கல்தா. ஆனால் மாநில அமைச்சரவையின் சுற்றுச்சூழல் அனுமதிக்குப் பிறகு 440 சதுர மீட்டர் நிலத்தை பெறுவதற்கு சங்கம் ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. “கட்டுமானத்தை முடிக்க ஐந்தாண்டுகளுக்கு மேல் ஆனது, சிம்லாவில் குளிர் மாதங்களில் கான்கிரீட் வேலை செய்வது கடினம்,” என்று அவர் நினைவு கூர்ந்தார். இப்போது, நான்கு மாடி கட்டிடமான ரோட்டரி அஷ்ரே, புற்றுநோய் மருத்துவமனையில் இருந்து வெறும் 50 மீட்டர் தொலைவில் உள்ளது மற்றும் “நோயாளிகள் விரும்பும் இடமாக மாறியுள்ளது.”

தரை மற்றும் முதல் தளங்கள் பார்க்கிங்கிற்காக (35 கார்கள்) இருக்க, மற்ற தளங்களில் 22 அறைகள் மற்றும் இரண்டு தங்குமிடங்கள் உள்ளன. இந்த விடுதியில் ஒரே நேரத்தில் 32 நோயாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்கள் தங்க முடியும். தங்கும் படுக்கைக்கு ஒரு நாளைக்கு ரூ.250; இரட்டைப் படுக்கைக்கு ரூ.600, மூன்று படுக்கை அறைகளுக்கு ரூ.800 வசூலிக்கிறோம் என்று விளக்குகிறார்.




கூட்டு முயற்சியான இதில் அரசுக்கு சொந்தமான நீர்மின்சார நிறுவனமான SJVNன் CSR பிரிவின் மூலம் ரூ.1 கோடி நன்கொடை அளித்துள்ளது; துளசி ராம் பகீரத் ராம் மெமோரியல் தொண்டு நிறுவனம் (TRBRMCS) ரூ.1.5 கோடி அளித்துள்ளது; மற்றும் RC சிம்லா உறுப்பினர்கள் அதன் அறக்கட்டளை மூலம் ரூ.85 லட்சத்தை வழங்கினார்கள். மாநில நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சுரேஷ்

பரத்வாஜ், உள்ளூர் MLA மற்றும் முன்னாள் சிம்லா MP பிம்லா காஷ்யப் ஆகியோர் இந்தத் திட்டத்திற்காக தலா ரூ.5 லட்சம் நன்கொடை அளித்தனர். “புற்றுநோய் மருத்துவமனையை திறம்பட நடத்துவதற்காக ஆறு பேர் கொண்ட குழுவை நாங்கள் அமைத்துள்ளோம். நான் உட்பட மூன்று ரோட்டேரியன்கள், மற்றும் TRBRMCSல் இருந்து மூன்று பேர்” என்கிறார் கல்தா. நவீன வசதிகள் மையப் படுத்தப்பட்ட வெப்பமாக்கல், பவர் பேக்-அப், இண்டக்ஷன் ஸ்டவ் கொண்ட சிறிய சமையலறை, ஒவ்வொரு அறையிலும் பாத்திரங்கள் மற்றும் மானியத்துடன் கூடிய கேன்டீன் - ஆகியவை ரோட்டரி அஷ்ரேவை நோயாளிகளுக்கு வசதியான தங்கும் விடுதியாக அமைத்துள்ளது.



*ஹிமாச்சல் ப்ரதேசம் முதலமைச்சர் ஜெய்ராம் தாக்கூர் (இடமிருந்து 2வது) மாநில நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சுரேஷ் பரத்வாஜ் மற்றும் DG VP கல்டா (வலது) ரோட்டரி ஆஷ்ரே துவக்க விழாவில்.*

ஹிமாச்சலில் உள்ள ஸ்பிதி கிராமத்தைச் சேர்ந்த நோயாளியான லோப்சாங் டோல்மா, 34, “உணவில் இருந்து தினசரி அத்தியாவசியப் பொருட்கள் வரை எனது அனைத்துத் தேவைகளும் இங்கு கவனித்துக் கொள்ளப்படுகின்றன” என்று கூறுகிறார்.■

# ரோட்டேரியனுக்கு புகைப்பட விருது!

## ரோட்டரி செய்திக் குழு

RID 3131க்கு உட்பட்ட கோரேகான் பார்க் ரோட்டரி சங்க உறுப்பினரும், 16 ஆண்டுகளாக வனவிலங்கு புகைப்படக் கலைஞராக இருந்து வருபவருமான சஞ்சய் தனைத்துக்கு வன விலங்கு பிரிவில் சிறந்த புகைப்படத்துக்கான “சோனி-பிபிசி எர்த்” விருது கிடைத்துள்ளது.

பிபிசி ஸ்டூடியோஸ் மற்றும் கல்வர் மார்க் என்டர்டெய்ன்மென்ட்டுக்கு சொந்தமான சோனி-பிபிசி எர்த் இந்திய தொலைக்காட்சி அலைவரிசையில் புகைப்படக் கலைஞர்கள், தங்கள் படைப்புகள் அல்லது தங்களுக்கான அங்கீகாரத்தை காண ஆவலாக இருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் சஞ்சய் தனைத், நெட்ஜியோ என்னும் BBC வனவிலங்கு அலைவரிசைகள், சர்வதேச புகைப்படக் கலைஞர்கள் கூட்டமைப்பு (Federation Internationale de l’Art Photographique FIAP), இந்திய புகைப்படக் கலைஞர்கள் கூட்டமைப்பு (FIP), அமெரிக்க புகைப்படக்கலைஞர்கள் சங்கம் (Photographic Society of America-PSA) மற்றும் 35 விருதுகள் (ரஷியா) உள்ளிட்ட பல விருதுகளை பெற்றுள்ளார்.

இந்த ஆண்டு திரில் ஆஃப் லைஃப் சோனி-பிபிசி எர்த் விருது போட்டியின் கருபொருளாக இருந்தது. இயற்கை, சாகசம் மற்றும் வனவிலங்கு ஆகிய மூன்று பிரிவு களுக்கான போட்டிக்கு ஆயிரத்துக்கும் மேலானவர்கள் புகைப்படங்களை பதிவு செய்திருந்தனர். போட்டிக்கு



Rtn சஞ்சய் தனைத்தின் விருது பெற்ற புகைப்படம்

தேர்ந்தெடுக்கப்பட்ட புகைப்படங்கள் பொதுமக்கள் வாக்கெடுப்புக்காக சோனி-பிபிசி எர்த் இணையதளத்தில் அக்டோபர் 6 முதல் 27 வரை வெளியிடப்பட்டடன. ஒவ்வொரு பிரிவிலும் அதிக வாக்குகள் பெற்ற 15 புகைப்படங்கள் இறுதித் தீர்ப்புக்காக தேர்ந்தெடுக்கப் பட்டன. நவம்பர் மாதம் ஒவ்வொரு பிரிவிலும் மூன்று வெற்றியாளர்கள் நடுவர் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.■

# பார்வையற்றோருக்கான மறுவாழ்வு பட்டறை

## ஜெய்ஸ்ரீ

பரத் மற்றும் அவரது இரண்டு நண்பர்களும் ஒரு அலுவலக கட்டிடத்தின் சுமார் 15 படிகள் கொண்ட படிக்கட்டில் ஏறிய பிறகு உற்சாகத்தில் இருந்தனர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தது போல் உணர்கிறேன். உதவியில்லாமல் படிக்கட்டுகளில் ஏறுவது என் வாழ்க்கையில் இதுவே முதல் முறை என்று பரத் பூரித்தார். பார்வையின்றி, ஒவ்வொரு அடியிலும் உதவியோடு தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்தி வரும் இந்த சிறுவர்களுக்கு இது உண்மையில் ஒரு சாதனையே. இன்று அவர்கள் சுதந்திரமாக நடக்கவும், சாலையைக் கடக்கவும், காய்கறிகள் மற்றும் தானியங்களை அடையாளம் காணவும், தங்கள் தட்டு களில் உள்ள உணவை தடுமாறாமல் உண்ண முடிந்ததால் மகிழ்ச்சியில் மூழ்கியுள்ளனர். இந்த இளைஞர்களும் மற்ற 200 பார்வையற்றவர்களும் நாக்பூரில் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு நாள் மறுவாழ்வு பட்டறைக்காக RC நாக்பூர் இஷான்யா, RID 3030க்கு கடன்பட்டுள்ளனர்.

“ஆசியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸில் நுழைவதற்காக பார்வையற்றோருக்கான மொபிலிட்டி பட்டறைக்கான அட்டவணையை நாங்கள் உருவாக்கிய போது இது தொடங்கியது” என்று சங்க செயலாளர் Dr மனிஷா பிரசாந்த் ரதி கூறுகிறார். பார்வையற்றவர்களுக்கு வெள்ளைக்கோல்களை பயன்படுத்து வதற்கான தொழில்முறைப் பயிற்சியை வழங்குவதற்கான எந்தப் பதிவும் புத்தகத்தில் இது வரை இடம்பெறவில்லை, நாங்கள் இதில் முதன்மையாக இருக்க முடிவு செய்தோம், என்று அவர் மேலும் கூறுகிறார். சங்கம் அந்த தீர்ப்புக்காக காத்திருக்கிறது.

“பதிவு பெற்றாலும் பெறா விட்டாலும், இந்த மக்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இல்லை யெனில் தங்கள் வசதி மண்டலத் திலிருந்து வெளியேறுவதற்கு இருமுறை யோசித்திருப்பர்கள். இன்று அவர்களில் ஒவ்வொருவரும் தாங்கள் கற்றுக்கொண்ட அனைத்தையும் நடைமுறையில் பயன்படுத்துகின்றனர் என்கிறார் சங்கத்தலைவர் நரேஷ் பல்த்வா.

இந்த பட்டறை மூலம் கல்லூரி மாணவரான பலாஷ் ஹெடாவ் பெரிதும் பயனடைந்துள்ளார். வெள்ளைக் கோல் என் சாரதி மற்றும் என் கண்கள். இப்போது என்னால் சாலையை நம்பிக்கையுடன் பயன்படுத்தவும், அச்சமின்றி கடக்கவும் முடியும். முன்பெல்லாம் ஏதாவது ஒரு நல்ல ஆன்மா என்னை வழிநடத்துமா என்று சாலை யோரத்தில் உதவியின்றி காத்திருப்பேன், என்றார்.

ஈஸ்வரி கமலேஷ்பாண்டே, ஒரு ஊனமுற்ற நீச்சல் வீராங்கனை, இப்போது பறவைகளை ஒலிகளால் அடையாளம் காண்பதில் மகிழ்ச்சி யடைகிறார். குன்வந்த் யெல்னே “நமது மற்ற உணர்வு உறுப்புகள் மூலம் வாழ்க்கையின் அழகை உணருவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இரண்டு நாட்களும் வாழ்க்கையை முழுமையாக வாழவும், எனது உடல் ரீதியான சவால்களை தாண்டி உயரவும் எனக்குக் கற்றுக் கொடுத்துள்ளன” என்றார்.



*பார்வையற்ற மாணவிகள் வெள்ளை கோல்களின் உதவியுடன் சாலையில் நடக்க கற்றுக்கொள்கின்றனர்.*




RC *நாக்பூர் இஷான்யா உறுப்பினர்கள்.*

ஸ்வாகத் தோரட் மற்றும் அவரது குழுவினர் பாதுகாப்பாக பயணம் செய்வதற்கும் பொது போக்குவரத்தை அணுகுவதற்கும் வெள்ளைக் கோல்களை முறையாகப் பயன்படுத்துவது குறித்து விரிவான பயிற்சி அளித்தனர். மகாராஷ்டிராவில் கோல்களின் சரியான பயன்பாட்டைக் கற்பிக்கவும், நடமாடும் பயிற்சி அளிக்கவும் மிகச் சில ஆசிரியர்களே உள்ளனர். எனவே, பெரும்பாலான பார்வையற்றவர்கள் தங்கள் வசதியான பகுதிகளைத் தாண்டிச் செல்ல நம்பிக்கை இருப்பதில்லை, என்கிறார் மனிஷா.

இரண்டு நுட்பங்கள்-இரண்டு-புள்ளி தொடுதல் மற்றும் ஷோர்லைன் – பார்வையற்றவர்கள் தங்கள் வழியில் திறமையாக செல்லும் நுட்பம், இவை பட்டறையில் கற்பிக்கப்பட்டன. ‘‘எஸ்கலேட்டர் இருந்தால், அது மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி செல்கிறதா என்பதைத் தீர்மானிக்க, நகரும் பகுதியில் கோலை வைக்கவும். கோல் உங்களிடமிருந்து விலகிச் சென்றால், அது மேலே செல்கிறது; படிக்கட்டுகளில் ஏறிச் செல்லும்போது, உங்கள் கோல்களால் ஆய்வு செய்யும்போது இறுதித் தட்டலுக்கு பின் நீங்கள் இன்னும் ஒரு படி செல்ல வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கீழே செல்லும் போது, நீங்கள் பாது காப்பாக தரையில் இறங்குவதற்கு முன் மேலும் ஒரு அடியை எடுக்க வேண்டும். அத்தகைய பயனுள்ள உதவிக்குறிப்புகளை வள குழு பகிர்ந்து கொண்டது. கை கால் இயக்கம், பார்வை மற்றும் செவித் திறன் ஆகியவற்றிற்கான தகவல்களை அனுப்பும் நடுமூளையை செயல் படுத்தவும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது, மேலும் திசைகள், பொருள்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்களை அடையாளம் காண கற்றுக்கொடுக்கப்பட்டது.

சங்கம் பிரதிநிதிகளுக்கு வெள்ளை கோல்களை வழங்கியது. ரோட்டேரியன்களுக்கு ஆரம்பத்தில் அவற்றைப் பயன்படுத்தக் கற்றுக் கொடுக்கப்பட்டது, மேலும் அவர்கள் கண்களை கட்டிக்கொண்டு அச்செயலில் தேர்ச்சி பெற்றனர். நாக்பூர், சந்திராபூர், பத்ராவதி, வார்தா மற்றும் கடூல் ஆகிய இடங்களின் பார்வையற்றோர் பள்ளிகளில் இருந்து மாணவர்கள் ஈர்க்கப்பட்டனர், மேலும் அவர்களின் போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் உணவு ஆகியவை சங்கம் மூலம் கவனித்துக் கொள்ளப்பட்டது. இந்த பட்டறைக்கு ரூ.3.5 லட்சம் செலவானது.

நகரின் பரபரப்பான சாலைக்கு மாணவர்களை அழைத்துச் சென்று அதிக போக்குவரத்து நெரிசல்களின் போது அவர்கள் தங்கள் வெள்ளைக் கோல்களால் நம்பிக்கையுடன் சாலையைக் கடப்பதைக் கண்டது மன நிறைவைத் தந்தது. ஹார்ன் சத்தத்தை வைத்து வாகன தூரத்தை தீர்மானிக்க கற்றுக்கொடுக்கப் பட்டது. நாக்பூர் போக்குவரத்து போலீசார் போக்குவரத்தை ஒழுங்கு படுத்த எங்களுக்கு உதவினார்கள். சங்கத்தின் மூன்று ரோட்ராக்ட் சங்கங்களின் ரோட்ராக்டர்கள் பட்டறையில் தன்னார்வத் தொண்டு செய்தனர். பார்வையற்றவர்களின் சவால்களை உணர்ந்து கொள்ளவும், நடைபாதைகளை ஆக்கிரமிப்பு இல்லாமல் வைத்திருக்கவும், காரை மெதுவாக்கவும் அல்லது நிறுத்தவும் மற்றும் பார்வையற்றவர்களை அவர்களின் வேகத்தில் செல்ல அனுமதிப்பதற்காகவும், போக்கு வரத்து சந்திப்புகளில் பலகைகளை பிடித்துக் கொண்டிருந்தனர்.

பட்டறைக்குப் பின், வெள்ளைக் கோல் தினத்தன்று (அக். 15) சங்கம் பின்தொடர்தலை நடத்தியது. ‘‘அவர்கள் தங்கள் வெள்ளைக் கோல்களை ஏந்தி புதிய இடங்களை எந்த கைப்பிடியோ அல்லது உதவியோ இல்லாமல் ஆராய்வதை பற்றி கேட்டு நாங்கள் ஆச்சரியப்பட்டோம்,’’ என்கிறார் மனிஷா. இந்த புதிய சுதந்திரம் அவர்கள் வெளியே சென்று அவர்களின் கனவுகளை அடைய உதவுகிறது.■




*ரோட்டரி ஸ்பெல் பீ போட்டியில் பங்கேற்பாளர்களுடன் DG குல்பஹார் சிங் ரட்டோல், DGE கன்ஷியாம் கன்சல் மற்றும் மாவட்ட இன்டராக்ட் குழு தலைவர் மனிக்ராஜ் சிங்லா.*

# RID 3090ல் இன்டராக்ட் சங்கங்களுக்கு ஊக்குவிப்பு

**கிரண் ஜெஹரா**



மோனிகா சிங்கின் “இன்க்ரெடிபிள் இந்தியா” என்ற தலைப்பிலான கலைப்படைப்பு அவரது வகுப்பில் ரோட்டரி ஓவியப் போட்டிக்கான விருதைப் பெற்றது. நமது நாட்டின் முன்னேற்றத்தின் அளவை வெளிக்கொணர விரும்பினேன். நாம் பல துறைகளில் முன்னேறியுள்ளோம், குறிப்பாக விண்வெளி ஆராய்ச்சியில். அது எனக்குப் பிடித்த தலைப்பு, அதனால் எனது ஓவியத்தில் இஸ்ரோவை முன்னிலைப்படுத்தினேன், என்கிறார் பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் உள்ள அரசு பெண்கள் மூத்த மேல்நிலைப் பள்ளியின் 12-ஆம் வகுப்பு மாணவி.

RID 3090 இன்டராக்ட் கமிட்டியின் தலைவர் மாணிக் ராஜ் சிங்லா தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் 20 இன்டராக்டர்கள் உட்பட 532 அரசுப் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். பாட்டியாலாவிலுள்ள வர்த்மான் மருத்துவமனையின் நிதியுதவியுடன், நகரத்தில் உள்ள ஐந்து ரோட்டரி சங்கங்களின் ஆதரவுடன், மழலையர் பள்ளி பிரிவுகள் உட்பட வகுப்பு வாரியாக

இந்த நிகழ்வு நடத்தப்பட்டது. பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, வெற்றியாளர்களுக்கு கோப்பைகள் மற்றும் DGE கன்ஷ்யாம் கன்சல் பரிசுகளை வழங்கினார்.

“அரசுப் பள்ளி மாணவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த வும், கலையில் ஒரு காலைப் பொழுதைக் கழிக்கவும் இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. வழக்கமான பள்ளி பாடத்திட்டத்தில், அதற்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளுக்கு இடமில்லை. அந்த ஒருமிதத்தை உடைத்து, அவர்களின் படைப் பாற்றலை வெளிப்படுத்தவும், சற்று மகிழவும் ஒரு தளத்தை அவர்களுக்கு வழங்க விரும்பினோம்.” என்று சிங்லா கூறுகிறார்.

குழந்தைகளின் படைப்பாற்றலைக் கண்டு நடுவர்கள் வியந்தனர் என ஒரு நடுவரான ரஞ்சித் கவுர் கூறுகிறார்: சில வண்ணங்களையே கொண்டு காகிதத்தில் அவர்கள் கொண்டு வந்த யோசனைகள் வியக்கத்தக்கது. 2ம் வகுப்பு மாணவரின் சமர்ப்பிப்பு கூட வண்ணத் திட்டத்திலும் கருத்திலும் சிறப்பாக இருந்தது. அவர்களின் படைப்பாற்றலைத் தூண்டுவதற்கும், அவர்களின் முழுத்திறனையும் உணர உதவுவதற்கும் இதுபோன்ற நிகழ்வுகள் மேலும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இன்டர்ராக்டர்கள் மற்றும் அவர்களது பள்ளித் தோழர்களுக்காக குழு பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகிறது. “இன்டராக்டில் அதிக மாணவர்கள் சேர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அவர்கள் புதிய திறன்களைக் கற்றுக் கொள்வதற்கும், அவர்களின் சமூகத்திற்கு உதவுவதற்கும், ஊடாடும் அனுபவத்தை அனுபவிப்பதற்கும் இது சரியான தளமாகும். இந்த கூடுதலின் மூலம், குழந்தைகளில் சிலர் எதிர்காலத்தில் ரோட்டராக்ட் மற்றும் ரோட்டரியின் ஒரு பகுதியாக இருக்க விரும்புவார்கள், என்று அவர் கூறுகிறார். சமீபத்தில் 20 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 467 மாணவர்கள் ரோட்டரி பொதுப் பேச்சுப் போட்டியிலும், 18 பள்ளிகளைச் சேர்ந்த 1,032 மாணவர்கள் ரோட்டரி ஸ்பெல் பீ போட்டியிலும் பங்கேற்க பயிற்சி பெற்றனர்.■

# உறுப்பினர் சேர்க்கையில் உச்சம் தொட்ட RID 3142

## ரோட்டரி செய்திக் குழு




*DG கைலாஷ் ஜெத்தானி மற்றும் சங்கத்தலைவர் விஜய் தும்ப்ரே புதிய உறுப்பினர்களுடன்.*

RID 3142க்கு உட்பட்ட RC டோம்பிவிலி ஈஸ்ட் உறுப்பினர்கள் சேர்க்கையில் புதிய சாதனை படைத்துள்ளது. அந்த சங்கத்தின் தலைவர் விஜய் தும்ப்ரே, கடந்த ஆகஸ்ட் மாதம், நடந்த ஒரு நிகழ்வில் மட்டும் 56 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார். அவர் சங்கத்தைச் சேர்ந்த 170 உறுப்பினர்களிடமும், உங்கள் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் சகாக்கள் மத்தியில் திறமையான, துடிப்பான நபர்களை சங்கத்திற்கு கொண்டுவந்து சேர்க்குமாறு கேட்டுக் கொண்டார். இதைத் தொடர்ந்து மெகா உறுப்பினர் சேர்க்கைக்கான நடவடிக்கை முடுக்கி விடப்பட்டது என்று முன்னாள் மாவட்ட ஆளுநரும், மாவட்ட பயிற்சியாளருமான சந்திரசேகர் கோல்வேகர் தெரிவித்தார்.

கரோக்கி, தாபா, சைக்கிளிங் மற்றும் ஈக்விடி போன்ற நண்பர்கள் அடங்கிய குழுக்களைச் சேர்ந்த வர்கள் வெளியில் சென்று நட்புறவு மற்றும் சேவைத் திட்டங்களில் ஈடுபாடுள்ளவர்களை ரோட்டரியில் இணையு மாறு வலியுறுத்தினர். கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் ரோட்டரியில் இணைந்த உறுப்பினர்கள்தான் ஆகஸ்ட் நிகழ்வில் புதிய உறுப்பினர் களைச் சேர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாலின சமத்துவத்தை கவனத்தில் கொண்டு, தேஜஸ்வினி விருது வழங்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பு பெண் உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் 9 பெண் தொழில் முனைவோர்களை டான்வி ஹெர்பல் நிறுவனர் டாக்டர் மேதா மெஹந்தலே பாராட்டி கௌரவித்தார்.

தற்போது 35 ஆண்டுகள் பழமைவாய்ந்த எங்கள் சங்கத்தில் மொத்தம் 220 பேர் உறுப்பினர் களாக உள்ளனர். மாவட்டத்தின் இலக்கை ஆண்டின் முதல் காலாண்டில் பூர்த்தி செய்ததால், டிசம்பர் தொடக்கத்துக்குள் மேலும் 56 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க தலைவர் தும்ப்ரே திட்டமிட்டுள்ளார். பாராட்டு களால் அவர் முடங்கி விடாமல், அடுத்த இலக்கை எட்டுவதற்கு கடினமாக உழைக்கிறார் என்றார் கோல்வேகர்.■

ADVERTORIAL

# மாவட்டம் 3110



**ப்ராச்சி மற்றும் பவன் அகர்வால்**
மாவட்ட ஆளுநர் RID 3110



PDG **தேவேந்தர் குமார்**
ARRFC



PDG **ஷரத் சந்த்ரா**
DRFC

**மூன்றாம் கட்ட மேஜர் டோனர்**



Rtn **யோகேஷ் மற்றும் சுதா ஜின்டல்**
RC காஷிபூர்

TRF **பங்களிப்பு** $7800



Rtn **பபிதா ஜெயின்**
RC நைனிடால்-தலைவர்

## CSR திட்டங்கள்

எங்கள் மாவட்டத்தில் இந்திய ரோட்டரி அறக்கட்டளை 7வது CSR திட்டமாக வித்யா பாரதி பள்ளிக்கு 8 கம்ப்யூட்டர் லேப் அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

திட்ட செலவு ரூ.25 லட்சம் ($30,500) இதை காஷிபூரில் உள்ள காஷி விஷ்வநாத் டெக்ஸ்டைல் மில்ஸ் செயல்படுத்தும் இந்த வருடத்தில் இத்துடன் ரூ.3,03,50,000 CSR திட்டங்கள் செயல்படுத்தியுள்ளோம்.

## என்டோவ்மென்ட் ஃபண்ட்

இந்த வருடம் RID 3110 முதல் என்டோவ்மென்ட் ஃபண்ட் RC காஷிபூர் மூலம் நிறுவியுள்ளது. இச்சங்கம் ‘Pooled Endowment Fund’ ஆக ரூ.25 லட்சம் ($25,316) செய்துள்ளது.

இந்த பணத்தில் ஒரு பங்கு எங்கள் மாவட்டத்திற்கு DDF-ஆக அடுத்த வருடம் முதல் சேரும்.இது மாவட்தில் பல சேவை திட்டங்கள் செய்ய உதவும்.

உறுப்பினர் மேம்பாடு



Rtn **நீரவ் நிமேஷ் அகர்வால்**
மாவட்ட உறுப்பினர் சேர்க்கை குழு தலைவர்.

எங்கள் மாவட்டம் மீண்டும் Zone 6-யில்

## அதிக உறுப்பினர் வளர்ச்சியை எட்டியுள்ளது

| Absolute Numbers | | Growth Rate |
|---|---|---|
| 379 | & | 10.5% |
| Net increase in membership | | Net Growth Rate |

*Source: Membership Report of RI (as on 31st October, 2022)*

कन्याश्री 2.0



635 பள்ளி
மாணவிகளுக்கு
E-tabs வழங்கும்
மெகா திட்டம்

**88 Rotary Clubs of RI District 3110**

| DATE | TIME | DAY |
|---|---|---|
| DEC. 4 | 11 AM | SUNDAY |

## கருணா திட்டம்

‘கருணா திட்டம்’ மூலம் RID 3110, 450 சக்கர நாற்காலிகளை 35 ரோட்டரி சங்கங்கள் மூலம் உடல் ஊனமுற்றோருக்கு வழங்கவுள்ளது. ஒவ்வொரு சக்கர நாற்காலியிற்கும் ரோட்டரியினர் ஒவ்வொருவரும் Rs.1000 செலுத்தி உள்ளனர். இந்த திட்டத்தின் பயனாளிகள் இமயமலையில் உள்ள பித்தோர்கர் கிராமத்திலும் உள்ளனர்.



## அர்பன்: TRF விருந்து — சில துளிகள்

முக்கிய விருந்தினர்
**PRID பரத் பாண்ட்யா**
TRF அறங்காவலர்

சிறப்பு விருந்தினர்
**Ms மானுஷி சில்லர்**
2017 மிஸ் வெர்ல்ட்

சிறப்பு விருது
பத்மஸ்ரீ
**Dr ஜிதேந்தர் சிங் 'ஷன்டி'**














## பல்வேறு சேவை திட்டங்கள்


ரத்த தானம்


உலகளாவிய கை கழுவும் நாள்


உலகளாவிய கை கழுவும் நாள்


சக்கர நாற்காலி திட்டம்


மருத்துவ முகாம்



காச நோய் மருந்து வழங்கல்


ஆடைகள் வழங்கல்


நகர் தூய்மை திட்டம்


உணவு வழங்கல்


Rtn **ராஜ் மெஹ்ரோத்ரா**
CDS (Admin)



# இயற்கையை கொண்டாடும் புகைப்படங்கள்

S R மது

ஸ்ரீவத்சன் சங்கரனின் புகைப்படங்கள் ஆற்றல் மற்றும் உயிர்ச்சக்தியுடன் ஒளிர்கின்றன. பயண புகைப்படக் கலைஞராக மாறிய இந்த 32 வயதான பொறியாளரின் புகைப்படங்கள் திருவிழாக்கள், இயற்கை காட்சிகள், அன்றாட வாழ்க்கையின் நாடகம் என மக்கள் மற்றும் இயற்கையை கொண்டாடுகின்றன. கும்பமேளா, கேரளா படகுப் போட்டி அல்லது மதுரையில் நடக்கும் ஜல்லிக்கட்டு போன்றவற்றின் புகைப்படங்கள் அல்லது சென்னையில் உள்ள மெரினா கடற்கரையில், விடியற்காலையில் அல்லது சூரியன் மறையும் போது எடுக்கப்பட்ட காட்சிகள் அவற்றிக்கு உதாரணம்.

தி ஹிந்துவில் மேக்னா மஜும்தார் கூறுவது போல், அவரது புகைப்படங்களில் உள்ளவர்கள் பெரும்பாலும் வண்ணங்களால் சூழப்பட்டிருப்பார்கள் – பிரகாசமான ஸ்வெட்டர்கள், பிளாஸ்டிக் மழை ஆடைகள் அல்லது ஹோலியின் எண்ணற்ற தூள் சாயல்கள். ஹோலி கொண்டாட்டங்களின் போது எரியும் இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்து கோலாப்பூரின் பட்டன் கோடோலி திருவிழாவின் மகிழ்ச்சியான மஞ்சள் நிறங்கள் வரை அவரது வேலைகளில் வண்ணங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

ஸ்ரீவத்சன் இந்தியாவின், குறிப்பாக கிராமப்புற இந்தியாவின் தனித்துவத்தை முன்னிலைப்படுத்த விரும்புகிறார். பல வெளிநாட்டு புகைப்படக் கலைஞர்கள்



கர்நாடகாவின் ஹம்பியில் உள்ள படவி குகையில் சிவலிங்கம்.



*ஸ்ரீவத்சன் சங்கரன்*



சென்னை மழையில் மெரினா கடற்கரை.



*ஹோலி பண்டிகை*
*கொண்டாடும் சிறுவர்கள்.*



சென்னை காசிமேடில் மீனவர்கள்.





இந்தியாவை ஆவணப்படுத்துவதை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். நான் ஏன் அதை செய்யக்கூடாது என்று நினைத்தேன்?'' அவர் சுமார் 40 நகரங்களுக்கும் எண்ணற்ற கிராமங்களுக்கும் பயணம் செய்துள்ளார். ஹிமாச்சல பிரதேசத்தின் ஹிக்கிமில் உள்ள உலகின் மிக உயரமான தபால் நிலையத்தை அவர் புகைப்படம் எடுத்துள்ளார்; அழகில் திளைக்க தாஜில் மூன்று நாட்கள் கழித்துள்ளார்; உலகின் மிக ஈரமான இடங்களில் ஒன்றான சிரபுஞ்சிக்கு மூன்று முறை சென்றுள்ளார்.

''எனது படங்கள் இயற்கை தாய்க்கும் அவளை பேணுபவர்களுக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்துகின்றன. ஒரு இடத்தை ஆராய்வதற்கான சிறந்த வழி, அம்மக்களின் பூர்வீக கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்துடன் கலந்து அவர்களின் வாழ்க்கை முறைகளைப் புரிந்துகொள்வதாகும் என்று நான் நம்புகிறேன் என அவர் கூறுகிறார். ஹென்றி கார்டியர்-பிரெஸ்ஸன் மற்றும் ரகு ராய் ஆகியோர் அவரை மிகவும் பாதித்த புகைப்படக் கலைஞர்கள் ஆவர்.


ஸ்ரீவத்சனுக்கு செவித்திறன் குறைபாடு உள்ளது. அவருக்கு ஆறு வயதாக இருந்த போது, மருத்துவர் அவருக்கு வலது காதில் முழுமையாக செவிடாகவும், இடது காது மிகவும் பாதிக்கப்பட்டதாகவும் கூறினார்.

காது கேளாதது பெரிய சவாலாக இருந்தது என்கிறார் ஸ்ரீவத்சன். ''நண்பர்களை உருவாக்குவது கடினமாக இருந்தது. நான் வெட்கப்பட்டேன், உலகத்துடன் என்னால் தொடர்பு கொள்ள முடியவில்லை.''

இருப்பினும், முழு மன உறுதியால், அவர் நிலைமையை சமாளித்தார். பள்ளியில் படித்து, பொறியியல் கல்லூரியில் பட்டம் பெற்றார் மற்றும் TCS நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். 23 வயதில், அவர் தனது புகைப்படம் எடுக்கும் ஆர்வத்திற்காக - இந்தியாவின் முன்னணி IT நிறுவனத்தில் இருந்து தனது வேலையை ராஜினாமா செய்தார்.

ஸ்ரீவத்சன் மிக ஆரம்பத்திலேயே புகைப் படக்கலையில் ஈர்க்கப்பட்டார். அவர் சுயமாக கற்றுக்கொண்டார், நிறைய பயிற்சி செய்தார், நிறைய படமாக்கினார், புகைப்பட பத்திரிகை களைப் படித்தார், தவறுகளைச் செய்வதன் மூலம் கற்றுக்கொண்டார். ''இந்த பொழுது போக்கு நான் இதுவரை உணராத மகிழ்ச்சியை எனக்கு கொடுத்தது.''

நான் கேனான் 500Eயில் தொடங்கி அடிப்படைகளைக் கற்றுக்கொண்டேன். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, எனது சொந்தப்பணத்தில் கேனான் 6D வாங்கினேன். இப்போது, நான் 16–35 மிமீ லென்ஸுடன்




நாசிக்கில் கும்ப மேளா.

சோனி A7R3 கேமராவை வைத்திருக்கிறேன். நான் சோனி ஆல்பா கேமராவின் பிராண்ட் இன்ஃப்ளுயன்ஸரும் கூட. சோனி எங்கள் செயல்பாடுகளை ஆதரிக்கிறது.

இன்று அவர் பல பயணம் செய்கிறார், கற்பிக்கிறார், புகைப்பட உலாக்களை நடத்துகிறார், வாடிக்கையாளர்களுடன் உரையாடுகிறார் மற்றும் அவர் நிறுவிய மெட்ராஸ் போட்டோ பிளாக்கர்ஸ் (MPB) க்காக நிகழ்வுகளை ஏற்பாடு செய்கிறார்.

MPB என்பது 4,000க்கும் மேற்பட்ட புகைப்படக் கலைஞர்களைக் கொண்ட சமூகமாகும். இது நெட்வொர்க்கிங் மற்றும் வழிகாட்டுதலை செயல்படுத்துகிறது மற்றும் புதிய புகைப்படக்காரர்களுக்கான தளத்தை உருவாக்குகிறது. பட்டறைகள், கண்காட்சிகள் மற்றும் புகைப்பட நடைப்பயணங்களை வழக்கமாக நடத்துகிறது. சில நேரங்களில் தமிழ்நாடு சுற்றுலாத் துறையுடன் இணைந்தும் அவற்றை நடத்துகிறது. 10க்கும் மேற்பட்ட புகைப்படப் போட்டிகளையும் நடத்தியுள்ளது.

MPB செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு பல வழிகளில் உதவுகிறது. 8 முதல் 10 பேர் வரையிலான குழுவிற்கு சைகை மொழியில் அடிப்படை புகைப்படம் எடுத்தல் பாடத்திட்டத்தை கொண்டு வந்துள்ளது, அங்கு ஆசிரியர்கள் சைகை மொழி, முகபாவனை மற்றும் நடைமுறை செயல்களை பயன்படுத்தி தொடர்பு கொள்கின்றனர். சொந்தமாக



மெரினா கடற்கரையில் உழைப்பாளர் சிலை.







*திருவல்லிக்கேனியில் ஒரு திருவிழா காட்சி.*

கேமரா இல்லாத பங்கேற்பாளர்களுக்கு கேமரா வழங்கப்படுகிறது. செவித்திறன் குறைபாடுள்ள பங்கேற்பாளர்கள் திறன்களைப் பெறுகிறார்கள், தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறார்கள், இதே போன்ற சவால்களைக் கொண்ட மற்றவர்களை சந்திக்கிறார்கள். புகைப்படம் எடுத்தல் வாழ்க்கை குறைபாடுள்ளவர்களுக்கு புதிய கதவுகளை திறக்கிறது. அதை சாத்தியமாக்கியது எனக்கு சிலிர்ப்பை அளிக்கிறது.

**லடாக்கில் புகைப்படம் எடுத்தல்**

ஸ்ரீவத்சன் தனது அற்புதமான நிலப் பரப்பு அனுபவங்களில் ஒன்றான லடாக்கில் பல மாடிகள் கொண்ட லே அரண்மனைக்கு சென்றது பற்றி பேசுகிறார். ஆனால் அவர் சென்ற போது புதுப்பிக்கப்பட்டு கொண்டிருந்ததால் அரண்மனையின் பெரும்பகுதியை அவரால் அணுக முடியவில்லை. உயரமான மாடிகளுக்கு படிக்கட்டுகளோ பாதைகளோ இல்லை, அதனால் ஸ்ரீவத்சனும் அவரது குழுவினரும் அதன் ஏழு மாடிகளை ஆராய ஏணிகளைப் பயன்படுத்தினர்!

லடாக்கில் உள்ள சவால்களுக்குச் சமமாக லேவில் நம்க்யால் செமோ கோம்பா, ஒரு குன்றின் மேல் உள்ள புத்த மடாலயம் இருந்தது. அதில் புத்தரின் மூன்று-அடுக்கு உயர தங்கச் சிலை உள்ளது. அவர்கள் அப் பாறையை அடைய கடுமையான மலையேற்றம் செய்ய வேண்டியிருந்தது, ஆனால் இந்த முயற்சியின் வெற்றியாக மடாலயத்திலிருந்து லே நகரின் பிரமிக்க வைக்கும் பனோரமிக் காட்சிகள் கிடைத்தது.

ஆனால் கதை அங்கு முடிவடையவில்லை. அவர்கள் மீண்டும் கீழே இறங்க வேண்டியிருந்தது, அது பயமாக இருந்தது. “நாங்கள் ஒரு கையில் கேமராவுடன், மறு கையில் சமநிலைப்படுத்தி கீழே இறங்கினோம். லடாக்கி தேநீர் பருகுவதன் மூலம் எங்கள் ஆற்றலை மீட்டெடுத்தோம், கவர்ச்சிகரமான நினைவுகளுடான அந்த நாளை நினைவு கூர்ந்தோம் என்று அவர் புன்னகைக்கிறார்.

ஸ்ரீவத்சனின் சென்னையின் புகைப்படங்கள் – அதன் சந்தைகள், கோவில்கள், திருவிழாக்கள் மற்றும் சிலைகள், அதன் மக்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கை முறை – இந்நகரின் மேல் அவர் வைத்திருக்கும் காதலை வெளிபடுத்துக்கின்றது -இந்த புகைப்படக் கட்டுரை மூலம் அதை காணலாம்.

நன்றி: பிட்வீன் தி லைன்ஸ்,
மெட்ராஸ் புக் கிளப்.

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# ரோட்டரி ஆளுநர்



### பல்வந்த் சிங் சிரானா

**பள்ளிக் கல்வி, RC சிகார், RID 3054**

## இவருடைய இலக்கு, உறுப்பினர் எண்ணிக்கையை மேம்படுத்துவது

ராஜஸ்தான், கட்ச், குஜராத்தின் வடக்குப் பகுதிகளைக் கொண்ட, மிகப் பெரிய RI மாவட்டங்களில் ஒன்றான இந்தப் பகுதியின் DGயுடைய இலக்கு, "என் மாவட்டத்தை உலகில் மிகக் கூடுதலான எண்ணிக்கை கொண்டதாக ஆக்குவது. 1,000க்கும் மேற்பட்ட புதிய ரோட்டரியன்களைச் சேர்ப்பதன்மூலம் நான் இதைச் சாதிப்பேன்" என்கிறார் பல்வந்த் சிங் சிரானா. இவர் 7,214 உறுப்பினர்களைக் கொண்ட 174 சங்கங்களை நிர்வகிக்கிறார், ஏற்கெனவே 8 புதிய சங்கங்களைச் சேர்த்து விட்டார், இந்த ஆண்டு மேலும் 26 சங்கங்களைச் சேர்த்து ஜூன் நிறைவுக்குள் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை 8,300க்கு மேல் கொண்டுசெல்லவுள்ளார்.

மவுன்ட் அபு சாலையில் உள்ள பிரஜாபிதா பிரம்மகுமாரிஸ் பன்னாட்டு மருத்துவமனையில் உள்ள தன்னுடைய இப்போதைய இரத்த வங்கி, தலசீமியா மையத்துடன் ரூ.3 கோடி செலவில் இன்னொரு மையம் சேர்க்கப்படும், சமீபத்தில், ஜெய்ப்பூரில் GG நிதியளித்தல், தனியார் கொடையாளர்கள் உதவியுடன் ரூ.2 கோடி மதிப்பில் தோல் வங்கி ஒன்று அமைக்கப்பட்டது. கோட்டா-வில் ஐந்து ஏக்கருக்கு மேலுள்ள ஓர் இடத்தில் ஒரு GG, ரோட்டரியன், பெருநிறுவனக் கொடையாளர்கள் வழியாக நகர்ப்புறக் காடு ஒன்றை (ரூ.2 முதல் 3 கோடி) உருவாக்கச் சிரானா திட்டமிட்டுள்ளார்.

இப்போது 52 மகிழ்ச்சிப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன, "நான் இதுபோல் இன்னும் 100 பள்ளிகளைத் தொடங்க விரும்புகிறேன்." TRF வழங்கல் இலக்கு 600,000லிருந்து 1 மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது. PDG அசோக் குப்தா, Rtn சுனில் மோர் ஆகியோர்மூலம் ஊக்கம் பெற்ற இவர் 1997ல் ரோட்டரியில் இணைந்தார்.



### பாஸ்கர் ராம் விஸ்வநாதம்

பட்டயக் கணக்காளர்

RC ராஜமுந்திரி ரிவர் சிட்டி, RID 3020

## பொதுத் தோற்றத்தை மேம்படுத்த ஒரு ரோட்டரிப் பூங்கா

ராஜமுந்திரியில் 1.5 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவில் அமைந்துள்ள ரோட்டரி நகராட்சிப் பூங்கா (ரூ.38 லட்சம்) ஆந்திரப் பிரதேசத்தின் ஆறு வருவாய் மாவட்டங்களில் மாதிரிச் சுற்றுச்சூழல் திட்டமாகக் காட்சிப்படுத்தப்படுகிறது என்கிறார் பாஸ்கர் ராம். இவர் (திட்டமிட்ட 15ல்) ஏழு புதிய சங்கங்களை அமைத்து மொத்தச் சங்கங்களின் எண்ணிக்கையை 85க்குக் கொண்டுசென்றுள்ளார், இந்த ஆண்டு 1,500 ரோட்டரியன்களைச் சேர்க்கும் இலக்குடன் 769 புதிய உறுப்பினர்களை இணைத்துள்ளார். இப்போது, மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 5,799.

தொடக்கப் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள ஆறு RO அமைப்புகளால் (ரூ.30 லட்சம்) சுமார் 4,000 மாணவர்களுக்குக் குடிநீர் கிடைக்கும். சுமார் 7லிருந்து 8 GG திட்டங்கள் திட்டமிடப்பட்டுவருகின்றன, ராஜமுந்திரி அருகில் உள்ள கோவ்வூர் கிராமத்தில் ரோட்டரியின் ஒருவர் பரிசளித்த ஓர் ஏக்கர் நிலத்தில் ரூ.8 கோடி செலவில் ரோட்டரி மருத்துவமனை ஒன்று அமையவுள்ளது. GSE உறுப்பினராக RID 6070, மிசௌரி சென்ற ராம், அடுத்த ஆண்டு (1994) ரோட்டரியில் இணைந்தார். 1996ல் இந்துச் சுடுகாடுகளைப் புதுப்பிக்கும் கைலாஷ் பூமி என்ற திட்டத்தை இவர் தொடங்கினார், இது 65 சங்கங்களின் அடையாளத் திட்டமாக உள்ளது. இவர் ஓர் AKS உறுப்பினர் ஆவார்.

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





### Dr ஆனந்த் A ஜூன்ஜூனுவாலா

கண் அறுவைச் சிகிச்சை வல்லுனர்,
RC காம்காவ்ன், RID 3030

## விவசாயிகள் நலன்

மகாராஷ்டிர மாநிலத்தின் மைய மற்றும் விதர்பா பகுதிகளில் உள்ள 14 வருவாய் மாவட்டங்களில் நிறைய விவசாய நிலங்கள் இருப்பதால், "விவசாயிகள் நலனுக்குப் பல திட்டங்களைத் தொடங்குவதற்கு நாங்கள் ஒரு குழுவை வமைத்துள்ளோம். ஒவ்வொரு சங்கமும் குறைந்தது இரண்டு விவசாயத் திட்டங்களை நிறைவேற்றும், நாங்கள் இதுபோல் குறைந்தது 200 நலத்திட்டங்களை நிறைவேற்றவுள்ளோம்'' என்கிறார் Dr ஆனந்த் ஜூன்ஜூனுவாலா. இவர் 500 புதிய ரோட்டரியன்களைச் சேர்த்து, ஜூன் நிறைவில் உறுப்பினர் எண்ணிக்கையை 5,500ஆக உயர்த்த விரும்புகிறார், இதில் 200 பேர் ஏற்கெனவே இணைந்து விட்டார்கள். இவர் ரோட்டரி இல்லாத பகுதிகளில் 10 புதிய சங்கங்களைப் பதிவு செய்ய விரும்புகிறார். இப்போது, இந்த மாவட்டத்தில் 99 சங்கங்கள் உள்ளன. இவர் 500 ரோட்டராக்டர்களைச் சேர்த்து, ரோட்டராக் டர்கள் எண்ணிக்கையை 1,500க்கு மேல் கொண்டு செல்லவும் ஆர்வமாக உள்ளார்.

ஜூன்ஜூனுவாலா 10 மகிழ்ச்சிப் பள்ளிகளை அமைக்க விரும்புகிறார். ரோட்டரி சிங்கர் தொழில் சார்ந்த மையங்களில் சுமார் 2,500 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். இவர் TRFக்கு 500,000 திரட்ட இலக்கு அமைத்துள்ளார். இவருடைய தந்தை அஷோக் ஜூன்ஜூனுவாலா அவர்களும் ரோட்டரியன்தான். 2003ல் இவர் ரோட்டரியில் இணைந்தார்.

### குல்பாகர் சிங் ரெடோல்

வழக்கறிஞர், RC ஃபதேஹாபாத் டவுன், RID 3090

## இளைஞர்களைப் போதை மருந்திலிருந்து காப்பாற்றுவது

இளைஞர்களைப் போதை மருந்துக்கு அடிமையாதலில் இருந்து காப்பாற்றுவதுதான் குல்பாகர் சிங் ரெடோலெ-யின் முதன்மை இலக்கு. பள்ளிகள், கல்லூரிகளில் சங்கங்கள் பயிலகங்கள், கருத்தரங்குகள், விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தும்.'' போதை மருந்து விற்கிற ஒருவரைப் பார்த்தால், அல்லது, போதை மருந்து தவறாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்டால் காவல் துறைக்குத் தெரிவிப்பது எப்படி என்று இளைஞர்களுக்குக் கற்றுத்தரப்படும்.

சிங் ஜூன் நிறைவுக்குள் 10 புதிய சங்கங்களைப் பதிவு செய்து (இதில் 4 ஏற்கெனவே அமைக்கப்பட்டு விட்டன) மொத்தச் சங்கங்கள் எண்ணிக்கையை 114க்குக் கொண்டுசெல்ல இலக்கு அமைத்துள்ளார். இவர் 250 ரோட்டரியன்களைச் சேர்த்து ரோட்டரியன்கள் எண்ணிக்கைய 2,750க்குமேல் கொண்டுசெல்ல இலக்கு அமைத்துள்ளார். "50 புதிய ரோட்டராக்டர்களைச் சேர்க்கிற சிறிய இலக்கை நான் அமைத்துள்ளேன்.''

TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, 175,000. தன்னுடைய தந்தை Rtn மறைந்த ஹர்மிந்தர் சிங் ரெடோலெ அவர்களால் ஊக்கம் பெற்று 2006ல் இவர் ரோட்டரியில் இணைந்தார்.


வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி




RC நைனிடால் தலைவர் பபிதா ஜெயின் மெஹ்ராகாவ்னில் தையல் இயந்திரம் ஒன்றை ஒரு பெண்மணியிற்கு வழங்குகிறார். உடன் அவர் கணவர் சுபாஷ் ஜெயின் (வலதிலிருந்து 4வது) அவர்களும் உள்ளார்.

# மெஹ்ராகாவ்ன் பெண்களுக்கு கொடுக்கப்பட்ட தையல் இயந்திரங்கள்

கிரண் ஜெஹரா



தூய்மை பணிகளில் ஈடுபடும் மெஹ்ராகாவ்ன் இன்டராக்டர்கள்.

RC நைனிடால், RID 3110ன் உறுப்பினரான ரவி நருலாவின் மனைவி ரேகா நருலா, நைனிடாலுக்கு அருகிலுள்ள மெஹ்ராகாவ்ன் என்ற கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட பெண்களுடன் பணிபுரிந்து வருகிறார். இந்த பெண்களில் பலர் சுய உதவி குழுக்களின் (SHG) அங்கத்தினர்களாக இருக்கின்றனர். அவர்கள் எங்களிடமிருந்து பணத்தை எதிர்ப்பார்த்ததில்லை. மாறாக, அவர்களுக்கு வருமானத்தை ஈட்டவும், பெருக்கவும் ஒரு வழி தேவைப்பட்டது, என்கிறார் ரேகா. அவர் தனது கணவரின் சங்கத்தை அணுக,'' சிறிது நேரத்திலேயே, எட்டு பயனாளிகளுக்கு தலா 3,800 ரூபாய்க்கு தையல் இயந்திரங்களை நன்கொடையாக வழங்க அவர்கள் நிதி திரட்டினார்கள்''.

சில பயனாளிகள் சுய உதவிக்குழுவின் ஆதரவின் மூலம் தையல் படிப்பை முடித்திருப்பதால், அவர்கள் உடனடியாக தையல் ஆர்டர்களை எடுக்கத் முடிந்தது. தையல் இயந்திரங்களை நன்கொடையாக கொடுப்பதோடு மட்டும் நாங்கள் நிறுத்திவிடவில்லை. தையல் பொருட்களை மொத்தமாக ஆர்டர் செய்து வாங்கிக் கொடுத்தோம், என்கிறார் சங்கத் தலைவர் பபிதா ஜெயின். தலா 20 ரூபாய் விலையில் 2,000 துணிப்பைகள் தயாரிக்க முதற்கட்ட ஆர்டர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. செய்யப்பட்ட வேலைக்கு அவர்கள் நேரடியாக பணம் பெற்றனர். சங்கம் அவர்களிடமிருந்து எதையும் வசூலிக்கவில்லை, என்று அவர் கூறுகிறார்.

அந்த ஆர்டரில் இருந்து தலா ரூ.1,250 சம்பாதித்துள்ளோம் என்று ஹேமா ஜதின் என்ற பயனாளி கூறுகிறார்.'' இது ஒரு சிறிய தொகையாகத் தோன்றலாம், ஆனால் இதை கொண்டு எங்களால் கடனைத் திருப்பிச் செலுத்த முடிந்தது, பள்ளிக் கட்டணத்தைச் செலுத்த முடிந்தது அல்லது எங்களால் முன்பு வாங்க முடியாத வீட்டிற்கான பொருட்களை வாங்க முடிந்தது.''

கடந்த தீபாவளிக்கு, அவர்கள் ஹேம்பர் பைகளை வடிவமைத்து தைக்க,'' அதை விற்க நாங்கள் அவர்களுக்கு உதவினோம்,'' என்கிறார் சங்கத்தலைவர். இப்போது அவர்கள் மது பாட்டில் கவர்கள், பைகள் மற்றும் ஏப்ரன்களுக்கான ஆர்டர்களைப் பெற்றுள்ளனர். அவர்கள் ஒரு பைக்கு 50 முதல் 150 ரூபாய் வரை பெற முடியும்.'' அந்த பெண்கள் தங்கள் வேலையை உற்சாகமாக செய்கின்றனர், மேலும் அவர்களில் சிலர் சரிகை அல்லது அலங்கார பொத்தான்களைச் சேர்ப்பதன் மூலம் தங்களுடைய தனித்துவத்தையும் வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் தங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்த உதவுவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம், இதனால் அவர்கள் சிறந்த ஒப்பந்தங்களைப் பெற முடியும், என்று அவர் மேலும் கூறுகிறார்.

ஃபேர்சோலி கிராமத்தில் உள்ள ரோட்டரி மருந்தகத்தில் பெண்கள் இலவச மருத்துவ வசதிகளைப் பெறலாம். இந்தர்ஷீல் ஜெயின் அறக்கட்டளையின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட இந்த கிளினிக், உலகளாவிய மானியத்தின் உதவியுடன் ரோட்டரி நோயறிதல் மையமாக விரைவில் மாறும் என்று பபிதா கூறுகிறார். இப்பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் சரியான உபகரணங்கள் இல்லை, மேலும் கிராம மக்கள் எக்ஸ்ரே போன்ற எளிமையான பரிசோதனைகளுக்கு கூட நைனிடால் பயணிக்க வேண்டியுள்ளது.'' நாங்கள் திட்டத்திற்காக $30,000 திரட்டியுள்ளோம், மேலும்



தான் தைத்த ஏப்ரனுடன் ஒரு பயனாளி.

ஒரு கூட்டாளர் சங்கத்திற்காக காத்திருக்கிறோம்.''

சமீபத்தில், சங்கம் தன் பொது உருவத்தை மேம்படுத்த நைனிடாலில் உள்ள மால் ரோட்டில் ரோட்டரி லோகோ கொண்ட பெஞ்சுகளை நிறுவியுள்ளது.'' சுத்தத்தை ஊக்குவிக்கவும், குப்பை கொட்டுவதை தடுக்கவும் ரோட்டரி ஜாகர்ஸ் பூங்கா முழுவதும் சுவரொட்டிகள் மற்றும் பேனர்களை வைத்துள்ளோம்'' என்று சங்க செயலாளர் நரிந்தர் குமார் லம்பா கூறுகிறார்.

இந்த ஆண்டு சங்கம் ஐந்து புதிய இண்டராக்ட் சங்கங்களை நிறுவியுள்ளது. தீபாவளிக்குப் பிறகு, மெஹ்ராகானின் இன்டராக்ட் சங்கம் அவர்களின் கிராமத்தில் தூய்மை இயக்கத்தை ஏற்பாடு செய்தது. பிளாஸ்டிக் மற்றும் பட்டாசு கழிவுகளை இன்டராக்டர்கள் சேகரித்து பாதுகாப்பாக அகற்றினர். தூய்மை இயக்கத்தைத் தொடங்குவதற்கு முன், பெற்றோர் மற்றும் ரோட்டரி சங்கத்தால் அவர்களுக்கு ஆரோக்கியமான காலை உணவு வழங்கப்பட்டது.■

# குழந்தைகள் புற்றுநோய்க்கு எதிரான RC பெங்களூர் சவுத்வெஸ்டின் போராட்டம்

ரோட்டரி செய்திக்குழு

RC பெங்களூர் சவுத்வெஸ்ட், RID 3190, 2010ல் தொடங்கப்பட்ட ரோட்டரி ஹெல்த் ஃபார் லைஃப் (RHFL) தொடர் திட்டங்களின் மூலம் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணியை செய்து வருகிறது. நவம்பர் வரை, கித்வாய் மெமோரியல் இன்ஸ்டிட்யுட் ஆப் ஆன்கோலோஜி மற்றும் செயின்ட் ஜான்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, பெங்களூரு ஆகியவற்றில் 228 குழந்தைகள் ரோட்டரியின் நிதியுதவியுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர் என இந்த 41 வயது சங்கத்தின் உறுப்பினரான ஞானமூர்த்தி கூறுகிறார்.

மேற்கண்ட எண்ணிக்கையில் ஆறு வயது நூர் அகமது மற்றும் அவரது 90 வயதான கொள்ளுப்பாட்டி நூர் ஜஹான் ஆகியோர் அடங்குவர். “கொரோனா தொற்றுநோயின் போது முழு குடும்பத்தையும் இழந்த நிலையில், அவர்கள் இருவர் மட்டுமே உயிர் பிழைத்தார்கள்-வயதானவர் ஒரு ஊனமுற்றவர், இளையவர் கடுமையான இரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்” என்று அவர் கூறுகிறார். இளம் புற்று நோயாளிகளின் உதவியாளர்களுக்கு உணவு வழங்கும் சங்கத்தின் வழக்கமான அன்னதான நிகழ்ச்சியின் போது கித்வாய் மருத்துவமனையில் அவர்களை சந்தித்துள்ளார். “ஏறக்குறைய அவர்கள் அனைவரும் ஏழ்மையாக தென்பட்டனர், என் யூகத்தின்படி, அன்றைய ஒரே உணவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தனர்.”

நூர்ஜஹானை அவரது கிராமத்தில் உள்ள முனிசிபல் டாக்டர் கித்வாய்க்கு அனுப்பி வைத்துள்ளார். தனது கிராமத்தில் உள்ளவர்கள் ஒரு குழு (ரோட்டரி என்று உச்சரிக்க முடியவில்லை) நோயாளிக்கு மருந்து மற்றும் உதவியாளர்களுக்கு உணவு ஆகியவற்றை கித்வாயில் வழங்குவதைப் பற்றி பேசியதை அவர் கூறினார். படிப்பறிவு இல்லாததால், ரத்தப் புற்றுநோயின் தீவிரத்தை பற்றி அவருக்குத் தெரியாமல் இருந்தது. அவருடைய கடவுள் நம்பிக்கைதான் அவரை எங்களிடம் அனுப்பியது என்று அவர் சொன்னார். எங்கள் சங்கம் அந்த குழந்தையை காப்பாற்ற முயற்சிக்கிறது - பேரழிவிற்குள்ளான அந்த கொள்ளுப்பாட்டிக்கு எங்களால் செய்ய முடிந்த குறைந்தபட்ச உதவி, என்கிறார் ஞானமூர்த்தி.



*திட்டத்தலைவர் S K பகவான் ஒரு புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தை மற்றும் அவன் தாயுடன்.*

### தொடக்கம்

இந்த உருக்கமான திட்டம் எவ்வாறு தொடங்கப்பட்டது என்பதைப் பற்றி பேசுகையில், திட்டத் தலைவர் S K பகவான் 2010–11ம் ஆண்டில் அப்போதைய DG (அமரர்) பாண்டுரங் போட்னிஸ் இந்த காரணத்தை ஆதரிப்பதற்காக தனது குறிக்கோளை அமைத்தபோது நடந்த ஒரு சம்பவத்தை விவரிக்கிறார். அப்போதைய சங்கத்தலைவரான பகவான், போட்னிஸுடன் கித்வாய் மருத்துவமனையின் குழந்தைகள் புற்றுநோயியல் பிரிவுக்கு சென்றிருந்தார். நிதிப்பற்றாக் குறையால் தங்கள் குழந்தைகள் புற்றுநோயால் அவதிப்படுவதை வேதனையுடன் பார்க்கும் பெற்றோரின் உதவியற்ற நிலையைப் பார்த்தபோது எங்கள் இதயம் வலித்தது. அப்போதே புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக அல்லது மானிய விலையில் மருந்துகளை வழங்க முடிவு செய்தோம். இதன் மூலம் RHFL ஆனது $1,000 ஆரம்ப மூலதனத்துடன் உருவானது.

கித்வாயில் உள்ள 43 குழந்தைகளுக்கான கீமோதெரபியை வழங்குவதற்கு பொருத்த மானியங்கள்



புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடன் RC பெங்களூரு சவுத்வெஸ்ட உறுப்பினர்கள்.

மூலம் $43,000 திரட்டினோம்; அதில் 37 குழந்தைகள் உயிர் பிழைத்தனர். அது 88 சதவீதம் உயிர்பிழைப்பு விகிதம்.

திட்டத்தின் விளைவுகளால் உற்சாகமடைந்த சங்கம், TRF ஆல் தொடங்கப்பட்ட முதல் வருடத்தில் உலகளாவிய மானியத்திற்கு விண்ணப்பித்தது, மேலும் RC ரெட்மாண்ட், RID 5330, USAன் ஆதரவுடன் $63,000 திரட்டியது. கித்வாய் மற்றும் செயின்ட் ஜான்ஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 2015 முதல் 2019 வரை மேற்கொள்ளப்பட்ட RHFL2 திட்டத்தின் கீழ், நாங்கள் 102 குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்தோம்.

இரண்டு பதிப்புகளின் நம்பிக் கைக்குரிய முடிவுகளால் உற்சாக மடைந்த சங்கம், RC ரிச்மாண்ட, RID 5080, USA உடன் இணைந்து $75,000க்கு மற்றொரு GGக்கு விண்ணப்பித்தது. அதிகமான குழந்தைகளை ஆதரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால், அப்போதைய DG டாக்டர் சமீர் ஹரியானியின் வழிகாட்டுதலின் கீழ் RC பெங்களூர் இந்திராநகருடன் சங்கம் கைகோர்த்து www.fueladream.com என்ற கிரவுட் ஃபண்டிங் தளம் மூலம் நிதி திரட்டியது. 135 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் ஆகஸ்ட் 2019ல் RHFL4 தொடங்கப் பட்டது.

ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த சிறு விவசாயி திப்பா ரெட்டியின் மகன் கிருஷ்ணாவின் வெற்றிகரமான சிகிச்சையை பகவான் நினைவு கூர்ந்தார். பிப்ரவரி 2021ல் கிருஷ்ணாவுக்கு லுகேமியா, புற்றுநோய் இருப்பது கண்டறியப் பட்டது. அவர் RHFL திட்டத்தின் மூலம் அக்டோபர் 2021ல் செயின்ட் ஜான்ஸ் மருத்துவ மனையில் தீவிர கீமோதெரபி சிகிச்சையை முடித்தார், "இது போன்ற வெற்றிக் கதைகள் நம்மை மேலும் பலவற்றைச் செய்யவும், பல உயிர்களைக் காப்பாற்றவும் தூண்டுகிறது." என்றார் பகவான்.■

---

## ஜல்காவ்னில் செயற்கைக் கை, கால் பொருத்தும் முகாம்

ஜல்காவ்னில் RC ஜல்காவ்ன் வெஸ்ட், RC நியூ கல்யாண், RID 3142 இணைந்து நடத்திய செயற்கைக் கை, கால் பொருத்தும் முகாமை RID 3030 DG ஆனந்த் ஜூன்ஜூன்வாலா தொடங்கி வைத்தார். 121 மாற்றுத் திறனாளிகள் நடக்க உதவிய இந்த முகாமில் RCகள் தானே நார்த், சோப்டா, ஜல்காவ்ன் வெஸ்ட் ரோட்டராக்ட் சங்கமும் பங்கேற்றார்கள். இந்த முகாமுக்கு ரூ.7 லட்சம் செலவானதாக RC ஜல்காவ்ன் வெஸ்ட் தலைவர் சுனில் சுக்வானி தெரிவித்தார்.■



# உலக இளம்பிள்ளைவாத நாளைக் கொண்டாடியது ரோட்டரி இந்தியா

ரோட்டரி செய்திக் குழு




RC கட்டக், RID 3262, ஆதரிக்கிற RAC பிருபா, சன்யாசிபட்னா கிராமத்தில் அங்கன்வாடியின் குழந்தைகள், அரசுப் பள்ளி மாணவர்கள் உதவியுடன் ஒரு விழிப்புணர்வுப் பேரணியை நடத்தி உலக இளம்பிள்ளைவாத நாளைக் கொண்டாடியது.




RC காரமடை, RID 3203, ஸ்ரீவினாயகா வித்யாலயா, காரமடை உடன் இணைந்து 'இளம்பிள்ளை வாதத்தை முடித்துவைப்போம்' விழிப்புணர்வு நடையை நடத்தியது.




RID 3011 DG *அஷோக் கன்டுர் மிதி வண்டி பேரணியில்.*

RC தில்லி சவுத், RID 3011, Delhi Fellowship for Cycling to Serve மற்றும் Delhi Puhlic School இணைந்து தொழுநோய், இளம்பிள்ளைவாதம்பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க ஒரு மிதிவண்டிப் பேரணியை நடத்தினார்கள். இந்த முன்னெடுப்பின்கீழ், உலகெங்கும் இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான போராட்டத்தை ஆதரிக்க ரோட்டரி உறுப்பினர்கள் ₹20 லட்சம் பங்களித்தார்கள்.

RC விஜயநகரம், RID 3020, ஆதரிக்கிற நார்தனசாலா இன்டராக்ட் சங்கம் உலக இளம்பிள்ளைவாத நாளன்று விஜயநகரத்தின் மூன்று முக்கியப் பகுதிகளில் இளம்பிள்ளைவாத விழிப்புணர்வு நடனம் ஒன்றை நடத்தியது. இந்த நிகழ்ச்சி ரோட்டரியிற்கு நல்ல பொதுத் தோற்றத்தை உண்டாக்கியது.





*சங்கத்தலைவர் Col விஜயகுமார், MLA H சலாம் முன்னிலையில், காலை உணவு வழங்குகிறார்.*

RC ஆலப்பி கிரேட்டர், ஆலப்பி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலக இளம்பிள்ளைவாத நாளைக் கொண்டாடியது, அங்கு சங்க உறுப்பினர்கள் 300க்கும் மேற்பட்ட நோயாளிகள், அவர்களைக் கவனித்துக் கொள்வோருக்குக் காலை உணவு வழங்கினார்கள். சங்கத் தலைவர் கர்னல் விஜயகுமார் இந்தியாவில் இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதில் ரோட்டரியின் பங்கு, உலகெங்கும் இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான அதன் போராட்டத்தைப்பற்றிப் பேசினார்.




RCகள் கிரேட்டர் சில்சார், சில்சார் பிங்க், சில்சார் சென்ட்ரல், சில்ச்சாரைச் சேர்ந்த ரோட்டரியன்கள், RAC சில்ச்சாரின் ரோட்டராக்டர்கள் குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்குவதன் முக்கியத்துவத்தைப்பற்றிப் பொதுமக்களுக்குத் தெரிவிக்க ஒரு பேரணியை நடத்தினார்கள்.




உலக இளம்பிள்ளைவாத நாள் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, RCகள் மைசூர் சவுத் ஈஸ்ட், விஜயநகர், HD கோடெ மற்றும் மைசூர் ஸ்டார்ஸ், RID 3181, இணைந்து, மைசூரின் முக்கிய இடங்களில் இளம்பிள்ளைவாத விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினார்கள்.

RC தர்மாநகர், RID 3240, சங்கத்தின் ரோட்டராக்டர்கள், சாரணர், சாரணியருடன் சேர்ந்து இளம்பிள்ளைவாதப் பேரணி ஒன்றை நடத்தியது.



# சங்கங்களின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## பிளாஸ்டிக் வேண்டாமே!



பிளாஸ்டிக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதை ஊக்குவிக்க, RID 3030க்கு உட்பட்ட நாசிக் வெஸ்ட் ரோட்டரி சங்கம் ஜே-ஹூக் (J-Hook) திட்டத்தை கையிலெடுத்துள்ளது. இந்த கொக்கிகள் பள்ளி மாணவர்களுக்கு பிளாஸ்டிக் குப்பைகளை சேகரிக்க விநியோகிக்கப்படுகின்றன.■

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானிற்கு உதவி



*RC மதுரை மெட்ரோ ஹெரிட்டேஜ், RID 3000, பாகிஸ்தானில் உள்ள RC லாகூர் ஷாஹின்-யிற்கு வெள்ளத்தால் பாதிக்கப் பட்டோருக்கு உதவ பண உதவி அளித்துள்ளது. இது அவர்களுக்கு உணவு மற்றும் மருந்து வாங்க உதவும் என்று மதுரை சங்கத் தலைவர் C R வெங்கடேஷ் கூறினார்.*■

## மரம் நடும் திட்டம்



RID 3231ன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு, மாவட்ட ஆளுநர் J K N பழனி தலைமையில் 2,50,000 பனை விதைகளை நடவு செய்துள்ளனர். இது தொடர்பான நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் P குமரவேல் பாண்டியன் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் உள்பட 50,000 பெண்கள் கலந்து கொண்டனர்.■

## மகளிர்க்கு சைக்கிள்



*PRIP சேகர் மேத்தா மற்றும் அவர் மனைவி ராஷி ஒரு மாணவிக்கு மிதிவண்டி வழங்குகின்றனர்.*

ரோட்டரியின் முன்னாள் தலைவர் சேகர் மேத்தா, RID 3100க்கு உட்பட்ட RC முஸாஃபர் நகர் மிட்டவுன் ஆதரவிலான திட்டத்தின் கீழ், 200 ஏழைப் பெண்களுக்கு சைக்கிள்களை வழங்கினார். இந்நிகழ்வில் திட்டத்தின் தலைவர் சுனில் அகர்வால், சங்கத்தின் தலைவர் அங்கித் மிட்டல் மற்றும் செயலாளர் சுஷோப் பிண்டால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.■

# RID 3170ன் சேவைக் கொண்டாட்டம்

ரோட்டரி செய்திக் குழு



*கோவா சுற்றுலா அமைச்சர் ரோஹன் கௌன்டே RIன் விருதை PDG திலீப் சல்காவ்கர் மற்றும் அவர் மனைவி பிரமோதிடம் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி, IPDG கௌரிஷ் தோண்ட் மற்றும் ப்ரத்திமா தோண்ட் முன்னிலையில் அளிக்கிறார்.*

RID 3170 IPDG கௌரிஷ் தோண்ட் சமீபத்தில் கோவாவில் நடத்திய, RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, பல மாவட்டங்களைச் சேர்ந்த பல PDGகள் பங்கேற்ற நிகழ்ச்சி ஒன்றில் பல மாவட்டத் தலைவர்கள், சங்கத் தலைவர்களுக்குப் பாராட்டு விருதுகள் வழங்கப்பட்டன, இந்த மாவட்டத்தைச் சேர்ந்த AKS உறுப்பினர் PDG திலீப் சல்காவ் கருக்கு RIன் தனித்துவமான சேவை விருது வழங்கப்பட்டது. கோவா சுற்றுலா அமைச்சர் ரோஹன் கௌன்டெ இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார், இந்த மாநிலத்தில் ரோட்டரியன்கள் செய்கிற மிகச் சிறந்த சேவையைப் பாராட்டினார். ■

*RI இயக்குனர் கோட்பாகி விருது பெற்ற உறுப்பினர்களுடன்.*



இசை & மெல்லிசை

# சோகமான பாடல்களின் பேரரசன் முகேஷ்

S R மது

1945ம் ஆண்டில் K L சைகல், தில் ஜல்தா ஹை ஜோ ஜால்னே தோ என்ற பாடலைக் கேட்டார். அந்த பாடல் சைகலின் குரலிலும், பாணியிலும், சோகம் ததும்பி இருந்தது. எனக்கு இந்தப் பாடலை பாடியதாக நினைவில்லையே என்றார் சைகல். அந்தப் பாடல் உண்மையில் “பெஹ்லி நாஸர்” படத்துக்காக அனில் விஸ்வாஸ் இசையமைப்பில் முகேஷ் என்னும் இளம் பாடகர் பாடியது என்பதை அறிந்து வியந்து போனார். தர்த் கா ஷெஹ்ஸ்ஜாடா (வலியின் பேரரசர்) என்று முகேஷை அவர் வர்ணித்தார். அனில் விஸ்வாஸும், பின்னர் நௌஷத்தும் சைகல் பாணியில் பாடுவதை விட்டு விட்டு தனது சொந்த பாணியில் பாடும்படி முகேஷை கேட்டுக் கொண்டனர். அதன் பின் ஹிந்தி திரையுலகில் சில மறக்கமுடியாத பாடல்கள் உள்பட ஆயிரத்துக்கும் மேலான பாடல்களை முகேஷ் பாடினார்.

முகேஷுக்கு ரஃபியைப் போன்ற குரல் வளமும், கிஷோர் குமாரிடம் இருந்த சுறுசுறுப்பும், மன்னா டேயிடம் இருந்த கவர்ச்சியும் இல்லாமல் இருக்கலாம், ஆனால், அவரது இனிமையான கணீர் குரல், அவரது நேர்மை, எளிமை, நற்குணம் ஆகியவை அவரது பாடல்களை ரசிகர்கள் விரும்பிக் கேட்க வைத்தது. அவரின் இரண்டு மறக்கமுடியாத பாடல்கள் ஆவாரா ஹூன் மற்றும் மேரா ஜூட்டா ஹை ஜாபானி முகேஷ் மற்றும் ராஜ்கபூரை இந்தியாவுக்கு அடையாளம் காட்டியது. மும்பையாக இருந்தாலும் சரி மாஸ்கோவாக இருந்தாலும் சரி அல்லது மன்ஹாட்டனாக இருந்தாலும் சரி இந்தப் பாடலை முணு முணுக்காதவர்களே இருக்கமாட்டார்கள்.

சின்ன சின்ன தகவல்கள்: 1950களில் மும்பையில் அப்போதைய ஆளுநர் எம்.சி.சக்லா ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் இந்தியாவுக்கு வருகை தந்த சீனப் பிரதமர் சூ-யென்-லாய் பங்கேற்றார். அந்த நிகழ்ச்சியில் தலத் மஹ்மூத் மற்றும் கீதா தத் பாடல்களைப் பாடினர்.

அப்போது சிறப்பு விருந்தினரான சீனப் பிரதமர், ஆவாரா ஹூன் பாடலை நான் கேட்க முடியுமா? என்று கேட்டார். முகேஷின் அந்த பாடலுக்கான டியூனை தலத் மற்றும் கீதா தெரிந்திருந்து வைத்திருந்தனரே தவிர பாடலின் வரிகள் அவர்களுக்குத் தெரியவில்லை.





*முகேஷ் தர்மேந்திரா, மனோஜ்குமார், ராஜ்கபூர் மற்றும் திலீப்குமார் ஆகியோருக்கு பின்னனி பாடல் பாடியுள்ளார்.*

உடனடியாக ஒரு தீர்வு காணப் பட்டது. ஆவாரா ஹூன் பாடலின் முதல் சில வரிகளை அவர்கள் பாடினார்கள். அதன் பின் அந்த பாடலின் டியூன் இசை க்கப்பட்டது. ஆனாலும் வேறு பாடல்களின் சில வார்த்தைகள் மூலம் நிலைமையைச் சமாளித்தார்கள். கிட்டதட்ட முகேஷ் போலவே பாடியதால் சூ-யென்-லாய்க்கு அந்த பாடலைக் கேட்டதில் மிக்க மகிழ்ச்சி.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த பேநசீர் புட்டோவும் முகேஷின் பரம ரசிகர். அவர், காரில் பயணம் செய்யும்போதெல்லாம், முகேஷின் பாடல்கள் அடங்கிய கேஸட்டுகளை போட்டுக் கேட்பாராம்.

முகேஷின் மற்றொரு ரசிகர், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் (கூக்ளி பந்து வீசுவதில் வல்லவர்) B சந்திர சேகர். முகேஷ் பாடல்களின் ஒரு பெரிய தொகுப்பையே அவர் வைத்திருந்தார். ஒலிப்பதிவுக் கூடத்தில் ஒருநாள் சந்திர சேகருக்கு முகேஷ் அறிமுகப் படுத்தி வைக்கப்பட்டார். ஆனால், அவரிடம் சந்துரு அதிகம் பேச வில்லை. அதன் பிறகு சந்திர சேகர் அடிக்கடி மும்பையிலுள்ள அவரது வீட்டில் முகேஷை சந்திப்பதும் அவருடைய குடும்பத்தாருடன் விருந்து சாப்பிடுவதுமாக இருந்தார். ஒரு முறை மும்பை-கர்நாடகத்துக்கு இடையிலான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் சந்திரசேகரின் கூக்ளி பந்துவீச்சு கவாஸ்கர் உள்ளிட்ட வீரர்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியது. அப்போது ஆடுகளத்தில் ரசி கர்கள் வைத்திருந்த டிராஸ்சி ஸ்டரிலிருந்து முகேஷின் பாடல் திடீரென ஒலித்தது. அப்போது கவாஸ்கர், சந்திரசேகரிடம், முகேஷின் இந்தப் பாடலை கேட்டிருக்கிறீர்களா? என்று கேட்டு அவரது கவனத்தை திசை த்திருப்பினார். முகேஷுக்கு நிதின் என்ற பெயரில் மகன் உண்டு. சந்துருவும் தனது மகனுக்கு நிதின் என்று பெயரிட்டிருந்தார்.

விரக்தியின் அல்லது சோகத்தின் ஆழத்தை திறம்பட வெளிப்படுத்தும் இனிமையான குரல் முகேஷிடம் இருந்தது. தனிப்பட்ட காதல் பாடல்கள், டூயட் பாடல்கள் மற்றும் தத்துவப் பாடல்கள் ஆகியவற்றை அவர் பாடியிருந்தாலும் அவரது சோகப் பாடல்கள் ரசிகர்



*தோ தில் என்ற 1947ம் வருட படத்தில் முகேஷ் மற்றும் சுரையா.*

களிடையே மயக்கத்தை ஏற்படுத்தியது. அவர் சோகத்தின் நிழல்களை, தனிமை, காதல் ஏக்கம், மனச்சோர்வு, விரக்தி, ஏமாற்றம் என பலவிதங்களில் வெளிப்படுத்தி ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தார்.



**இடமிருந்து:** *முகேஷ், லதா மங்கேஷ்கர், இசையமைப்பாளர் பண்டிட் ரவி சங்கர் மற்றும் இயக்குனர் திரிலோக் ஜெட்லி கோடான் (1963) பட பாடல் ஒத்திகையின் போது.*

## ஆரம்ப நாட்கள்

முகேஷ், 1923ம் ஆண்டு ஜூலை மாதம் 22ம் தேதி தில்லியில் பிறந்தார். அவரது தந்தை ஒரு பொறியாளர். 10 குழந்தைகள் உள்ள குடும்பத்தில் இவர் 6-வது குழந்தை. படிப்பில் அவருக்கு போதிய கவனம் இல்லை. எனவே எஸ்.எஸ்.சி.யுடன் படிப்பை நிறுத்தி விட்டார். இளம் வயதில் கே.எல்.சைகலின் பாடல்களால் கவரப்பட்டு அவரது பாடல்களை எப்போதும் முணுமுணுத்துக் கொண்டே இருப்பார். அவருக்கு அரசு வேலை கிடைத்தபோதும் அவரது எண்ணமும் மனதும் இசையிலேயே லயித்து இருந்தது.

தூரத்து உறவினரான நடிகர் மோதிலால், முகேஷ் பாடுவதைக் கேட்டார். அவரது குரல் நன்றாக இருப்பதை அறிந்து முகேஷை மும்பைக்கு அழைத்து வந்து ஒரு குருவிடம் இசை கற்கவைத்தார். சினிமாவில் சில பாடல்களைப் பாடிய பின் முகேஷ் முதலில் இசையமைப்பாளர் அனில் விஸ்வாஸ், பின்னர் நௌஷத்தின் கவனத்தை ஈர்த்தார். 1945ம்





*முகமது ரஃபியுடன் முகேஷ்.*

ஆண்டு தில் ஜல்தா ஹை பாடல் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. 1948ல் நௌஷத் இசையமைப்பில் வெளியான, திலீப் குமார் நடித்த மேளா படத்தில் வரும் காயே ஜா கீத் மிலன் கே என்னும் பாடல் பிரபலமானது. உண்மையில் அந்த படத்தில் நடிப்பதற்கு திலீப் முதலில் தயக்கம் காட்டிவந்தார். ஆனால் அந்த படத்தில் முகேஷ் பாடிய மேரா தில் டோட்னிவாலே பாடல் பதிவைக் கேட்டு பின் மனம் மாறி நடித்தார்.

### அழிவில்லாத அந்தாஸ்

1949ம் ஆண்டு வெளியான அந்தாஸ் மறக்க முடியாதது இந்த படத்தின் பாடல்கள் மூலம் முகேஷ் லட்சக்கணக்கான ரசிகர்களை மயங்கவைத்தார். இந்த சமயத்தில்தான் ராஜ்கபூர், திலீப் மற்றும் நர்கீஸ் ஒன்றாக இணைந்தனர் (இதற்கு முன் அவர்கள் ஒன்று சேர்ந்ததே இல்லை). திலீப்குமாருக்காக முகேஷ் இந்த படத்தில் நான்கு தனிப்பாடல்களை பாடியுள்ளார். “து கஹே ஆகர்”, “ஜூம் ஜூம் கே நாச்சோ”, “ஹம் ஆஜ் கஹின் தில் கோ பைடே” மற்றும் “தோடோ நா தில் தோடோ நா ஆகிய நான்கு பாடல்களும் இனிமையானவை. (இந்த பாடலை மட்டும் 23 முறை ஒத்திகை பார்த்தபின் நௌஷத் பதிவு செய்து ஓ.கே. செய்தார்). இந்த நான்கு பாடல்களுக்கான காட்சிகளிலும் திலீப் அருமையாக நடித்திருந்தார். அவை மறக்க முடியாத காட்சிகள்.


ஆனால், 1950களின் முற்பகுதியில் ராஜ்கபூருக்காக முகேஷ் பாடிய பாடல்கள் இசை உலகில் புயலைக் கிளப்பியது. 1948 முதல் 1953 வரை ராஜ்குமார் நடித்த 6 படங்களில் தனிப்பாடல், லதாவுடன் டூயட் பாடல், குழு பாடல் என 13 பாடல்களைப் பாடியுள்ளார் முகேஷ். அந்த பாடல்கள் அனைத்தும் பிரபலமான பாடல்களாகும். ஆக், பர்ஸாத், ஆவாரா, ஆஹ், ஸ்ரீ 420 மற்றும் ஜக்தே ரஹோ அவற்றில் குறிப்பிடத்தக்கவை. இவை அனைத்திலும் நர்கீஸ் கதாநாயகியாக நடித்துள்ளார். சங்கர் – ஜெய்கிஷன் இசையமைப்பாளர். திரைக்கதை வசனம் ஷைலேந்திரா. இந்த மூவரும் பாலிவுட்டின் இசை யையே மாற்றியமைத்தவர்கள் எனலாம். ஆனால், ராஜ்கபூருக்காக முகேஷ் பாடி, 1950-இல் வெளிவந்த “பாவ்ரே நைன்” படத்தில் வரும் தேரே துனியா மெய்ன் தில் லக்தா நஹின் என்ற பாடல்தான் எனக்கு மிகவும் பிடித்தமானது.

### முகேஷ் செய்த தவறு

எனினும் முகேஷ், தாம் செய்த சில தவறுகள் மூலம் பெயரையும், புகழையும் கெடுத்துக் கொண்டார். அதாவது பின்னணிப் பாடகரான முகேஷ் முதலில் நடிக்க ஆசைப்பட்டார். பின்னர் தயாரிப்பாளராகவும் ஆனார்.



**இடமிருந்து:** *சலீல் சௌத்ரி, முகேஷ் மற்றும் ஆஷா போஸ்லே.*



*லதா மங்கேஷ்கருடன் முகேஷ்.*

ஆனால் அவரின் படங்கள் எடுபடவில்லை. இதன் விளைவு ரஃபி, கிஷோர், மன்னா டே, ஹேமந்த் குமார் போன்ற போட்டி பின்னணி பாடகர்கள் மும்பை திரை உலகில் பிரபலமானார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்ற பாடகரான முகேஷ், திடீரென காணாமல் போனார்.

1950களின் நடுப்பகுதி ஒரு இருண்டகாலமாக இருந்தது. பின்னணி பாடுவதற்கு ஒப்பந்தங்களும் போடப் படவில்லை. கையில் இருந்த பணமும் கரைந்தது. உள்ளூர் காய்கறி வியாபாரியிடம் அவ்வப்போது முகேஷ் கடன் வாங்கும் நிலை உருவானது. அப்போது முகேஷின் மகன் நிதின் 5ம் வகுப்பும், மகள் ரீட்டா 3ம் வகுப்பும் படித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் பள்ளிக் கட்டணத்தை செலுத்த முடியாததால் தேர்வு எழுத அனுமதிக்கப்படவில்லை. ஒரு மழை நாளில் அவர்கள் வீட்டிற்கு நடந்தே சென்றனர். இது முகேஷுக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியது.

### அற்புதமாக மீண்டு வந்தார்!

ஆனால், முகேஷ் மீண்டும் பின்னணிப் பாடகராக அவதாரம் எடுக்க அவரது நண்பர் சலீல் சௌத்ரி உதவி செய்தார். 1958ல் மதுமதி படத்தில், திலீப் நடிக்க, அவருக்காக சுஹானா ஸஃபர் அவுர் யே மௌஸம் ஹஸீன் பாடலைப் பாடினார். அந்த ஆண்டே மீண்டும் திலீப் நடித்த யாஹுதி படத்திற்காக யே மேரா தீவானாபன் ஹை என்ற பாடலை சங்கர் - ஜெய்கிஷன் இசையமைப்பில் பாடினார். 1958ம் ஆண்டு முகேஷ்க்கு அற்புதமான மறுபிரவேச ஆண்டாக இருந்தது. அவர் ராஜ் கபூருக்காக இரண்டு அழுத்தமான பாடல்களைப் பாடினார். வோ சுபஹ் கபி து ஆயேகி (ஃபிர் சுபஹ் ஹோகி) மற்றும் ஆன்ஸூ பாரி ஹை (பர்வரிஷ்) ஆகிய பாடல்கள்தான் அவை. அதன் பிறகு அவருக்கு வெற்றி தொடர்ந்தது. சங்கர் - ஜெய்கிஷன் இசையமைப்பில் அனாரி படத்தில் வரும் சப் குச் ஸீகா ஹம்னே மற்றும் கிஸி கி முஸ்குராஹடன் பி ஹோ நிஸார் ஆகிய பாடல்களை வெற்றிப்பாடல்களாக ரசி கர்களுக்கு முகேஷ் வழங்கினார்.

முகேஷ் தனது சினிமா வாழ்க்கையின் இரண்டாவது கட்டத்தில் செழுமை பெற்றார். பல வெற்றிப்பாடல்களை ரசிகர்களுக்கு அளித்தார். 1950களில் செய்த தவறுகளை உணர்ந்து சிறப்பாக செயல் பட்டார். கல்யாண்ஜி-ஆனந்த்ஜி ஆகியோரின் எழுச்சிக்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்தார் முகேஷ். இதை அவர்களே ஒரு முறை ஒப்புக் கொண்டுள்ளனர். முகேஷ், சலீல் சௌத்ரி, சங்கர்-ஜெய்கிஷன் மற்றும் மதன் மோகன் ஆகியோருக்கு வெற்றிப்படங்களை வழங்கினார். அதுமட்டுமல்ல, மனோஜ் மற்றும் தர்மேந்திரா இருவரின் நடிப்பையும் உயர்த்தினார். 1960 மற்றும் 1970களில் முகேஷ் பாடிய சிறந்த பாடல்களை இங்கே குறிப்பிட வேண்டும். சாரங்கா தேரி யாத் மி (சாரங்கா-1960), சல் ரீ சஜ்னி (பம்பாய் கா பாபு-1960), மேரே டூடே ஹூ தில் ஸே-1960), ஜானே வாலே ஹோ ஸகே து லாட் கே ஆனா (பந்தினி-1963), தோஸ்த் தோஸ்த் நா ரஹா (சங்கம்-1964) ஒஹ்ரே டால் மிலே நதி கே ஜல் மெய்ன் (அனோகி ராத்-1967), சந்தன் ஸா பதன் (சரஸ்வதி சந்த்ரா-1968), ஜானே கஹான் கயே வோ தின் (மேரே நாம் ஜோக்கர்-1970), கோயி ஜாப் ஹமாரா ஹிரிதே தோட் டீ (பூரப் அவுர் பச்சிம்-1970), கஹின் தூர் ஜாப் தின் தல் ஜாயே (ஆனந்த்- 1971), கபி கபி மேரே தில் மெய்ன் (1976).

கை பார் யுஹி தேகா ஹை (சலீல் சௌத்ரி இசையமைப்பில் 1974ல் வெளியான ரஜனிகாந்தா



படம்) என்ற சிறந்த பாடலுக்காக, சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருது முகேஷுக்கு வழங்கப்பட்டது. நான்கு முறை பிலிம் பேர் விருதும் அவருக்கு கிடைத்தது. ஸப் குச் ஸீக ஹம்னே (அன்ஸாரி-1959, சங்கர்-ஜெய்கிஷன்), ஸப்ஸே படா நதான் (பெஹ்சான், 1970, சங்கர்-ஜெய்கிஷன்), ஜெய் போலோ பெய்மான் கி (பெய்மான், 1972, சங்கர்-ஜெய்கிஷன்) மற்றும் கபி கபி மே ரே தில் மே (கபி கபி காயம்-1976) ஆகிய நான்கு சிறந்த பாடலுக்காக அவருக்கு விருது வழங்கப்பட்டது. மொத்தத்தில் ராஜ்கபூருக்காக 110 பாடல்கள், மனோஜ் குமாருக்காக 46 பாடல்களும் மற்றும் திலீப் குமாருக்காக 19 பாடல்களையும் முகேஷ் பாடியுள்ளார். 1978ல் வெளிவந்த சத்தியம் சிவம் சுந்தரம் படத்தில் லட்சுமிகாந்த் - பியாரேலால் இசையமைப்பில் ராஜகபூருக்காக பாடிய சஞ்சல் ஷீதல் நிர்மல் கோமல் என்ற பாடல் தான் முகேஷ் பதிவு செய்த கடைசி பாடல்.

முகேஷ் கொஞ்சம்கூட பொறாமை எண்ணம் இல்லாதவர். அதேபோல தற்பெருமை கொள்பவரும் அல்ல. ரஃபி, கிஷோர், மகேந்திர கபூர் பாடிய பாடல்கள் நன்றாக இருந்தால் அவர்களைத் தொடர்பு கொண்டு பாராட்டுவார். தனது நண்பர்கள் கல்லூரிக்கு காரில் வருவதாக நிதின் ஒரு முறை தந்தை முகேஷிடம் கூறினார். முகேஷ் அமைதியாக, தனது கார் சாவியை மகன் நிதினிடம் கொடுத்தார். அதைக் கண்டு அவர் மகிழ்ச்சி அடைந்தார். ஆனால், தந்தை எங்கு சென்றாலும் பஸ்ஸில் பயணம் செய்வதைக் கண்ட நிதின், வெட்கித் தலைகுனிந்து கார் சாவியை தந்தையிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்!

லதா மங்கேஷ்கருக்கு மிக நெருக்கமான பாடகராக முகேஷ் இருந்தார். 1976ல் முகேஷ் அமெரிக்காவில் இசை நிகழ்ச்சிக்காகச் சென்ற போது லதாவை வற்புறுத்தி அழைத்துச் சென்றார். 1976ம் ஆண்டு, ஆகஸ்ட் 27ம் தேதி இசைக் குழுவினர் டெட்ராய்ட்டில் நிகழ்ச்சி நடத்த இருந்த நிலையில், முகேஷுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. ஐந்தாவது முறையாக அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. ஆனால், இந்த முறை அதிலிருந்து அவர் மீளவே இல்லை. அப்போது அவருக்கு வயது 53 தான். லதா மங்கேஷ்கர் மிகுந்த துயரத்துடன் முகேஷின் உடலை மும்பைக்கு கொண்டு வந்தார். ஜெய்கிஷன் மறைந்தபோது நான் ஒரு கையை இழந்தேன். ஷைலேந்திரா இறந்தபோது மற்றொரு கையை இழந்தேன். இப்போது முகேஷும் இறந்து விட்ட நிலையில் நான் எனது வாழ்க்கையையே இழந்து விட்டேன் என்று ராஜ்கபூர் வருத்தத்துடன் கூறினார். அவரது மறைவு உலகெங்கும் உள்ள ரசிகர்களிடம் துயரத்தை ஏற்படுத்தியது. எனினும் முகேஷின் சக்தி வாய்ந்த, தனித்துவமான இனிமையான குரல் இன்றும் காற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.



*ராஜ்கபூருடன் முகேஷ்.*

**இடமிருந்து:** *தலத் மெஹ்மூத், முகேஷ், லதா மற்றும் ரஃபி.*



எழுத்தாளர் மூத்த பத்திரிகையாளர் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் சவுத் உறுப்பினர்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# வெள்ளி விழா கொண்டாடும் இன்டராக்ட் சங்கம்

V முத்துகுமரன்

தூத்துக்குடியில் உள்ள ஸ்ரீ காமாட்சி வித்யாலயா மெட்ரிக் மேனிலைப் பள்ளி 30 ஆண்டுகளுக்கு மேலாக கல்விச் சேவையில் சிறந்து விளங்குகிறது. படிப்பிலும், விளையாட்டு உள்ளிட்ட இதர துறையிலும் சிறப்பாகச் செயல்படும் மாணவர்களைக் கொண்டு இயங்கி வரும் இந்த பள்ளியின் இன்டராக்ட் சங்கம், தனது வெள்ளி விழாவை இந்த ஆண்டு கொண்டாடுகிறது.

ஸ்பிக் நகர் ரோட்டரி சங்கத்தின் சங்கத்தின் ஆதரவில் தான் இன்டராக்ட் சங்கம் செயல்பட்டு வருகிறது. 1996ம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த இன்டராக்ட் சங்கத்தின் நோக்கம் மாணவர்களிடையே சேவை மனப்பான்மையை உருவாக்குவதாகும். வின்ஸ் திட்டங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள், ஒவ்வொரு வகுப்பிலும் மினி நூலகம் என பல திட்டங்களைச் செயல் படுத்தியுள்ளோம். ரோட்டரி சங்கத்தின் கள நடவடிக்கைகளுக்கும், திட்டங்களை செயல்படுத்தவும் ஆதரவாக இருந்துள்ளோம் என்கிறார் பள்ளியின் முதல்வர் G மீனாகுமாரி.

இந்த சங்கத்தில் 27 உறுப்பினர்கள் உள்ளனர். போலியோ பிளஸ் உள்ளிட்ட ரோட்டரியின் திட்டங் களுக்கு பிரசாரம் செய்து தங்களின் இருப்பை உணர்த்துவார்கள்.

### வருடாந்திர திட்ட நிதி

ஒவ்வொரு ஆண்டும் இன்டராக்ட் சங்கம், தங்களின் செயல்பாடுகளை தொடங்குவதற்காக ரோட்டரி ரூ.15,000 முதல் ரூ.20,000 வரை தொகுப்பு நிதி வழங்குகிறது. பள்ளியில் சானிடரி நாப்கின் எரியூட்டியை நிறுவியுள்ளனர். மாவட்ட அளவிலான பெண் குழந்தையைக் காப்போம் திட்டத்தை இன்டராக்ட் உறுப்பினர்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றனர் என்றார் ஸ்பிக் நகர் ரோட்டரி சங்கத்தின் தலைவர் அருண் ஜெயகுமார்.

அண்மையில், அவர்கள் ஒவ்வொரு வகுப்பறையிலும் ஒரு சிறிய புத்தக அலமாறியை ஏற்படுத்தி அதில் பல்வேறு புத்தகங்களை வைத்துள்ளனர். பள்ளியின் மூன்று பிளாக்குகளிலும் வகுப்பறையில் வைக்கப்பட்டிருக்கும் இந்த புத்தகங்கள், மாணவர்கள் படித்து முடித்தபின் சுழற்சி முறையில் ஒரு பிளாக்கிலிருந்து மற்றொரு பிளாக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டு வைக்கப்படும். வயதுவந்தோர்க்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பதிலும் இன்டராக்டர்கள் உதவி வருகின்றனர். தீபாவளி பண்டிகையையொட்டி, அதிகம் பயன்படுத்தப்படாத நல்ல ஆடைகளை இஸ்திரி செய்து அன்பு உள்ளங்கள் முதியோர் இல்லத்தில் உள்ள 180 பேருக்கு வழங்கப்பட்டன. பெண் இன்டராக்டர்கள் பத்து பேர் ஆறுமுகசாமி அன்பு ஆசிரமத்திற்குச் சென்று அங்கு பராமரிக்கப்படும் ஆதரவற்ற 18 வயதுக்கு கீழான, 55 பெண் குழந்தைகளுடன் தீபாவளி நாளை கொண்டாடினர் என்று நினைவுகூர்ந்தார் ஜெயகுமார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த பள்ளியைச் சேர்ந்த 14 மாணவர்கள் ஐ.ஐ.டி.யில் மேற்படிப்புக்காக சேர்ந்துள்ளனர். கடந்த காலங்களில் இன்டராக்டர்கள் தேசிய அளவிலான டேக்வாண்டோ போட்டியில் பதக்கங்களை வென்றுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்மார்ட் வகுப்பறைகள், கணினி ஆய்வகம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், ஆடவர் மற்றும் மகளிருக்கான தனித்தனி கழிப் பறைகள் என பல்வேறு வசதி கள் கொண்ட இப்பள்ளியில் 700 மாணவர்கள் படித்து வருகின்றனர். பொது மக்கள் மற்றும் சமூகத்தினருடன் நாங்கள் தொடர்பு கொள்ள இன்டராக்டர்கள் ஒரு பாலமாக இருக்கின்றனர், என்கிறார் பள்ளியின் முதல்வர். ஸ்பிக் குழுமத்தின் நிறுவனரும் தொழிலதிபருமான A Cமுத்தையா, இந்த பள்ளியின் புரவலராக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.■

*DG V R முத்து முன்னிலையில் RC ஸ்பிக் நகர் தலைவர் அருண் ஜெயகுமாரிடம் (இடமிருந்து 3வது) இன்டராக்ட் சங்கத்தலைவர் ஆஷிவ் முத்து சுதன் ஆடைகள் கொண்ட பெட்டியை வழங்குகிறார். உடன் பள்ளி தலைமை ஆசிரியை G மீனாகுமாரியும் (இடதில்) உள்ளார்.*



# பெண்கள் சுயதொழிலுக்கு உதவும் ரோட்டரி ஆட்டோக்கள்

ரோட்டரி செய்திக் குழு



IPDG *ராஜேந்திர அகர்வால், சங்கத் தலைவர் வித்யா சுப்ரமணியன் மற்றும் தொழில் பயிற்சி இயக்குனர் அல்காமுரளி முன்னிலையில் திட்டத்தை துவக்கி வைக்கிறார்.*

மும்பையைச் சேர்ந்த 20 பெண்கள் விரைவில், சொந்த ஆட்டோ ரிக்ஷா வாகனத்தை ஓட்டுவார்கள். இதற்காக நாம் RID 3141க்கு உட்பட்ட தியோனர் ரோட்டரி சங்கத்தின் "பிங்க் ஏஞ்சல்ஸ்" (Pink Angels) திட்ட முன்முயற்சிக்கு நன்றி. தொழில் பயிற்சி இயக்குநர் அல்கா முரளியின் யோசனையின் பேரில் இத்திட்டம் கடந்த ஆண்டு செயலுக்கு வந்தது. முன்பு ஒரு பெண்ணை ஆட்டோ ஓட்டுனராக மாற்றுவது கடினமாக இருந்தது என்கிறார் அல்கா. உறுப்பினர்களின் மன உறுதியும், சமூகத்தினரின் ஆதரவும், குடும்பத்தினரின் ஆதரவும் தங்கள் முன்னேற்றத்திற்கும், தங்கள் குடும்பத்தின் வளர்ச்சிக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற துணிச்சல் பெண்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

பெண்களுக்கு மூன்று சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு பயிற்சி அளிப்பதுடன், அவர்கள் வாகனத்தை வாங்குவதற்கும், ஓட்டுநர் உரிமம் மற்றும் கடன் பெறுவதற்கும் சங்கம் உதவுகிறது. 20 பெண்களும் பயிற்சியின் பல்வேறு நிலைகளில் உள்ளனர். அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் கடனுதவி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த ஆகஸ்ட் மாதம் செம்பூரில் ஒரு நிகழ்ச்சியில், சங்கத்தின் தலைவர் வித்யா சுப்பிரமணியன், முன்னாள் தலைவர் சுதிர் மேத்தா மற்றும் மாவட்ட இயக்குநர் இந்துமதி கோபிநாதன் முன்னிலையில் IPDG ராஜேந்திர அகர்வால், நான்கு பெண்களுக்கான ஆட்டோ ரிக்ஷாக்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். மத்திய அரசின் "பிரதம மந்திரி முத்ரா யோஜனா" திட்டத்தின் கீழ் இந்த பெண்களுக்கு ஆட்டோ வாங்க நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.■

# முன்னாள் தலைவர்கள் சந்திப்பு

RID 3054, DG பல்வந்த் சிங் சிரானா தலைமையில் 'உமங்' என்ற பெயரில் 'முன்னாள் தலைவர்கள் சந்திப்பு' ஒன்றை நடத்தியது. இந்த 2 நாள் நிகழ்ச்சியை RC ஜெய்ப்பூர் ராயல் நடத்தியது, PRID கமல் சங்வி, RIDE அனிருதா ராய் சௌத்ரி தலைமை விருந்தினர்களாகப் பங்கேற்றார்கள்.

இந்த நிகழ்ச்சியின் முக்கிய அம்சங்கள், முன்னாள் தலைவர்கள் தகவல் புத்தக வெளியீடு, மாவட்ட PDGகளுடன் இயல்பான கேள்வி, பதில் நிகழ்வுகள். இந்த நிகழ்ச்சி முன்னாள் தலைவர்கள் இப்போதைய திட்டங்களில் சுறுசுறுப்பாக ஈடுபட ஊக்குவிக்கும், தக்க வைத்துக் கொள்ளுதலை மேம் படுத்தும் என்றார் DG சிரானா. "ரோட்டரியில் திறன் மிக்க, அனுபவம் உள்ள சங்க முன்னாள் தலைவர்கள் பலர் உள்ளார்கள். அவர்களுடைய திறன்களைப் பயன்படுத்தி நம் அமைப்பை மேம்படுத்தலாம்'' என்றார் அவர்.■



**இடமிருந்து:** PDG *ரத்னேஷ் காஷியப்,* DG *பல்வந்த் சிங் கிரானா,* PRID *கமல் சங்வி,* PDGs *அஜய் கலா, அஷோக் மங்கல் மற்றும்* RID 3056 DGE *நிர்மல் குனாவத்.*



சந்தியா ராவ்


# ஒரு திரைப்படம், புத்தகம், எழுத்தாளர்

பொன்னியின் செல்வன் திரைப்படமாக்க படுவதற்கு முன், ஐந்து பாகங்களாக புத்தகமாகவும், புத்தகமாக வருவதற்கு முன், கல்கி என்ற தமிழ் இதழில், 29 அக்டோபர் 1950 தொடங்கி, 16 மே 1954 வரை, தொடராகவும் வெளிவந்தது. கல்கியால் துவங்கப்பட்ட இதழ் கல்கி. தமிழ் மொழியின் மீது நாட்டம் கொண்ட சுதந்திரப் போராட்ட வீரர், அற்புதமான கலைநயத்தின் எழுத்தாளரும், ஆசிரியருமான R கிருஷ்ணமூர்த்தியின் புனைப் பெயர் தான் கல்கி. பல்வேறு சமயங்களில் அகஸ்தியர், தமிழ் தேனி, ராகி மற்றும் கர்நாடகம் போன்ற பல்வேறு புனைப் பெயர்களில் அவர் எழுதியுள்ளார். ஆனால் ஒட்டிக் கொண்ட ஒன்று கல்கி மட்டும் தான். அவர் ஏன் கல்கியைத் தேர்ந்தெடுத்தார் என்பதற்கு, பல கோட்பாடுகள் உள்ளன ஆனால் உறுதியான பதில்கள் எதுவும் இல்லை.

ஆனால் நாம் அதற்குள் செல்வதற்கு முன், நான் பகிர்ந்து கொள்ள விரும்பும் ஒரு சிறிய பகுதி உள்ளது. அடிக்கடி நடப்பது போல், இந்த முறையும், இந்தப் கட்டுரையின் தலைப்புடன் இணைக்கப்பட்ட ஒரு பரிசை ‘பிரபஞ்சம்’ என் மடியில் வீசியது. அது இரண்டு தொகுதிகள் கொண்ட புத்தகம் – கல்கி கிருஷ்ணமூர்த்தி, அவரது வாழ்க்கை மற்றும் காலங்கள் என்ற தலைப்பில் சுந்தா, M R M சுந்தரம் ஆகியோரால் எழுதப்பட்டு கல்கியின் பேத்தி கௌரி ராம்நாராயணனால் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டது! கல்கி வாழ்க்கை வரலாற்றில் இருந்து நேர்த்தியாக தயாரிக்கப்பட்ட இந்த வரப்பிரசாதத்தின் முதல் பக்கங்களில் ‘கல்கி’ மர்மத்திற்கான சில தடயங்கள் உள்ளன.

தமிழ் இதழான ஆனந்த விகடன் மற்றும் ஜெமினி ஸ்டுடியோவின் நிறுவனர் S S வாசனின் கூற்றுப்படி, கல்கி இந்த புனைப்பெயரை முதன்முதலில் 1928ல் அவரின் இதழுக்கான கட்டுரையில் பயன்படுத்தினார். அதிகமாக எழுதுவதே நல்ல எழுதுதலாக பார்க்கப்பட்ட அந்த காலக் கட்டத்தில்–சில சமயங்களில் தற்போதும் நிலவுகிறது– வாசன் அந்தக் கட்டுரையைப் பற்றி 1954ல் எழுதுகையில் கல்கி ‘ஒரு குழந்தை கூட புரிந்துகொள்ளும் பாணியில் எழுதுபவர்’ என்று எழுதிருந்தார். ஆழ்ந்த சிந்தனை மற்றும் அளவற்ற சிரிப்பில் இருந்து எழுந்தது அந்த கட்டுரை. அதன்பிறகு, கல்கியின் பேனாவில் இருந்த மை உலரவே இல்லை, 13 ஆண்டுகளுக்குப் பிறகு, கல்கி என்ற தனது பத்திரிகையை அவர் நிறுவினார்.

55 வருடங்கள் என்ற குறுகிய ஆயுளில் கல்கி நிறைய எழுதியுள்ளார். அவர் ஒரு செழிப்பான மற்றும் பரவலாக வாசிக்கப் பட்ட எழுத்தாளர் என்பதைத் தவிர, அவர் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்றவர், பழங்கால பழக்கவழக்கங்கள் மற்றும் நடை முறைகளை எதிர்த்தவர், மேலும் தமிழ் மொழிக்காக பாடுபட்டவர். அவர் கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள் எழுதினார்; அவரது நாவலான அலை ஓசை, சுதந்திரப் போராட்டத்தை பின்னணியாகக் கொண்டது, 1957ல் சாகித்ய அகாடமி விருதை வென்றது. அவரது வரலாற்றுக் கதைகளே மிகவும் பிரபலமானவை: பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம் மற்றும் பொன்னியின் செல்வன். இவை அனைத்தும் முதலில் பத்திரிகை தொடர்களாகவும் பின்னர் புத்தகங்களாகவும் வெளியிடப் பட்டன. பொன்னியின் செல்வன் ஐந்து பாகங்களாக வருகிறது. மேக்மில்லனில் C V கார்த்திக் நாராயணன் மொழிபெயர்த்த பதிப்பில், தி ஃபர்ஸ்ட் ஃப்ளட்ஸ், தி சைக்ளோன், தி கில்லர் ஸ்வார்ட், தி கிரவுன் மற்றும் தி பினாக்கிள் ஆஃப் சக்ரீபைஸ் என அவை தொகுக்கப்பட்டுள்ளது.




பல ஆங்கில பதிப்புகள் உள்ளன, தற்போது நான் பவித்ரா சீனிவாசன் மொழிபெயர்த்த Fresh Floodsன் ஆடியோவைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். துரதிர்ஷ்டவசமாக 2021ம் ஆண்டு ஜூன் மாதம் அவரை நாம் இழந்துவிட்டோம். அமித் பார்கவின் இந்த சொற்பொழிவு ஈர்க்கக்கூடியதாக இருந்தது. கல்கியின் தெளிவான விளக்கங்கள், கூர்மையான உரையாடல்கள் மற்றும் நகைச் சுவையின் மினுமினுப்பை தக்க வைத்துக்கொண்டு, ஒரு கதாசிரியராக அவரது திறமையை மொழிபெயர்ப்பில் பிரதிபலிக்கிறது.



'கல்கி' கிருஷ்ணமூர்த்தி

நான் 'அத்தியாயம் 31: திருடர்கள்! திருடர்கள்!' கேட்டுகொண்டே புத்தகத்தில் உள்ள உரையை படித்தேன். புத்தகத்தின் பதிப்பு கார்த்திக் நாராயணனின் மொழியாக்கம் மற்றும் ஆடியோ பவித்ரா சீனிவாசனுடையது என்பதை நினைவில் கொள்ளுங்கள். புத்தகத்தை விட ஆடியோ மிகவும் விரிவானது என்று நான் கண்டுபிடித்தேன்.

ஆகஸ்ட் 2018ல் தி நியூஸ் மினிட்டில் அஞ்சனா சேகருடன் ஒரு நேர்காணலில், பவித்ரா சீனிவாசன் தனது 12 வயதில் இந்த 'கல்ட் சீரிஸ்' தனது தாயால் அறிமுகப்படுத்தப் பட்டதையும், சின்ன பழுவேட்டரையர், இரட்டைக்குடை ராஜாளியார் போன்ற பெயர்களில் சிறிது தடுமாறினாலும் உடனடியாக கவர்ந்ததைப் பற்றி பேசினார்.'ஒரு மொழிபெயர்ப்பாளர் தங்களுடைய ஒரு பகுதியை அந்த புத்தகத்திற்கு கொடுக்கிறார்,' என்று அவர் சுட்டிக் காட்டுகிறார். "அசல் என்னவென்று மொழிபெயர்ப்பாளருக்கு மட்டுமே தெரியும். எனவே, வாசகர்கள் மிகவும் துல்லியமான, செழுமையான அனுபவத்தை தருவார் என்று மொழிபெயர்ப் பாளர்களை நம்பு கிறார்கள். "இந்த மொழிபெயர்ப்பு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது, எனக்கு அசலை படிக்க விருப்ப மில்லை" என்று ஒரு வாசகர் சொல்வதைக் கேட்பதே சிறந்த பாராட்டு என்று அவர் கூறியுள்ளார்.

புத்தகக் கழகத்தைச் சேர்ந்த என் தோழி அசலைப் படிக்கவில்லை, அவள் வேறு ஒன்று செய்தார். 18 வயதில் திருமணமான அவரிடம், 14 வயது ஆன அவரின் கணவரின் தங்கை கேட்ட முதல் விஷயங்களில் ஒன்று, 'பொன்னியின் செல்வனைப் படித்தீர்களா? அது அந்த நேரத்தில் கல்கியில் தொடராக இருந்தது-அது மிகவும் பிரபலமாக இருந்ததால் அது பல இதழ்களில் தொடர்களாக வந்துள்ளது. அதன் சந்தாதாரர்களின் வரிசையில் புதிய வாசகர்கள் சேர்க்கப்பட்டு கொண்டே இருந்தனர். என் தோழி, தமிழராக இருந்தாலும், பெங்களூரில் வளர்ந்தவர், அதனால் அவரால் தமிழ் படிக்கவும் எழுதவும் தெரியாது. எனவே, 18 வயது பெண்ணிடம் சத்தமாகப் படித்துக் காட்டுவதை அந்த 14 வயது சிறுமி தன் கடமையை எடுத்துக் கொண்டாள்! அது தான் 'பொன்னியின் செல்வன் அவருக்கு தெரிந்த தருணம். அதன் சமீபத்திய பகுதியை படித்து அறிந்து கொள்வதற்காக முதலில் பத்திரிகையைப் படிக்க குடும்ப உறுப்பினர்கள் எப்படி ஒருவருக் கொருவர் போட்டியிடுவார்கள் என்பது கல்கியின் புகழின் உதாரணம்.

கல்கியின் எழுத்தின் சிறப்பு என்ன, ஏன் அவர் இன்று வரை நினைவுகூரப்படுகிறார் அல்லது படிக்கப் படுகிறார், ஏன் புதிய மொழி பெயர்ப்புகள் தொடர்ந்து வெளி யிடப்படுகின்றன? கார்த்திக் நாராயணனின் பதிப்பில் ஹைதராபாத்தில் உள்ள CIEFLஐச் சேர்ந்த T ஸ்ரீராமனின் அறிமுகம் உள்ளது, அது கல்கியை போற்றும் பாணியில் இல்லாமல், அவரின் புறநிலை பகுப்பாய்வு மற்றும் அவரது வரலாற்று புனைகதைக்கான சூழலை வழங்குகிறது. சுவாரஸ்யமாக, கல்கி பற்றிய சுந்தாவின் படைப்புகளை அவர் குறிப்பிடுகிறார். கல்கியின் வரலாற்றுப் புனைகதைகள் ஏன் துடிப்புடன் இருக்கிறது என்ற கேள்விக்கு, பல மொழிகளில் சிவாஜி மற்றும் ராஜபுத்திர மன்னர்கள் எவ்வாறு முகலாய ஆட்சியை வெற்றிகரமாக எதிர்த்தார்கள் என்பதே வரலாற்று நாவல்களின் மிகவும் பிரபலமான கருப்பொருளாக இருந்தது. ஆனால் உண்மையான வீரக் கதைகளுக்கு தமிழ்நாட்டை விட்டு வெளியே பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை கல்கி உணர்ந்தார் என பேராசிரியர் மீனாட்சி முகர்ஜியை மேற்கோள் காட்டி அவர் தெளிவுப்படுத்துகிறார். அவர் தொடர்ந்து கூறுகையில்: 'ஒரு எழுத்தாளராக கல்கியின் சாதனை, தமிழ் உரைநடை பாணியை நவீன உலகின்-இலக்கியம், அரசியல், சரித்திரம்-உரையாடலுக்கு மிகவும் பொருத்தமான ஒரு ஊடகமாக மாற்றியது. உண்மையில், கல்கி தனது அன்றைய தமிழை அதன் ஆதரவாளர்களிடமிருந்தும் அதை எதிர்ப்பவர்களிடமிருந்தும் மீட்க வேண்டியிருந்தது. தமிழின் எழுத்தாளர்களில் இரண்டு வகையினர் இருந்தனர்: அதிக சமஸ்கிருத மயமாக்கப்பட்ட அதனால் புரிந்துகொள்ள முடியாத மதம் சார்ந்த எழுத்தில் ஈடுபட்டவர்கள். இரண்டாவதாக, சமஸ்கிருதத்தின் எந்த தடயத்தையும் விடாமல் தவிர்த்து, ஆனால் அந்த செயலால் அவர்களின் வாசகர்கள் மற்றும் கேட்போர் மீது செயற்கையான பாணியை திணிப்பவர்கள்(இவர்கள் தங்கள் தமிழை "செந்தமிழ்"-உயர் தமிழ்-என வர்ணித்தார்கள், ஆனால் அதை "கொடுந்தமிழ்" என்று கல்கி வர்ணித்தார்). கல்கி இந்த உச்சநிலை களிலிருந்து விலகியே இருந்தார்.




தமிழ் தெரிந்த எவரும் இந்த முரண்பாட்டைப் புரிந்துகொள்வார்கள் மற்றும் கல்கியின் புத்துணர்ச்சி யூட்டும் அணுகுமுறையைப் பாராட்டு வார்கள், அது சுமார் 80–90 ஆண்டு களுக்குப் பிறகு இன்றும் பொருந்து கிறது. இதுவே அவரின் நிலைத்து நிற்கும் மரபு.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# RC சென்னை லெஜெண்ட்ஸுக்கு மறக்க முடியாத பட்டய இரவு

ரோட்டரி செய்திக் குழு

RID 3232க்கு உட்பட்ட சென்னை லெஜெண்ட்ஸ் ரோட்டரி சங்கத்தின் பட்டய இரவு தின கொண்டாட்டம் சமீபத்தில் RIDE அனிருத்த ராய் சௌதுரி தலைமையில் நடை பெற்றது. அவர் பேசுகையில், சங்கத்தின் அனைத்து உறுப்பினர் களையும் ஏதாவது ஒரு பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

DGN N S சரவணன், சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவும் நடைமுறை ஆலோசனைகளைக் கூறினார்.

கடந்த 2004ம் ஆண்டு இந்திய கடலோரப் பகுதிகளை சுனாமி பேரலை தாக்கியபோதும், அதன் பின்னர் பல்வேறு சேவைத் திட்டங்களுக்கும் உதவியதற்காக RID 2110க்கு உட்பட்ட மால்டா ரோட்டரி சங்க உறுப்பினரான ரோட்டேரியன் எட்வர்ட் பாராட்டப் பட்டு கௌரவிக்கப்பட்டார். சமூக சேவை திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தும் ரோட்டரி சங்கத்துக்கு ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கும் நோக்கில் அவரது பெயரில் விருது ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

இந்த சங்கம் 2019ம் ஆண்டு PRIP சேகர் மேத்தாவிடமிருந்து சாசனத்தை பெற்றது. ஆனால், கோவிட் தொற்று மற்றும் அதைத் தொடர்ந்து அமல்படுத்தப்பட்ட பொது முடக்கம் காரணமாக அதன் முன்னேற்றம், செயல் பாடுகள் தடைபட்டிருந்தன என்றார் PDG G ஒளிவண்ணன். கடந்த மூன்று ஆண்டுகளாக சங்கத்தின் உறுப்பினர்களை ஒற்றுமையுடன் வழிநடத்திச் சென்ற சங்கத்தின் நிறுவனத் தலைவர் இளஞ்செழியனுக்கு நன்றி. இனி இந்த சங்கம் துடிப்புடன் செயல்பட்டு புதிய உயரங்களைத் தொடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

25 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சங்கம் இதுவரை ரூ.1 கோடி மதிப்பிலான திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. இலங்கைக்கு மனிதாபிமான அடிப்படையில் ரூ.70 லட்சம் மதிப்பில் உணவு, மருந்து மற்றும் நிவாரணப் பொருள்கள் அனுப்பியதும் இதில் அடங்கும். சங்கத்தின் தலைவர் ராஜசேகர் சுப்பையா தலைமையில் நகரில் உள்ள இரண்டு கல்லூரி வளாகங்களில் பசுமைத் திட்டத்தின் கீழ் 175 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. ■




*RIDE அனிருதா ராய்சௌத்ரி (2வது வரிசையில், நடுவில் அமர்ந்துள்ளார்.) உடன் (இடமிருந்து) DG J ஸ்ரீதர், DGE N S சரவணன், சங்கத்தலைவர் ராஜசேகர் சுப்பையா, PDG G ஒளிவன்னன், பட்டயத்தலைவர் இளஞ்செழியன், மற்றும் RC மால்டா உறுப்பினர் எட்வர்ட் ஆகியோரும் உள்ளனர்.*




New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

Rotary

**FIND A CLUB**

ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


## District Wise TRF Contributions as on October 2022

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 11,520 | 127 | 0 | 625 | 12,271 |
| 2982 | 6,805 | 1,494 | 2,001 | 32,116 | 42,416 |
| 3000 | 16,477 | 2,680 | 0 | 0 | 19,157 |
| 3011 | 19,969 | 4,358 | 127 | 155,057 | 179,512 |
| 3012 | 7,970 | 752 | 65,235 | 78,188 | 152,144 |
| 3020 | 32,657 | 3,062 | 30,000 | 0 | 65,719 |
| 3030 | 11,661 | 43 | 0 | 1,275 | 12,979 |
| 3040 | 7,135 | 1,028 | 0 | 15,471 | 23,635 |
| 3053 | 19,606 | 136 | 0 | 0 | 19,742 |
| 3054 | 4,221 | 0 | 0 | 0 | 4,221 |
| 3060 | 21,713 | 200 | 0 | 61,476 | 83,389 |
| 3070 | 29,473 | 811 | 23,581 | 8,038 | 61,904 |
| 3080 | 5,690 | 1,787 | 0 | 37,163 | 44,641 |
| 3090 | 4,054 | 0 | 4,447 | 0 | 8,501 |
| 3100 | 41,770 | 400 | 17,762 | 0 | 59,932 |
| 3110 | 11,129 | 354 | 25,317 | 469,185 | 505,985 |
| 3120 | 5,974 | 0 | 0 | 0 | 5,974 |
| 3131 | 119,081 | 4,129 | 29,035 | 115,645 | 267,889 |
| 3132 | 9,508 | 1,346 | 25,000 | 500 | 36,354 |
| 3141 | 348,977 | 28,281 | 86,500 | 371,582 | 835,341 |
| 3142 | 113,439 | 2,893 | 1,098 | 25 | 117,455 |
| 3150 | 20,301 | 1,171 | 13,000 | 313 | 34,785 |
| 3160 | 1,310 | 2,338 | 0 | 0 | 3,648 |
| 3170 | 36,054 | 16,287 | 1,006 | 275 | 53,622 |
| 3181 | 34,696 | 56 | 25 | 912 | 35,690 |
| 3182 | 20,202 | 253 | 0 | 0 | 20,455 |
| 3190 | 15,977 | 4,059 | 0 | 985 | 21,021 |
| 3201 | 59,865 | 11,161 | 0 | 258,145 | 329,171 |
| 3203 | 1,427 | 7,732 | 0 | 26,479 | 35,638 |
| 3204 | 3,825 | 250 | 0 | 152 | 4,227 |
| 3211 | 56,068 | 0 | 0 | 1,049 | 57,117 |
| 3212 | 40,799 | 12,553 | 0 | 31,646 | 84,998 |
| 3231 | 44,302 | 19,845 | 32,025 | 569 | 96,741 |
| 3232 | 31,862 | 11,593 | 18,038 | 50,122 | 111,616 |
| 3240 | 19,754 | 11,200 | 1,000 | 3,622 | 35,576 |
| 3250 | 5,666 | 175 | 0 | 10,500 | 16,341 |
| 3261 | 11,008 | 13 | 0 | 5,277 | 16,298 |
| 3262 | 2,920 | 413 | 0 | 27,471 | 30,803 |
| 3291 | 21,209 | 248 | 15,033 | 8,190 | 44,679 |
| **India Total** | **1,276,072** | **153,231** | **390,230** | **1,772,053** | **3,591,586** |
| 3220 **Sri Lanka** | 16,111 | 2,321 | 0 | 0 | 18,432 |
| 3271 **Pakistan** | 25 | 11,125 | 0 | 250 | 11,400 |
| 3272 **Pakistan** | 305 | 61 | 0 | 5,000 | 5,366 |
| 3281 **Bangladesh** | 40,245 | 1,146 | 20,125 | 27,978 | 89,494 |
| 3282 **Bangladesh** | 25,886 | 2,389 | 1,000 | 2,906 | 32,182 |
| 3292 **Nepal** | 25,253 | 13,643 | 35,000 | 13,730 | 87,627 |
| **South Asia Total** | **1,383,897** | **183,917** | **446,355** | **1,821,918** | **3,836,086** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

# ரோட்டரி கல்பெட்டா வழங்கிய டயாலிசிஸ் இயந்திரங்கள்

ரோட்டரி செய்திக்குழு



**இடமிருந்து:** *திட்டத்தலைவர் ஜோஸ் மாத்யூ, DG பிரமோத் நயனார், IPDG ராஜேஷ் சுபாஷ், M S P மனோஜ் , DRFC பத்மநாபன் மற்றும் துணை ஆளுநர் ஷைஜீ.*

கேரளத்தில் உள்ள வயநாடு மலைகளில் உள்ள சிறு நகரம் கல்பெட்டா. இங்கு பெரும் எண்ணிக்கையிலான பழங்குடியின மக்கள் வசிக்கிறார்கள். இந்த நகரத்தில் உள்ள சாந்தி வலி மற்றும் வலிக் குறைப்புப் பராமரிப்பு வளாகம் ஏழு டயாலிசிஸ் இயந்திரங்களுடன் ஏழைகளுக்கு இலவச டயாலிசிஸ் சேவையை வழங்குகிறது. அதிக மக்கள் தொகைக்கு சேவை புரிவதற்கு இந்த வளாகத்துக்குக் கூடுதல் டயாலிசிஸ் இயந்திரங்கள் தேவைப்பட்டன. அதன் நிர்வாகிகள் பல சேவைத் திட்டங்களுக்குத் தங்களுடன் இணைந்து பணிபுரிந்துள்ள RID 3204ன் RC கல்பெட்டா சங்கத்திடம் பேசினார்கள்.

இந்தச் சங்கம் பிரேசிலைச் சேர்ந்த ரிபெராவ் பிரெடோ ஜார்டிம் ரோட்டரி சங்கத்துடன் சேர்ந்து ரூ.20.16 லட்சம் பன்னாட்டு நல்கையைப் பெற்றது, 'ஹேப்பி பீன்' என்ற திட்டத்தின் கீழ் மூன்று டயாலிசிஸ் இயந்திரங்களை வழங்கியது. இத்துடன், டயாலிசிஸ் செயல்முறை இதமாகவும் தடையின்றியும் நடைபெறுவதை உறுதிசெய்வதற்கு மின்சார வழங்கலுக்கு மாற்று வசதி செய்கிற, ரூ.2.93 லட்சம் மதிப்புள்ள 30 KVA UPS அமைப்புகளையும் இந்தச் சங்கம் வழங்கியது. டயாலிசிஸ் நோயாளிகளுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்கும் நீர் தூய்மைப்படுத்தி ஒன்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் இரண்டும் இந்த மையத்துக்குப் பரிசளிக்கப்பட்டன.

சென்ற ஆண்டு, Dr ராஜேஷ் சுபாஷ் ஆளுநராக இருந்த போது இந்தத் திட்டத்துக்கான பணிகள் தொடங்கினார், சமீபத்தில் இப்போதைய DG பிரமோத் நயனார் இதைத் தொடங்கி வைத்தார். DRFC Dr பத்மநாபன், திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜோஸ் மாத்யூ ஆகியோரும் நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

'ஹேப்பி பீன்' என்ற தலைப்பை விளக்கிய Dr சுபாஷ், 'சிறுநீரகம் பீன் வடிவில் உள்ள உறுப்பு, டயாலிசிஸ் செய்யப்படும் போது அது சிறுநீரகங்களின் பளுவைக் குறைக்கிறது, அவற்றை மகிழ்ச்சி யாக்குகிறது, அதனால், இது 'ஹேப்பி பீன்' திட்டம்' என்றார்.

கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ள 3 டயாலிசிஸ் இயந்திரங்கள் நாள்தோறும் 6 கூடுதல் நோயாளிகளுக்கு முற்றிலும் இலவசமாக டயாலிசிஸ் வழங்க உதவும் என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார். "ஒவ்வொரு டயாலிசிஸுக்கும் ரூ.1,000 செலவாகிறது என்று வைத்துக் கொண்டால், ஒவ்வொரு மாதமும், நோயாளிகளுக்கு ரூ.1.5 லட்சம் மதிப்புள்ள சேவையை இந்த மையம் வழங்கும்" என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.■

# பள்ளிக்கு மிதிவண்டிப் பயணம்

ரோட்டரி செய்திக் குழு

அரபிந்தோ மருந்தியல் அறக் கட்டளை, RCகள் அமீர்பெட், ஹைதராபாத் ஆர்மர், ஹைதராபாத் டெக்கானுடன் இணைந்து, ஹைதராபாதிலிருந்து 165 கிமீ தொலைவில் உள்ள நாராயண்பெட் என்ற நகரத்தில் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மிதி வண்டிகளை வழங்கியது RC லேக் டிஸ்ட்ரிக்ட் மோய்னாபாத், RID 3150. இந்தத் திட்டத்தை சங்கத் தலைவர் பதஞ்சலி ராவ், திட்ட ஒருங்கிணைப்பாளர் உதய் பிலானி வழிநடத்தினார்கள். இந்தப் பகுதியில் ஒரு மருத்துவ முகாம், ஒரு இரத்த தான முகாமும் நடத்தப்பட்டது.

முன்னாள் தலைவர், அரபிந்தோ மருந்தியல் நிறுவனத் தலைவர் ரகுநாதன் கண்ணன் பேசு கையில், CSR முன்னெடுப்பின் கீழ், 76 அரசுப் பள்ளிகளில் படிக்கிற, நலிந்த பின்னணியைச் சேர்ந்த மாணவிகளுக்கு ரூ.39.2 லட்சம் மதிப்புள்ள 800 மிதிவண்டிகள் வழங்கப்பட்டன என்றார். மருத்துவ முகாமில் பெண்கள், ஆண் களுக்குப் புற்றுநோய்ப் பரிசோதனை, குழந்தைகளுக்கு ENT பரிசோதனை ஆகியவை செய்யப்பட்டன. மல்லா ரெட்டி மருத்துவமனை மற்றும் MAA ENT மருத்துவமனை ஆகியோர் கருவிகள், முகாமைக் கவனிக்க ஊழியர்களை வழங்கி ஆதரித்தனர். ■



# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**2021–22 அறக்கட்டளை பதாகைகள்:** 2021–22 ரோட்டரி ஆண்டுக்கான அறக்கட்டளை பதாகைகள் மற்றும் ‘எண்ட் போலியோ நவ்’ சான்றிதழ்கள் தகுதியான சங்கங்களுக்கு விநியோகிக்க 2022–23 மாவட்ட ஆளுநர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**பால் ஹாரிஸ் சொசைட்டி (PHS):** ஆண்டு நிதி, போலியோ பிளஸ் நிதி அல்லது அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய மானியத்திற்கு ஒவ்வொரு ரோட்டரி ஆண்டும் $1,000 அல்லது அதற்கு மேற்பட்ட பங்களிப்பை TRFக்கு வழங்க இணங்குவதை தெரிவிக்கும் நபர்களை பால் ஹாரிஸ் சொசைட்டி அங்கீகரிக்கிறது. PHS பங்களிப்புகள் ரோட்டரி அறக்கட்டளையின் நீடித்த உறுப்பினர் (வருடாந்திர நிதி பங்களிப்புகள் மட்டும்), பால் ஹாரிஸ் ஃபெலோ, மல்டிபிள் பால் ஹாரிஸ் ஃபெலோ மற்றும் முக்கிய நன்கொடையாளர் அங்கீகாரம் மற்றும் சங்க அங்கீகார பதாகைகள் ஆகியவற்றிற்காக கணக்கிடப்படுகிறது. இந்த அங்கீகாரமானது PHS ஒருங்கிணைப்பாளரால் வழங்கப்படும். மேலும் தகவலுக்கு, *https://www.rotary.org/en/about-rotary/history/paul-harris-society*ஐப் பார்வையிடவும் அல்லது PHS brochure படிக்கவும்.

**உங்கள் சங்கம்/மாவட்டத்திற்குள் PHSஐ விரிவாக்கு வதற்கான வழிகள்**

- அறக்கட்டளை பங்களிப்புகள் எவ்வாறு உலகை மாற்றப்படுகின்றன என்பதைக் காண்பியுங்கள்
- சங்கம் மற்றும் மாவட்ட விளக்கக்காட்சிகள் மூலம் சொசைட்டியின் முக்கியத்துவத்தை விளக்கவும்.
- வருங்கால உறுப்பினர்களை அடையாளம் காண அறக்கட்டளை அறிக்கைகளைப் பயன்படுத்தவும் மற்றும் நேருக்கு நேரான சந்திப்புகளில் அவர்களை சேர அழைக்கவும்
- PHS உறுப்பினர்களுக்கான அங்கீகார நிகழ்வுகளைத் திட்டமிடுங்கள்

**PHF அங்கீகார புள்ளிகளை மாற்றுதல்:** அறக்கட்டளை அங்கீகார புள்ளிகளை மாற்றுவதற்கான உங்கள் கோரிக்கை தெற்காசிய அலுவலகத்தில் பெறப்பட்ட வரிசையில் செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட மற்றும் சங்க தலைவர்கள் அந்தந்த சங்க அங்கீகார சுருக்க அறிக்கையை மதிப்பாய்வு செய்து, PHF அங்கீகாரத்திற்காக தகுதியான நன்கொடையாளர்களின் தகவல்களை நன்கொடையாளர் சேவைகள் குழுவுடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு *Manju.Joshi@rotary.org (011-42250148)* மஞ்சு ஜோஷியைத் தொடர்பு கொள்ளவும்.

**PHF அங்கீகாரம் பரிமாற்றக் கோரிக்கைப் படிவம் இங்கு கிடைக்கும்:** *https://my.rotary.org/en/document/paul-harris-fellow-recognition-transfer-request-form*

**அறக்கட்டளை அங்கீகார புள்ளிகள் தாள் இங்கு கிடைக்கும்:** *https://my.rotary.org/en/document/foundation-recognition-points-fact-sheet* ■

# சுற்றுச்சூழலுக்கு உகந்த விழாக்கள்

ப்ரீதி மேஹரா

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டை நினைத்துப் பாருங்கள், நீங்கள் ஒன்றுகூடுதல், கொண்டாட்டங்கள் மற்றும் விருந்துகளைப் பற்றி யோசிப்பீர்கள். இவை பாரம்பரியமாக பெரிய அளவிலான கழிவுகளை உருவாக்கும் மற்றும் நமது கார்பன் தடயத்தை கணிசமாக அதிகரிக்கும் நிகழ்வுகள். அதனால் கிறிஸ்துமஸ் நேரம் வந்தால் இவ்வகையான குடும்பக் கூட்டங்களை நடத்துவதை நிறுத்தவேண்டுமா? இல்லை, நீங்கள் அதுபோன்ற கடுமையாக முடிவுகள் எதையும் எடுக்க வேண்டியதில்லை. அதிர்ஷ்டவசமாக குறைவான கழிவுகளை உருவாக்குவதற்கும் பொறுப்புடன் அகற்றுவதற்கும் பல வழிகள் உள்ளன. சரியான உணவு மற்றும் பாத்திரங்களை தேர்ந்தெடுப்பதன் மூலம் ஒரு வாழ்க்கை முறையை அறிவித்து, பசுமையான மாற்றங்கள் வேடிக்கையாக இருக்கும் என்று நம் விருந்தினர்களுக்கு ஒரு செய்தியை அனுப்பினால், கிருஸ்துமஸ் மற்றும் புத்தாண்டுக்கு பசுமையை சேர்க்க நாம் நம்மால் முடிந்த அனைத்தையும் செய்திருப்போம்.

முதலாவதாக அழைப்பிதழ் களுடன் தொடங்குவோம். அவற்றை எளிமையாகவும் மற்றும் டிஜிட்டல் மயமாக்கவும். நீங்கள் ஒரு தனித்துவமான அழைப்பை விரும்புபவராக இருந்தால், அதை நீங்களே வடிவமைக்கலாம் அல்லது ஆப்ஸ் மற்றும் இணையதளத்தைப் பயன்படுத்தியும் வடிவமைக்கலாம். அதை மிகவும் சிக்கலானதாக வடிவமைக்காதீர்கள்! ஏனெனில், உங்கள் டிஜிட்டல் கார்பன் தடமும் முக்கியமானது.

அடுத்த அலங்காரத்திற்கு செல்வோம். கிறிஸ்மஸ் என்று வரும்போது பெரும்பாலான வீடுகளில் முந்தைய ஆண்டுகளில் பயன்படுத்திய மரங்கள் மற்றும் அலங்கார பொருட்களை கவனமாக சேமித்து வைத்து பண்டிகைக் காலங்களில் வெளியே கொண்டு வருவார்கள். ஆனால் மறுசுழற்சியை நீங்கள் விரும்பவில்லை என்றால், நீங்கள் எப்பொழுதும் பூஜ்ஜிய கழிவுகளில் இருந்து இவற்றை உருவாக்கலாம்– அட்டை, மறுபயன்பாடு அலங்கார காகிதம், பழைய வாழ்த்து அட்டைகள், கடந்த ஆண்டு காலண்டர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். உண்மையில், இதுபோன்ற செயலில் குழந்தைகளை ஈடுபடுத்துவது திருவிழாவை இன்னும் அர்த்தமுள்ளதாக்குகிறது. அவர்கள் நட்சத்திரங்கள், மரங்கள், நேட்டிவிட்டி செட் போன்றவற்றை அட்டையிலிருந்து வெட்டி எடுத்து பின்னர் துடிப்பான நிறங்களில் வர்ணம் பூசலாம். நீங்கள் திட்டமிடுவது புத்தாண்டு விருந்து என்றால், புதிய இலைகள், பூக்கள், ஜரிகைகள் மற்றும் காகித நட்சத்திரங்கள் ஆகியவற்றை ஒன்றாகக் கட்டினால் அது நன்றாக அமையும்.

இப்போது பாத்திரங்களை பார்ப்போம். இங்கேயும், உங்களிடம் இருப்பதைப் பயன்படுத்துங்கள். உங்கள் துணி நாப்கின்கள், பீங்கான் தட்டுகள், கண்ணாடி கிண்ணங்கள் மற்றும் கட்லரிகளை வெளியே எடுக்கவும். ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பாத்திரங்கள், காகிதத் தட்டுகளை வாங்குவதை விட, இவற்றைப் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு மிகவும் நன்மை. ஆம், நீங்கள் சிறிது நேரம் செலவழித்து அவற்றை கழுவ வேண்டியிருக்கும், ஆனால் நிலையான வாழ்க்கைக்கு மாறுவதற்கு இதுபோன்ற உறுதியான செயல்கள் தேவை. கழுவது சாத்தியமில்லை அல்லது ஒன்று கூடுதல் வெளியில் இருந்தால், மக்கக்கூடிய இலைப் பொருட்களை ஆர்டர் செய்வது நல்லது. இன்று மூங்கில், கரும்பு கூழ், காய்ந்த இலைகள் மற்றும் கழிவு காகிதம் ஆகியவற்றால் செய்யப்பட்ட இலைப்பொருள் பார்ட்டி பேக்குகள் ஆன்லைனில் கிடைக்கின்றன, அவை ஒரு கூகுள் தேடல் தொலைவில் பிரபலமான விற்பனை நிலையங்களில் உள்ளன. பழங்குடியினர் மற்றும் சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கூட இலைப் பொருட்களை உற்பத்தி செய்து கடைகளில் அல்லது ஆன்லைனில் விற்கின்றன.

நீங்கள் பரிமாறப் போகும் உணவும் பானமும் இதில் அடங்கும். உண்மையிலேயே பசுமையாக மாற, உங்கள் உணவை உள்ளூருடைய, எளிமையான, இயற்கையான, சுவையான மற்றும் முடிந்தவரை இயற்கைக்கு நெருக்கமாக வைத்திருங்கள். குறைந்த எண்ணிக்கை உணவுகளை அதிக அளவில் சமைக்கவும், குறிப்பாக குறைந்த கார்பன் தடம் கொண்ட உணவுகளை சமைக்கவும்.

மூலப்பொருள் எவ்வளவு அருகாமையான இடத்தில் இருந்து வாங்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு உங்கள் கார்பன் தடம் குறையும். உதாரணமாக, நீங்கள் வசிக்கும் நகரம் அல்லது மாநிலத்திற்குள் விளையும் காய்கறிகள், ஆயிரக்கணக்கான

மைல்கள் விமானப் பயணத்தைப் பார்த்து, குளிர்பதனக் கிடங்கில் அதிக ஆற்றலைச் செலவழித்த இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருளைக் காட்டிலும் குறைவான தூரம் பயணித் திருக்கும். எனவே, உள்நாட்டில் விளையும் பயிர்களை முழுமையாகப் பயன்படுத்துங்கள்.அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க, உங்கள் சுற்றுப்புற விற்பனையாளர்களிடமிருந்து முடிந்தவரை வாங்கவும்.

விருந்தினர்களிடம் வீட்டில் தயாரிக்கப்பட்ட பானங்களை பருக வைக்க முயற்சிக்கவும், ஆனால் நீங்கள் பானங்களை வாங்க வேண்டும் என்றால், பிளாஸ்டிக் பாட்டில்களை விட எளிதாக மறு சுழற்சி செய்யக்கூடிய அலுமினிய கேன்கள் மற்றும் கண்ணாடி பாட்டில்களை வாங்கவும். மக்கக்கூடிய அல்லது உண்ணக்கூடிய கோப்பைகள் மற்றும் ஸ்ட்ராக்கள் இப்போது கிடைக்கின்றன, மக்கும் தன்மையற்ற பிளாஸ்டிக் பொருட்களுக்குப் பதிலாக இவற்றில் செலவிடலாமே. இந்த தாவர அடிப்படையிலான, உணவு-தரப் பொருட்கள் மக்கும் தன்மை கொண்டவை, மேலும் பல ஆண்டுகளாக நிலப்பரப்புகளில் தேங்கி இருக்காது.

சமீபத்தில், ஒரு மதிய உணவின் போது, ஒரு நண்பர் இளநீரை ஓட்டிலிருந்து நேராக பரிமாறினார், இது என்னை இயற்கையுடன் நெருக்கமாக உணரவைத்தது. அவர் சாலட் தட்டைப் தாங்க ஒரு தோண்டப்பட்ட அன்னாசிப்பழத்தை பயன் படுத்தினார். இன்னொரு நண்பர் இனிப்பு செய்ய தர்பூசணிகளை தோண்டி, அதிக பழங்களைச் கூழில் சேர்த்து புதிய பழ கலவையை உருவாக்குவதையும் நான் பார்த்தேன். இந்த புதுமையான படைப்புகள் மூலம், அவர்கள் பூமிக்கு நெருக்கமாக இருப்பதையும், அதன் இயற்கை வளங்களை ருசிப்பதையும் உறுதியாக அறிவிக்கின்றனர்.

பார்ட்டிக்குப் பிறகு பாத்திரங்களைத் கழுவுவதும், துடைப்பதும் ஒரு சுவாரசியமற்ற வேலையாகப் பார்த்தால் வேதனையாகி விடும். ஆனால் நீங்கள் அதை சுற்றுச்சூழலுக்கு ஒரு நன்மை என்று நினைத்து உங்கள் முயற்சியில் எடுத்துக் கொண்டால், அது பெரிதாக தெரியாது. அந்த முயற்சியில் குடும்பத்தினரை ஈடுபடுத்துங்கள், எல்லாவற்றையும் உங்கள் தலையில் எடுத்துக் கொள்ளா தீர்கள். வேலை முடிந்ததும், குப்பைகளை முறையாகப் பிரித்து, சரியான முறையில் அகற்றினால், பொறுப்பற்ற விருந்து நடத்தியது போன்ற தொந்தரவும் குற்ற உணர்வும் இல்லாமல் நீங்கள் உலகை எதிர்கொள்ளலாம்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.



# வலிக்கும் தோள்களுக்கு சிகிச்சை

பரத் — ஷலன் சவூர்

கடுமையான வலி தோள்பட்டை மூட்டில் தாக்கினால், உங்கள் உலகம் முழுவதும் இருண்டுவிடும். நம் தோள்கள் நமது சிறந்த கூட்டாளிகள். அது நமது பைகளை சுமந்துக் கொள்கிறது, துன்பத்தில் இருக்கும் நண்பர்கள் தலையை தன் மேல் சாய்த்துக் கொள்கிறது, உயரமான அலமாரியில் உள்ள பிஸ்கட் பெட்டியை எடுக்க உதவுகிறது, நீண்ட தூரம் பந்து அல்லது ஈட்டியை எறிய நம் கையை பின்னால் இழுக்கும்போது அவை விளையாட்டாக சக்தி சேர்க்கின்றன.

ஒரு மாதத்தில், தோள்பட்டைகளில் கடுமையான வலியைப் பற்றி புகார் செய்யும் மூன்று நபர்களை நான் சந்தித்த போது, அவர்களின் வலியை உணர்ந்தேன், அவர்கள் கைகளை அதிகம் பயன்படுத்தும் நபர்கள் என்பதால் இன்னும் அதிகமாக உணர்ந்தேன். அவர்கள் தூசி தட்டுகிறார்கள், வண்டி ஒட்டு கிறார்கள், தங்கள் மாதாந்திர மளிகைப் பொருட்களை வீட்டிற்கு எடுத்துச்செல்கிறார்கள்.

அவர்களில் இருவர் நடைபாதையில் நடந்து செல்லும் போது விழுந்துள்ளனர், இது நான் கூறவிருக்கும் இந்த தோள்பட்டை நிலைக்கு வழிவகுத்திருக்கலாம். உண்மை என்னவென்றால், ஒவ்வொரு தோளையும் சுற்றிலும் எட்டு சிறிய திரவ பைகளால் நாம் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம். இன்னும் 89 பைகள் உள்ளன, ஆனால் நாம் இன்று தோள்பட்டை மீது மட்டுமே கவனம் செலுத்துவோம். இந்த பைகள் பர்சே என்று அழைக்கப்படுகின்றன. அவை உராய்வு இல்லாமல் நம் மூட்டுகள் சீராக செயல்பட உதவுகின்றன. அவை அமைதியாகவும் புகார் செய்யாதவைகளாகவும் இருக்கின்றன... ஒரு நாள், அவற்றில் ஒன்று திடீரென வீக்கமடைந்து, வலி மிகவும் கடுமையாக இருக்க, நீங்கள் அந்த தோள்பட்டையைத் தூக்கத்தில் திருப்பும்போது வேதனையில் விழிப்பீர்கள். எனவே, முதல் உதவிக்குறிப்பு இதுதான்: உங்கள் தோள்கள் வலிக்கும்போது, சுகமான தூக்க நிலையைக் கண்டுபிடித்து, பின்னர் நீங்கள் எளிதாக நகர முடியாதபடி தலையணைகள் மற்றும் மெத்தைகளால் உங்களைத் கட்டுபடுத்துங்கள். உங்கள் நிலையை மாற்ற முயற்சிக்கும் போது நீங்கள் எழுந்தாலும், குறைந்தபட்சம், அது வலிக்காது.

மருத்துவரீதியாக பர்சே என குறிப்பிடப்படும் இந்த பையில் அழற்சி ஏற்படும் போது, அது பர்சிடிஸ் எனப்படும். குறிப்பு: பர்சிடிஸ்ஸில் 'இடிஸ்' என்றால் வீக்கம் என்று பொருள். நல்ல செய்தி என்னவென்றால், அதற்கு மேல் கவனம் செலுத்தி, 48 மணி நேரத்திற்குள் சில வீட்டு வைத்தியங்களுடன் சிகிச்சை செய்தால் மூன்று வாரங்களில் அது தானாகவே சரியாகிவிடும்

**பரிகாரங்கள்: நிறுத்தி... ஓய்வெடுங்கள்**

தயவு செய்து கனமான பொருட்களை சுமப்பதை நிறுத்துங்கள், உங்கள் தோள் பட்டை மூட்டு முறுக்கும்எவ்வொரு செயலையும் தவிருங்கள். அதன் உழைப்பில் இருந்து அதற்கு முழு ஓய்வு கொடுங்கள். அது ஓய்வெடுக்கட்டும். உடலில் ஏற்படும் எந்த வலியையும் எப்போதும் மதிக்க வேண்டும், உடலில் எந்த வலியும் ஏற்படாமல் இருப்பது நல்ல ஆரோக்கியத்தின் அறிகுறிகளில் ஒன்று என்று இயற்கை மருத்துவம் கூறுகிறது. உடல் வலி மேல் கவனம் செலுத்துவது முக்கியம்.

உதவிக்குறிப்பு: தோள் பட்டைக்கு பரிந்துரைக்கப்பட்ட உடற்பயிற்சிகள் தேவை, ஆனால் வலி குறைந்த பின் நான்கு



அல்லது ஐந்து நாட்களுக்குப் பிறகு மட்டுமே செய்ய வேண்டும்.

### ஐஸ் வையுங்கள்

வீக்கம் இருந்தால் அல்லது தொடுவதற்கு சூடாக இருந்தால், ஒரு கைக்குட்டையில் சில ஐஸ் கட்டிகளை வைத்து, அதை நீங்கள் தாங்கும் வரை மூட்டுகளில் வைக்கவும். பின்னர் அதை எடுத்து மீண்டும் வைக்கவும், 10 நிமிடம் வைத்து, 10 நிமிடங்களுக்கு ஓய்வு கொடுத்து, சுழற்சியை மீண்டும் தொடரவும்.

### குளிர் மற்றும் வெப்பம்

பின்னர், வீக்கம் மற்றும் வலி குறைந்து, அது சூடாக இல்லாமல் இருந்தால், குளிர் மற்றும் வெப்ப சிகிச்சையை மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர் - 10 நிமிடம் குளிர், 10 நிமிடம் வெப்பம். ஆரம்பத்தில், சூடான தண்ணீர் பையை ஒரு துண்டில் சுற்றி வைக்கவும். உங்கள் துயர பட்டியலில் தோளில் தீக்காயத்தையும் சேர்க்க தேவையில்லை.

### விழுங்குவதற்கு மாத்திரைகள்

அழற்சி எதிர்ப்பு மருந்துகளுக்கு உங்களுக்கு ஒவ்வாமை இல்லை என்றால், இப்யூபுரூஃபன் அல்லது ஆஸ்பிரின் எடுத்துக் கொள்ளுங்கள்.



படிப்படியான வெளியீடும் நேர-வெளியீட்டு ஆஸ்பிரின், அவற்றை நீங்கள் அடிக்கடி எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்பதை உறுதி செய்கிறது. உங்களுக்கு வயிற்று புண்கள் இருந்தால், என்ட்ரிக்-கோடட் ஆஸ்பிரின் சாப்பிடுவது சரியா என்பதை உங்கள் மருத்துவரிடம் சரிபார்க்கவும். இல்லையெனில், எந்த மேற்பூச்சு கிரீம் புண் இடத்தில் தேய்க்கலாம் என்று கேளுங்கள். படுக்கை நேரத்தில் மாத்திரையை எடுத்துக் கொள்ளுங்கள்.

### ஆமணக்கு எண்ணெய்

ஒரு பாட்டில் ஆமணக்கு எண்ணெயைப் பெறுங்கள். இது அழற்சி எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது. மூட்டுக்கு மேல் மெதுவாக தேய்க்கவும். அதன் மீது ஒரு சூடான துணியை வைக்கவும்.

### தாழ்வாக ஆட்டுங்கள்

வலி குறையும் போது, முக்கிய பகுதிகளில் சில தசைகளை வலுப்படுத்தத் தொடங்குங்கள். இந்த சிறந்த பயிற்சியை செய்யுங்கள்: உங்கள் நல்ல கையை ஒரு நாற்காலியின் கையில் வைத்து, சிறிது முன்னோக்கி வளைந்து, பாதிக்கப்பட்ட கையை தளர்வாக கீழ்நோக்கி தொங்க விடவும், பின்னர் மெதுவாக கையை முன்னும் பின்னுமாக இரண்டு முறை ஆட்டுங்கள். பின்வரும் வாரங்களில் 10 முதல் 20 மடங்கு அதை அதிகரிக்கவும். ஒவ்வொரு கையிலும் 20 முறை செய்யுங்கள். இது ஒரு நல்ல தடுப்பு நடவடிக்கை.

### சுவரில் நடக்கவும்

உங்கள் பாதிக்கப்பட்ட பக்கத்துடன் சுவரை ஒட்டி நிற்கவும். இப்போது, விரல் நுனியை உங்களால் முடிந்தவரை சுவரில் மேலே நடக்க செய்யுங்கள். நீட்சி யை உணருவது முக்கியமல்ல, ஏனெனில் நீட்சியால் வலி வரலாம். நீங்கள் வசதியாக அடையக்கூடிய தூரத்திற்கு அதைச் செய்வது முக்கியம். ஒவ்வொரு பக்கத்திற்கும் இரண்டு முறை செய்யுங்கள்.

பின்னர், பின்வரும் வாரங்களில் 20 நடைகளுக்கு அதிகரிக்கவும். உறைந்த தோள்பட்டைக்கும் இது பயனுள்ளதாக இருக்கும்.

### மீண்டும் நிகழுமா?

எல்லோர் மனதிலும் உள்ள கேள்வி,அது மீண்டும் நிகழுமா? ஆம், நிகழலாம். எனவே, எதிர்காலத்தில் இது போன்ற அத்தியாயங்களைத் தடுக்க பயிற்சிகளைச் செய்யுங்கள். அந்த தசைகளை வலுப்படுத்துங்கள். தோள்களை அதிகமாகப் பயன் படுத்தாதீர்கள் - எப்போதும் அதிக எடை தூக்குதல் வேண்டாம். சில பயனுள்ள பரிந்துரைகள்:

“உங்கள் மொபைல் போனில் ஹேண்ட்ஸ்-ஃப்ரீ பாகங்கள் பயன்படுத்தவும். மிகவும் தனிப்பட்ட உரையாடலாக இல்லாவிட்டால், மொபைலை ஸ்பீக்கர் போனில் வைக்கவும்.

- ❖ தினமும் உங்கள் தோள்களை மெதுவாக மசாஜ் செய்யுங்கள் - இதில் உடல் மற்றும் உளவியல் நன்மைகள் உள்ளன.
- ❖ மன அழுத்தத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள் அல்லது மன அழுத்தத்தை உருவாக்காதீர்கள். அடக்கப்பட்ட அழுத்தம், கோபம் மற்றும் வெறுப்பு ஆகியவை தோள்பட்டை வலியை ஏற்படுத்தும்.
- ❖ நீங்கள் காப்ஸ்யூல்களில் குளுக்கோசமைன் அல்லது ஒமேகா-3 கொழுப்பு அமிலங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமா என்பதை உங்கள் மருத்துவரிடம் சரிபார்க்கவும். சால்மன், டுனா, அக்ரூட் பருப்புகள், ஆளி விதைகள், சியா விதைகள், கொய்யா போன்ற ஒமேகா-3 நிறைந்த உணவுகளைச் சேர்த்து கொள்ளவும்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

**RC சிதம்பரம் சென்ட்ரல்** — RID 2981



அரசு மருத்துவக் கல்லூரி, மருத்துவ மனைக்குப் பத்துக் குளுக்கோ மீட்டர்கள் அளிக்கப் பட்டன. நோயாளி களுடைய ரத்தச் சர்க்கரை அளவைப் பரிசோதிக்க மருத்து வர்களுக்கு இவை உதவும்.

**RC காம்காவ்ன்** — RID 3030

DG ஆனந்த் ஜூன்ஜூனுவாலா பிறந்த நாளான அக்டோபர் 13ஐக் கொண்டாடும் வகையில் ஒரே நாளில் ஏழு திட்டங்கள் நிறைவுசெய்யப் பட்டன.




**RC மதுரை சங்கமம்** — RID 3000



சங்கத் தலைவர் வாஞ்சிநாதன், முன்னிலையில் புளியங்குளம் அரசு பள்ளிக்கு ரூ.70,000 மதிப்புள்ள மேசை, நாற்காலிகள் வழங்கப்பட்டன.

**RC சூரத் ஈஸ்ட்** — RID 3060

இரண்டு புற்றுநோய்ப் பரிசோதனை முகாம்களில் சுமார் 500 பேர் பலன் பெற்றார்கள். இங்கு மார்பக ஸ்கான், மாமோகிராஃபி PAP ஸ்மியர், PSA பரிசோதனைகள், பல் பரிசோதனை ஆகியவை செய்யப்பட்டன.



**RC கஜியாபாத் நார்த்** — RID 3012




பிணங்களை வைக்கும் இரண்டு உறைவிப்பான் பெட்டிகள் அரசு நலத்துறைக்குக் கொடையளிக் கப்பட்டன. தலைமை மருத்துவ அலுவலர் Dr பவதோஷ் சங்கதர் பெற்றுக்கொண்டார்.

**RC பிவானி டௌன்-டவுன்** — RID 3090

Rtn மயாங்க் சுக் தலைமையில் இயங்கும் மருத்துவ மனையில் 50க்கும் மேற்பட்ட நபர்களுக்கு ரத்தச் சர்க்கரைப் பரிசோதனைகள் செய்யப்பட்டன.



# செய்திகள்

## RC **மீரட் காஸ்மோஸ்** — RID 3100




சர்தனா கிராமத்தில் சங்கத் தலைவர் வர்துல் அகர்வால் தலைமையில் ஒரு தொடக்கப் பள்ளி வளாகத்தைத் தூய்மைப்படுத்தி மரம் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

## RC **மும்பை பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ்** — RID 3141

RCC மலிபடா, வடா, பால்கர் நிறுவலின்போது, ஜில்லாப் பரிஷத் பள்ளி ஒன்றைச் சேர்ந்த பழங்குடியின மாணவர்களுக்கு 15 மிதிவண்டிகள் 100 சூரிய ஒளிப்படிப்பு விளக்குகள் வழங்கப்பட்டன.



## RC **பூனா மிட்-டவுன்** — RID 3131



சேவாசதன் திலாசா கார்யஷாலா-வில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு நடைபெற்ற நல முகாமில் Rtn டாக்டர் வால்வ்ஹாங்கர், நோயாளிகளைப் பரிசோதித்தார்கள்.

## RC **தடெபள்ளை** — RID 3150

PDG ரத்னா பிரபாகர், RCC உறுப்பினர்கள் முன்னிலையில், மெல்லம்புடி கிராமத்தில் ஓர் அங்கன் வாடிக்கு ரூ.40,000 மதிப்புள்ள பத்து காங்கிரீட் இருக்கைகள் கொடையளித்தது.



## RC **வாய்** — RID 3132



உலக ஜூனோசிஸ் நாளை முன்னிட்டு, வாய் நகரில் உள்ள கால்நடை மருத்துவ மனையில் 60க்கும் மேற் பட்ட தெரு நாய்களுக்கு ராபிஸ் தடுப்பு ஊசி போடப்பட்டது.

## RC **குல்பார்கா** — RID 3160

யுனானி மருத்துவ மனைக்கு அருகில் உள்ள தொழுநோய்க் குடியிருப்பில் தொழு நோயாளிகள், அவர்களுடைய குடும்பங்களுக்கு இனிப்புகள், பழங்கள் வழங்கப் பட்டன.



## RC **கஜேந்திரகாட்** — RID 3170



Rtn டாக்டர் T H சங்கர் வழிநடத்திய பல் பரிசோதனை முகாமில் 1,000 மாணவிகள் பரிசோதிக்கப் பட்டனர்.

## RC **மேட்டுப்பாளையம் பிரைம்** — RID 3203

கவுண்டம்பாளையம் லட்சுமி மருத்துவ மனை ஆதரவுடன் நடைபெற்ற இதயப் பரிசோதனை முகாமில் 200 பேருக்கு ECG, எக்கோ, இரத்தப் பரிசோதனைகள் செய்யப்பட்டன.



## RC **சங்கரநாராயணா** — RID 3182




இந்தச் சங்கம் மாவினகொட்லு அங்கன்வாடி கேந்த்ரா-வுக்கு LED TV வழங்கியது.

## RC **சுல்தான் பதெரி** — RID 3204

திருப்பூர் சங்கங்கள் நடத்திய பைக் பேரணி ஒன்றின்போது, RC திருப்பூர் நார்த் உடன் சேர்ந்து ஒரு தொடக்கப் பள்ளிக்கு ஊஞ்சல் கொடையளிக் கப்பட்டது.



## RC **கோயம்பத்தூர் மொனார்க்ஸ்** — RID 3201



Rtn குருமூர்த்தி விக்னேஷ் ஆதரவுடன், போத்தனூரில் உள்ள முதியோர், ஆதரவற்றோர் இல்லம் ஒன்றுக்கு ரூ.10,000 மதிப்புள்ள மளிகைப் பொருட்கள் கொடையளிக்கப் பட்டன.

## RC **செங்கன்னூர்** — RID 3211

செங்கன்னூர் MMAR மையப் பள்ளியில் போதை மருந்து ஆபத்துபற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் 500 மாணவர்கள் பங்கு பெற்றனர்.



# செய்திகள்

## RC **சிவகாசி** — RID 3212



தீபாவளியை முன்னிட்டு, மாற்றுத் திறனாளி ஒருவர் தன் குடும்பத்துடன் பண்டிகையைக் கொண்டாட ரூ.2,000 மதிப்புள்ள மளிகைப் பொருட்கள், அரிசிப் பைகள் வழங்கப்பட்டன.

## RC **கயா சிட்டி** — RID 3250

பழங்குடியின மாணவி ஊர்மிளா குமாரியுடைய செவிலியர் படிப்புக்கான கட்டணம் ரூ.70,000, மற்றும், BP இயந்திரம், ஸ்டெதாஸ் கோப், முதலுதவிப் பொதிகளும் அவருக்குக் வழங்கப் பட்டன.



## RC **வேலூர் ஃபோர்ட்** — RID 3231



ஸ்ரீ நாராயணி மருத்துவமனை, ஆக்சிலியம் கல்லூரி, JP பல் மருந்தகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட முகாமில் சுமார் 590 மாணவிகள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

## RC **ரூர்கேலா ரிவர்சைட்** — RID 3261

வயது வந்தோர் எழுத்தறிவுப் பள்ளிகள் இரண்டில் படித்தோருக்குப் பயிற்சி நிறைவுச் சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப் பட்டன. DGE மஞ்சித் சிங் அரோரா, DGE ஜெயஸ்ரீ மஹந்தி (RID 3262) இந்த விழாவில் பங்கேற்றனர்.



## RC **ஆர்ச் சிட்டி மெட்ராஸ்** — RID 3232



சங்கத் தலைவர் சுகந்தி கண்ணன், பிற உறுப்பினர்கள் முன்னிலையில் DG நந்தகுமார் சாய் இல்லம் என்ற முதியோர் இல்லத்துக்கு ரூ.6 லட்சம் மதிப்புள்ள வேனை வழங்கினார்.

## RC **புவனேஸ்வர் மெடோஸ்** — RID 3262

11 மாணவிகளுக்கு அரசுக் கல்லூரிகளில் சேர்வதற்கான கல்வி உதவித் தொகைகள் வழங்கப் பட்டன. DG பிரபுதத்தா சுபுதி, நிகழ்ச்சியில் பங்கேற்றார்.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# வர்ணம் பூச வேண்டுமா அல்லது...

TCA ஸ்ரீனிவாச ராகவன்

எந்த ஒரு இடமாக இருந்தாலும் அங்குள்ள அனைத்து வீடுகளுக்கும் ஏதாவது ஒரு காலகட்டத்தில் சுண்ணாம்பு அடித்து வர்ணம் பூச வேண்டும். ஆனால், இந்தியாவின் பருவநிலை காரணமாக இது ஒரு பெரும் பிரச்னையாகவே இருந்து வருகிறது. வடக்கு மற்றும் மத்திய இந்தியாவில் அதிக அளவில் தூசுகள் வெளிப்பாடு காரணமாக வீட்டின் சுவர்கள் பழுப்பு நிறமாக மாறிவிடுகின்றன. நாட்டின் தெற்கு, மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அதிக ஈரப்பதம் காரணமாக சுவர்கள் சாம்பல் நிறமாக மாறிவிடுகின்றன. மேலும் சில இடங்களில் சுவர்களில் ஈரக்கசிவும் ஏற்படுகின்றன. இவை தவிர வட இந்தியாவில் அவ்வப்போது பூமி அதிர்ச்சி ஏற்படுவதால் வீடுகளில் சுவர்களின் ஓரங்களில் கண்ணுக்குத் தெரியாமல் விரிசல்கள் ஏற்படுகின்றன. மூன்று நாட்கள் தொடர் மழை பெய்தால் போதும் வீட்டின் சுவர்களில் ஈரப்பதம் திட்டு திட்டுகளாக உருவாகிவிடும். சுவிட்சு போர்டுகளுக்கு அருகில் ஈரக் கசிவு திட்டுகளாக இருந்தால், நீங்கள் மாலை வேளையில் அறையின் உள்ளே சென்று சுவிட்சு களைப் போட்டால் ஷாக் அடிக்காத குறைதான். நீங்கள் நம்பினால் நம்புங்கள். எனக்கு இரண்டு முறை இதுபோன்ற சம்பவம் நடந்தது. இது விரும்பத்தகாதது. எனவே அவ்வப்போது வீட்டை பழுது பார்ப்பது, சுண்ணாம்பு அடிப்பது, வர்ணம் பூசுவது அவசியமாகும். வீட்டுக்கு மீண்டும் சுண்ணாம்பு அடித்து வர்ணம் பூசுவது ஒரு நச்சுப்பிடித்த வேலை. அதனால்தான் மக்கள் இந்த வேலையை ஒத்திப் போட்டுக் கொண்டே வருகிறார்கள். வழக்கமாக ஒரு வீட்டுக்கு 6 அல்லது 7 ஆண்டுகள் இடைவெளியில் சுண்ணாம்பு அடித்து வர்ணம் பூசுவார்கள். வீட்டுக்கு சுண்ணாம்பு அடித்து, வர்ணம் பூசிய 3வது ஆண்டிலேயே சுவர்கள் அழுக்கு படிந்து மங்கலாக தோற்றமளிக்கும். நீங்கள் துரதிருஷ்டகாரராக இருந்தால் மூன்றாண்டு முடிவதற்கு முன்னதாகவே சுவற்றில் ஈரக் கசிவு ஏற்படும். அப்போது, ஒன்று நீங்கள் அதை சகித்துக் கொண்டு வாழவேண்டும் அல்லது சிறு சிறு பாட்ச் வேலைகளைச் செய்ய வேண்டும். இதனால் பிரச்னை ஓரளவு குறையும் என்றாலும் சுவர் களில் இரண்டுவித வர்ணம் தெரியும். இவையெல்லாம் நீங்கள் பழுது பார்ப்பு வேலைகளை எந்த அளவுக்கு நுணுக்கமாக செய்கிறீர்கள் என்பதை பொறுத்தது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னால் எனது வீட்டுக்கு வலது பக்கம் உள்ள ஒரு வீட்டை விலைக்கு வாங்கிய ஒருவர், அந்த வீட்டை ஒப்பந்ததாரர் மூலம் இடித்தார். பெரிய சுத்தியல் கொண்டு வீட்டை உடைக்க ஏறக்குறைய நான்கு மாதங்கள் ஆனது. இதனால் எங்கள் வீட்டுச் சுவர்களில் பல இடங்களில் விரிசல் ஏற்பட்டது. அவற்றை பழுது பார்க்க நாங்கள் ஒரு சிறிய தொகையை செலவழிக்க வேண்டியிருந்தது. பின்னர் இந்த ஆண்டு தொடக்கத்தில் எங்கள் வீட்டுக்கு இடது பக்கம் உள்ள வீட்டை ஒருவர் வாங்கினார். அதை சுத்தியலால் அல்லாமல் புல்டோசர் மற்றும் கனரக துளையிடும் கருவியைக் கொண்டு இரண்டு வாரங்களில் இடித்து முடித்தார்கள். ஆனால், அந்தப் பணியின்போது ஏற்பட்ட சத்தம் பயங்கரமாக இருந்தது. இந்த முறை வீட்டின் சுவர்களில் விரிசல்கள் அதிகம் ஏற்பட்டன. மேலும் பருவமழையின் காரணமாக வீட்டிலுள்ள அனைத்து அறைகளிலும் கசிவும் ஏற்பட்டது.

தற்செயலாக வீட்டிற்கு கடைசியாக சுண்ணாம்பு அடித்து வர்ணம் பூசி ஐந்து ஆண்டுகளாகிறது. இப்போது அதை எப்போது செய்வது என்று யோசித்து வருகிறோம். என்னுடன் 96 வயதான எனது தாயாரும் வசித்து வருகிறார். கடந்த முறை வீட்டில் ஏற்பட்ட விரிசல் களை சரி செய்து, சுண்ணாம்பு அடித்து வர்ணம் பூசும்போது 88 வயதான மாமியார் என்னுடன் இருந்தார். எனவே இப்போதைப் போலவே அப்போதும் சுண்ணாம்பு அடித்து வர்ணம் பூசும் வேலையை தள்ளிப்போட வேண்டியிருந்தது. ஆனால், இறுதியில் எனது மகனின் திருமணத்தை முன்னிட்டு மீண்டும் சுண்ணாம்பு அடித்து வர்ணம் பூச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால், தள்ளிப்போனதற்கு நன்றி. ஒரு மாதத்தில் முடிய வேண்டிய வேலையை செய்து முடிக்க இரண்டரை மாதங்களான நேரத்தில், அந்த நாட்களில் எனக்கு ஏற்பட்ட துயரத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. எனது புத்தகங்கள் மூடப்பட்ட அலமாரிக்குள் வைக்கப் பட்டிருந்தாலும் அவற்றை அடிக்கடி தூசி தட்ட வேண்டியிருந்தது.

இதில் நேரம் குறித்த கேள்வியும் உள்ளது. நான்கு பருவமழைக்காலங்களில் இதைச் செய்ய முடியாது. வட இந்தியாவில் மூன்று குளிர்கால மாதங்களில் இதைச் செய்வது சாத்தியமில்லை. இந்த ஏழு மாதங்களில் சுண்ணாம்பு அடித்து வர்ணம் பூசினால் உலர் வதற்கு நீண்டநாளாகும். அதாவது பிப்ரவரி மாதத்திலிருந்து ஜூன் மாதத்திற்குள்தான் இதைச் செய்ய வேண்டும். எனவே நான் முக்கிய முடிவை எடுக்க வேண்டும். அடுத்த ஆண்டு பிப்ரவரியில் நான் அதைச் செய்ய வேண்டுமா? அல்லது 2024ம் ஆண்டு எனது தாயார், என்னுடைய சகோதரி வீட்டுக்குச் செல்லும் வரை காத்திருக்க வேண்டுமா? எனது தாயாரிடமே கேட்டுவிடலாம் என்று நினைக்கிறேன். இது போன்ற கடுமையான முடிவுகளை அவர்களைத் தவிர வேறு யாரால் எடுக்க முடியும்? ■

# செய்தித் துளிகள்



**காதில் நோய்த் தொற்றுகளைக் குணப்படுத்தும் ஹெட்ஃபோன்**
*சான் டியாகோ-வைச் சேர்ந்த லியான்னெ ஃபேன் (14) காதில் நோய்த் தொற்றுகளைக் குணப்படுத்தும் ஹெட்ஃபோனை வடிவமைத்து அமெரிக்காவின் மிகச் சிறந்த இளம் அறிவியலாளர் விருதை வென்றுள்ளார். ஃபின்சென் ஹெட்ஃபோன்கள் என்ற இந்தக் குறைந்த விலைக் கருவி இயந்திரக் கற்றல், நீல விளக்குச் சிகிச்சையைப் பயன்படுத்தி நடுக் காது நோய்த் தொற்றுகளைக் கண்டறிந்து, குணப்படுத்துகிறது, குழந்தைகளில் 60% வரை கேட்டல் திறன் இழப்பைத் தடுக்கிறது.*



**மனச் சோர்வுக்கு மகிழ்ச்சியான பரிந்துரைச் சீட்டு**
*இங்கிலாந்தின் தேசிய நலச் சேவைகளின் சமூகப் பரிந்துரைத்தல் திட்டத்தின்கீழ், 10 பகுதிகளைச் சேர்ந்த மருத்துவர்கள் பதற்றம், மனச் சோர்வு, சினப் பிரச்சனைகளால் துன்பப்படும் பதின்பருவத்தினருக்கு, அலைச் சறுக்கு, உருளைச் சறுக்கு, தோட்டம் போடுதல் போன்றவற்றைப் பரிந்துரைக்கலாம். இதில் பங்கேற்போரை லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி ஆய்வாளர்கள் இந்தச் செயல்பாடுகள் அவர்களுடைய மன நலனை மேம்படுத்து கின்றனவா என்று பார்ப்பார்கள்.*



**ஆட்டோவில் செல்லும் அமெரிக்கா பெண்மணிகள்**
*நான்கு அமெரிக்க அரசியல் நிபுணர்கள் தில்லியில் தங்கள் உள்ளூர் வேலை பயணங்களுக்கு குண்டு துளைக்காத வாகனங்களுக்கு பதிலாக ஆட்டோ ரிக்ஷாக்களை உபயோகிக்கின்றனர். இந்த செயல் வேடிக்கைக்காக அல்ல மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கவேண்டும் என்பதற்காக என்று கூறுகின்றனர்.*



**பிளாஸ்டிக்கை மறுசுழற்சி செய்யும் முகாம்**
*ஈந்தோவெனில் உள்ள வடிவமைப்புக் கல்விக் கழகம் வடக்கு சஹாரா முகாம் ஒன்றில் உள்ள அடைக்கலம் பெற்றோருக்குத் தங்களுடைய பிளாஸ்டிக் குப்பைகளை மறுசுழற்சி இயந்திரங்களின் உதவியுடன் அறைக்கலன்கள், செங்கற்கள், மற்ற பயனுள்ள பொருட்களாக மாற்றப் பயிற்சியளிக்கிறது.*



**புற்றுநோயை நிறுத்தும் மாத்திரை**
*"சிட்டி ஆஃப் ஹோப்" என்ற புற்றுநோய் ஆராய்ச்சி, சிகிச்சை அமைப்பு திரும்பத் திரும்ப வருகிற திடக் கட்டி களைக் கொண்ட மக்களுக்கு AOH1996 என்ற புற்றுநோய் மருந்தை உருவாக்கியுள்ளது. புற்றுநோயை நிறுத்தும் இந்த மாத்திரையைப் பெற்ற முதல் நோயாளி நன்கு உள்ளார் என்று இந்த அமைப்பு அறிவித்துள்ளது. மருத்துவப் பரிசோதனையின் இலக்குகள், இந்த மாத்திரையின் அதிகபட்சச் சகித்துக் கொள்ளப்படும் மருந்தளவைக் கண்டறிதல், தொடக்க நிலைச் செயல்திறனுக்கு அதை மதிப்பிடுதல்.*

*ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்*

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40

ADVT.

